
விலை
ரூ. 1 50
கற்பனைக்
காடு
ராஜாஜி
ராஜாஜி சொன்ன
சின்னஞ் சிறு கதைகள்
RATHI-
KALKI

நான்முகம்

சென்னை பிரதம நீதிபதி ராஜமன்னார்

தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் ஆதரவில் முதலில் வெளியாகும் நூல்கள் தென்னிந்திய மக்களுக்கு அளிக்கப் படுகின்றன. இந்த நிலையம் "போர்டு" நிலையத்தாரின் நன் கொடையால் உருவாகி வளர்ந்தது. இதன் நோக்கம் தென் னிந்திய மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் அறிவும், கலையும் நிறைந்த நூல்களைக் குறைந்த விலைக்கு வெளியிடுவதை ஆதரிப்பதே யாகும். இந்நோக்கத்தை நிறைவேற்ற "போர்டு" நிலையத்தாரும், தென்னிந்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் எழுவரும் சேர்ந்து சிந்தித்து, ஏராளமான, பல்வகையான சிறந்த நூல்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய இந்த ஸ்தாபனத்தை நிறுவினர். இதற் கென நிறுவப்பட்ட மூன்றாண்டுத் திட்டத்தின் முதல் வெளியீடு இது. கடுநடையுடைய நூல்களை வெளியிட மேற்கொள்ளவில்லை. ஆங்கிலக் கல்வி இல்லாத படித்த பாமரனுக்கும் பயன்படுமாறு எளிய நடையில் இன்பமும், பயனும் தரும் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தலே இந்த ஸ்தாபனத்தின் லட்சியமாகும்.

இலக்கிய வளம் நிறைந்த மூலநூல்களைப் பதிப்பித்தல், கலை, விஞ்ஞானப் புத்தகங்களை வெளியிடல், உலகத்திலே யுள்ள மற்ற மொழி நூல்களை மொழிபெயர்த்தல் ஆகிய வையே இந்த ஸ்தாபனம் செய்ய விரும்பும் பணிகளாகும்.

"மலிந்த விலையில் உயர்ந்த நூல்" இதுவே - தென் மொழிகள் புத்தக டிரஸ்டின் இலட்சியம். இந்த நோக்கம் எவ்வளவு தூரம் இம்முதல் வெளியீட்டால் நிறைவேறி யிருக்கிறது என்பதைப் பொதுமக்கள்தான் சொல்ல வேண்டும். இம்முயற்சியின் பயனும் வெற்றியும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகே வெளிப்படலாம். ஆனால் இத் திட்டம் உண்மையான கற்பனை நோக்குடையவர்களுக்குப் புலனாகும். இதனால் விளையக்கூடியன எண்ணிறந்தன. மலிவான இப்புத்தகங்களைத் திறமையான வகையில் தென்னிந்தியா முற்றிலும் பரப்பினால் இவை பட்டி தொட்டிகளிலுள்ள மக்கள் கரங்களிலும் தவழும். அப்போது இந்நாட்டின் உயிர்நாடி போன்ற மக்களின் வாழ்வில் இன்ப ஒளி வீசும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளுக்காகவே இந்நிலையம் ஏற்படுத்தப்பட்டதற்குத் தக்க காரணங்கள் உண்டு ஏனெ னில் இவை தென்னாட்டு மொழிகள். "தக்கணம்" என்பது பூகோள நூற்படி பழைய இந்தியாவிலே, விந்தியத்தின் தென் பாகமாகும். பண்பாட்டின்படி இந்நான்கு மொழி களையோ, அவற்றின் கிளை மொழிகளையோ பேசும் மக்களைக் கொண்ட தேசத்தைக் குறிக்கும். இம்மொழிகள் நான்கும் ஓரினத்தன என்பதில் ஐயமில்லை. "திராவிடம்" என்ற அடைமொழியைச் சேர்க்கத் தயங்குகிறேன். ஏனெனில் அது 'மொழி', 'இனம்' என்ற பொருளில் கொள்ளப் படாமல், கருத்து வேற்றுமை, அரசியல் என்ற நோக் குடன் பயன்படுத்தப்படுகிறது. இம்மொழிகளிடையே காணப்படும் ஒருமைப்பாடு தவிர, இம்மொழி பேசும் மக்க ளிடையேயும் காணப்படும் கலாசாரம் இப்பகுதியை இந்தி யாவின் ஏனைய பகுதியினின்றும் தனித்துக் காட்டுகிறது. சாதாரணமாக நாம் அறிந்துகொள்ளும் கர்நாடக சங்கீத மும் இதைத் தெளிவுபடுத்தும். அவ்வாறே இப்பகுதி களில் உள்ள சிற்பக் கலையும், கட்டடக் கலையும் தனிப்

பெருமையுடையன. மக்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், விழாக்கள் முதலியவற்றிலும் குறிப்பிடத் தக்க ஒருமைப்பாட்டைக் காண்கிறோம். இத்தனிச் சிறப்பு கள் இந்நூலகத்தாரின் வெளியீடுகளால் பிரதிபலிக்கும் என நம்புகிறேன். அத்துடன் இந்தியப் பண்பாட்டை விளக்கும் நூல்களையும், பிறநாட்டு மொழிகளில் உள்ள நூல்களின் மொழிபெயர்ப்புகளையும் வெளியிடுவதன் மூல மாக, குறுகிய வேறுபட்ட மனப்பான்மை தவிர்க்கப்படும்.

பி. வி. ராஜமன்னார்

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	துளசி மணம்	...	9
2.	உபதேச மொழிகள்	...	12
3.	வாழையின் கதை	...	13
4.	கள் வந்த கதை	...	15
5.	கல் மனம்	...	18
6.	பொங்கற் பரிசு	...	20
7.	மூக்குத்தியின் கதை	...	23
8.	நெட்டிப் பூமாலை	...	27
9.	சுதரிசனத் தைலம்	...	29
10.	பட்டணம் போவோம்	...	32
11.	கோழியின் விசாரம்	...	36
12.	ராஜா வேஷம்	...	39
13.	ஒரு தவளைக் கதை	...	42
14.	மடியில் மூட்டை	...	45
15.	கோர்ட்டில் குருவிகள்	...	48
16.	சொறி நாய்	...	50
17.	உழைத்துப் பிழை	...	53
18.	வரம் கேட்ட குதிரை	...	57
19.	வேம்பின் தவம்	...	59
20.	வள்ளி தப்பினாள்	...	63
21.	பூனையும் குரங்கும்	...	66
22.	அணுகுண்டைப்பற்றி அல்ல	...	69
23.	புலியும் உதவும்	...	73
24.	கழுதையும் மூட்டையும்	...	77
25.	'உப்புக்காக நக்குகிறது'	...	81
26.	ஸோஷல் ஸர்வீஸ்	...	82
27.	கூத்தன் தன் கூத்து	...	85
28.	பிரிவினைக் கதை	...	88
29.	பூச்சியும் புழுவும்	...	91
30.	சாமியார் தோற்றார்	...	95
31.	குச்சுப்பாளையத்துக் குழந்தைகள்	...	98

32. ஊமைப் பிராணி ... 100
33. மூக்குக் கண்ணுடி ... 104
34. பூனைக் கதை ... 107
35. பல்லாண்டு பாடின செடிகள் ... 110
36. அறியாவூர்க் கதை ... 113
37. புத்தி வந்தது ... 116
38. ஆயுத பூஜை ... 119
39. அன்பிலே பொறுமை ... 121
40. இல்லறம் ... 124
41. எலியின் முக்தி ... 126
42. சோம்பேறிச் சூரியன் ... 128
43. நெய்ச் சாமியார் ... 131
44. பூவும் பூச்சியும் புழுவும் ... 133
45. மார்ஜாலம் ... 136
46. வீரசிம்மன் ... 139
47. திம்மராயனுடைய திட்டம் ... 142
48. முத்தின் கதை ... 145
49. வாழைப்பாடிக் கதை ... 147
50. கிளியின் சந்தேகம் ... 152
51. சகவாச தோஷம் ... 155
52. எருமைப் பால் ... 158
53. கொசுவின் கதை ... 160
54 செல்லக் குழந்தை ... 163
55 கற்றுக்கொண்டு வா ... 167
56 குருவியே கெட்டி ... 170
57. அம்மன் அருள் ... 173
58. தேகப் பயிற்சி வாத்தியார் ... 177
59. பாம்பைப் பிடித்த பூனை ... 179
60. குழந்தைகளுக்குப் புரியும் ... 182
61. வண்டி ஓட்டிய தெய்வம் ... 184
62. பூசனிக் கொடி ... 186

முன்னுரை

கண்ணன் என்ற குழந்தைப் பத்திரிகைக்கு 'பூசனிக் கொடி'க் கதையை எழுதியதும் ஒன்றன் பின் ஒன்ருக இந்தக் கற்பனை உபதேசக் கதைகள் தோன்றின. அவற்றை வாரந்தோறும் "கல்கி" பத்திரிகையில் வெளியிட்டும் வானெலியில் சொல்லியும் வந்தேன். இந்தக் கதைகளைப் புத்தக உருவமாக வெளியிடப் பாரி நிலையத்தார் முன்வந்துள்ளார். மக்களுக்குப் பயன்படலாம். கற்பனையும் உபதேசமும் ஓரளவு வேடிக்கையும் கலந்த புதர்க் காடாக வைத்துக் கொள்ளலாம். இந்தக் காட்டில் விஷ ஜந்துக்கள் இல்லை. பயப்படாமல் பிரவேசிக்கலாம்.

ராஜகோபாலாச்சாரி

துளசி மணம்

மதுராபுரியில் ஒரு நந்தவனம். நந்தவனத்தில் துளசிச் செடிகளும் ரோஜாச்செடிகளும் இன்னும் பல வகையும் அடர்ந்து வளர்ந்து வந்தன.

விஷ்ணு பக்தர் ஒருவர் வந்து தினமும் குடலை நிறையத் துளசி பறித்து எடுத்துக் கொண்டு போவார். அரமனைப் பெண்கள் ரோஜாப் பூவைப் பறித்துப் போவார்கள்.

துளசிச் செடியைப் பார்த்து ரோஜாப் பூ கொஞ்சம் திமிரோடு பேசிற்று: "ஏன் ராஜகுமாரிகள் உன்னை நெருங்குவதில்லை? வெறும் இலையாகப் படர்ந்திருக்கிறாய்; சிவப்பாகப் பூப் பூத்தாயானால் உன்னையும் லட்சியம் செய்வார்கள்" என்றது.

"ஏழைப் பிராமணன் பக்தியே எனக்குப் போதும். சுவாமியின் பாதத்தில் என் கொழுந்துகள் போய்ச் சேருகின்றன. அதைவிட என்ன வேண்டும்?" என்றது துளசி.

ராஜகுமாரியின் தலையில் கூந்தலை அலங்கரிக்கும் கௌரவம் பெரிதென்று ரோஜாச் செடி நினைத்தது.


RATHI
KALKI

'இந்தத் துளசிச் செடிக்குத் தெரிந்தது இவ்வளவு தான்' என்று அதற்கு மேல் ரோஜாச் செடி பேச வில்லை.

*　　　*　　　*

ஒரு நாள் ராஜாவினுடைய கடைசிக் குமாரத்தி—சிறுகுழந்தை—தானே பூப்பறிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு நந்தவனத்துக்கு வந்தாள். பூப் பறிக்கும் போது கையில் முள் தைத்தது. வலி பொறுக்க முடியாமல் அழுதாள். கூட வந்தவர்கள் குழந்தையை அரவணைத்து அரமனைக்கு எடுத்துப் போனார்கள்.

ராஜாவுக்குத் தன் அருமைக் குழந்தையின் விரலில் ரத்தத்தைப் பார்த்து வெகுகோபம் உண்டாயிற்று. ரோஜாச் செடியில் முள் இருப்பது அரசனுக்குத் தெரியாது. அவன் தோட்டத்துக்குப் போவதில்லை. போனாலும் செடிகளைக் கவனித்ததில்லை. ரோஜா மாலைகளைத்தான் கண்டவன்.

"இந்த முள்ச் செடியிலா ரோஜாப்பூ உண்டாகிறது. அது இனி நம்முடைய நந்தவனத்தில் வேண்டியதில்லை. பிடுங்கி எறிந்து விடுங்கள்!" என்று உத்தர விட்டான்.

ராஜா முரட்டுத் தனக்காரர். ஆனபடியால் யாரும் தடை சொல்லவில்லை. சேவகர்கள் நந்தவனத்திலிருந்த ரோஜாச் செடிகளை யெல்லாம் பிடுங்கி எறிந்துவிட்டு அரசனுக்குத் தெரிவித்தார்கள். அவனும் "ரொம்ப சரி" என்று சொல்லிவிட்டான்.

துளசிச் செடி மட்டும் நந்தவனத்தில் நின்றது. "ஐயோ பாவம்!" என்று அரமனையை நம்பிய ரோஜாச்

செடியின் கதியைக் கண்டு துயரப்பட்டது. வழக்கம் போல் துளசி பறிக்க வந்தவர் 'இன்று என்ன துளசி அதிக வாசனையாக இருக்கிறதே!' என்று வியந்தார்.

துளசியினுடைய துயரந்தான் அப்படி மணமாக வீசுகிறது என்று அவருக்குத் தெரியாது!

உபதேச மொழிகள்

திருமாலிருஞ் சோலையில் ஒரு சந்யாசி. அவரிடம் மிகப்பிரீதி கொண்ட சிஷ்யர்களில் ஒருவன் செவிடு. மற்றச் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யும்போது தன் காதில் கேட்கவில்லையே என்று குருவிடம் ஒரு நாள் சொல்லிக் கொண்டான். "மற்றவர்களுக்கு நீங்கள் உபதேசம் செய்யுங்கள். உங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதே எனக்குப் போதும்" என்றான் இந்தச் சீடன்.

"மகனே, நீ சொன்னது எனக்கு ரொம்பத் திருப்தி தருகிறது. ஆனால் உனக்கும் தினம் ஒரு வாக்கியமாக ஓலையில் எழுதித் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு நீ உன் உள்ளத்தை வளர்ப்பாயாக" என்றார்.

அப்படியே செய்து வந்தார். தினம் ஒரு ஓலை பெற்றுக்கொண்டு சீடன் மிகப் பக்தியாக அவற்றைப் பத்திரமாகக் கட்டி வைத்தான். மூன்று ஆண்டு கழிந்தது. குருவானவர் மேலுலகம் சென்றுவிட்டார். சீடன் தான் சேமித்து வைத்த பெருஞ் சுவடியை அச்சுக்குக் கொடுத்துப் புஸ்தகம் வெளியிட்டான்.

மற்றச் சீடர்கள் 'நம்முடைய குருவின் உபதேசத்தை இவன் ஒருவனாக எப்படி வெளியிடலாம்' என்று ஆட்சேபித்து ராஜாவிடம் விவகாரம் கொண்டு போனார் கள். 'பிரசுரிக்கக் கூடாது' என்று ராஜா உத்தரவிட் டான். செவிட்டுச் சீடன், "சுவடி என்னிடம் இருக் கிறது. நான் வேறு ஒருவருக்கும் கொடுக்கமாட்டேன்" என்றான். ஊர் இரண்டு கட்சியாய்ப் போய் விட்டது.

'நல்ல உபதேசங்கள், பிற்காலத்துக்குப் பயன் படும் பொருள், வீணாய்ப் போயிற்றே' என்று ஒரு கட்சி யின் வாதம்.

'குருவினுடைய உபதேச மொழிகளில் இவனுக்கு ஏது பிரசுரிக்கும் உரிமை!' என்று மற்றொரு கட்சி.

"நான் செவிடனா யிருந்ததால்தானே இந்த உபதேச மொழிகள் பிறந்தன!" என்று அந்தச் சீடன் வாதாடிக்கொண்டே யிருந்தான். இது சிலருக்கு நியாயமாகவே பட்டது.

வாதம் முடிவதற்குள் ஓலைச் சுவடிகள் கறையா னுக்கு இரையாகி விட்டன. அதன் மேல் சண்டையும் நின்றது!

சந்யாசியை ஊரார் மறந்துவிட்டார்கள்!

வாழையின் கதை

ஒரு வாழை மரத்தின்மேல் சிறு அணில் ஒன்று ஏறி விளையாடிக் கொண்டு பூச்சிகளையும் தேடிக்கொண் டிருந்தது.

"உன் தாயார் எங்கே?" என்று வாழை மரம் அதைக் கேட்டது.

"எனக்குத் தாயார் ஒருவரும் இல்லையே" என்று சொல்லிற்று அணில். தன் பாட்டுக்கு ஜீவனம் நடத்திக்கொண்டிருந்தபடியால், தாயை முற்றிலும் மறந்து விட்டிருந்தது அணில்.

"உன்னைப் பெற்ற தாயை இப்படி நீ மறந்து விடலாமா? என் குழந்தைகளைப் பார். என் வேரோடு அண்டி வளர்ந்து வருகின்றன. அப்படி நீயும் இருக்கலாகாதா!" என்றது வாழை மரம்.

"என்னவோ பேசுகிறாய். தாயாவது மகனாவது மகளாவது. இன்னும் கொஞ்சநாள் பொறுத்திரு நீ. உனக்கு ஒரு மகன் பிறக்கப் போகிறான். அவன் உன் உயிருக்கே பகையாவான்" என்று அணில் ஜோசியம் சொல்லிற்று.

வாழை மரத்துக்குக் கவலை உண்டாய் விட்டது.

* * *

சில நாள் கழித்து, வாழை மரத்தில் நல்ல வாழைக் குலை வளர்ந்து முற்றிற்று. கார்த்தவீரியார்ஜுனன் கைகளைப்போல் பழத்துக்குமேல் பழமாக வளர்ந்தது. தாய் மரத்துக்கு மகன் வளர்வதைப் பார்த்து ஆனந்தம் வளர்ந்துகொண்டே போயிற்று.

* * *

அணில் வந்து மரத்தைக் கேட்டது: "மரமே, சுகமா?" என்றது.

"என் மகனைப் பார். அவனுடைய தங்க நிறத்தைப் பார். என் சுகத்துக்கு என்ன குறைவு!" என்றது வாழை மரம்.

* * *

'அந்தத் துஷ்ட அணில் சொன்னது உண்மைதானே? இந்த மகனோடு என் வாழ்க்கை முடிந்து போகும்போல் தோன்றுகிறது. வயிற்றில் என்னவோ பண்ணுகிறது. ஆனாலும் என்ன! இப்பேர்ப்பட்ட மகன் பிறந்த பிறகு எனக்கு வேறு என்ன வேண்டும்!' என்று சொல்லிவிட்டு மரம் சாய்ந்துபோக ஆரம்பித்தது.

தோட்டக்காரன் வாழைக் குலையை வெட்டிக் கொண்டு போய்விட்டான். பிறகு வாடிப்போன மரத்தையும் வெட்டிச் சுத்தப்படுத்தி விட்டான்.

கள் வந்த கதை

ரிஷிகளெல்லாம் கூடி ஒரு மரத்தைச் சிருஷ்டி செய்தார்கள். தங்களுடைய அறிவைப் பின்வரும் மக்கட் சந்ததிக்காக எழுதி வைப்பதற்கு ஓலைகளைத் தரும் ஒரு மரத்தைத் தோற்றுவித்தார்கள். அந்த ஓலைகளில் மந்திரங்களையும், உபதேசங்களையும், தரும சாஸ்திரங்களையும் நன்றாக எழுதி வைத்து வந்தார்கள். வேதம், உபநிஷதம் மனுஸ்ம்ருதி முதலிய கிரந்தங்களை எழுத்தாணியைக்கொண்டு ஓலைகளில் எழுதினார்கள்.

பிறகு தாங்கள் ரொம்பப் படித்தவர்கள் என்று எண்ணிக் கர்வப்படும் பண்டிதர்கள் உண்டானார்கள்.

இந்த ஆணவம் பிடித்தவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையும் பிடித்தார்கள்.

“நீ முட்டாள்! நான் கெட்டிக்காரன்!” என்று ஒருவரோடொருவர் வாதம் செய்து சண்டை போட்டார்கள்.

இதைப் பார்த்து சரஸ்வதியம்மைக்கு ரொம்பக் கோபம் வந்துவிட்டது. லக்ஷ்மீ தேவியுடன் யோசனை செய்து புலவர்களுக்கு ஓலை தரும் மரத்தைப் போதை உண்டாகும் மரமாகச் செய்துவிட்டாள். ஓலைப் புஸ்தகங்களைப் படித்தால் எவ்வளவு அறிவு உண்டாகி வந்ததோ அந்த அளவில் அறியாமையும் மயக்கமும் உண்டாக்கும் கள்ளை அதே மரத்தில் மக்கள் உண்டாக்க ஆரம்பித்தார்கள். லக்ஷ்மீ கடாக்ஷத்தால் கள்ளை இறக்கி விற்கிறவர்கள் நிறையப் பணம் சம்பாதித்தார்கள். இன்னும் கள் உண்டாக்க ஆரம்பித்தார்கள். தென்னை மரத்தையும் அவ்வாறே பயன்படுத்தினார்கள்.

“ஐயோ, என் கர்ப்பத்தை அழித்து உயிரை உறிஞ்சுகிறார்களே!” என்று மரம் அழுகிறது. அப்படி அழுகிற கண்ணீரும் கர்ப்பம் சேதித்த உயிர் நீரும் பானையில் இறங்கிக் குடிக்கிறவர்களுக்குக் கள் ஆகிறது. அதைக் குடித்து அறிவை இழந்து போதையை அடைந்து சந்தோஷப்படும் மக்களைப் பார்த்துப் பரிதாபப் படாமல் சிலர் அதை உண்டாக்கி உண்டாக்கி விற்றுப் பணம் பண்ணிப் பணக்காரர்கள் ஆகி வந்தார்கள்.

ஓலைகள் ரிஷிகளைத் தியானித்தன. “அறிவுக்குத் தோன்றினோம். போதைக்கு வளர்கிறோமே! நம் விதி

இப்படியாயிற்றே!'' என்று ஓலைகள் காற்றில் தம் துயரத்தைச் சொல்லிக்கொண்டு வீசுகின்றன.

“ தப்பிப் பிழைக்க எவ்வளவு உயரம் நீண்டு வளர்ந்தாலும், என் குழந்தைகளை எவ்வளவு உயரத்தில் வைத்துப் பாதுகாக்கப் பார்த்தாலும் இந்தப் பாவிகள் எப்படியோ ஏறி மென்னைப் பிடித்துக் கசக்கிக் கொல்லுகிறார்களே!'' என்று அழுகிறது தாயுள்ளம் படைத்த மரம்.

“ஏறுவதற்கு ஆதரவாகக் கிளைகள் விடாமல் நான் நூறு அடி வளர்ந்தாலும் இவர்கள் விடமாட்டார்களே! ஏதோ யுக்தி செய்து காலுக்கும் இடுப்புக்கும் கயிறு கட்டித் தொங்கியும் குரங்குகளைப்போல் ஏறுகிறார்களே! இது என்ன சாபம்!'' என்று அழுகிறது. “ எவ்வளவோ தவம் செய்து அறிவைப் பெற்றீர்களே! அதை இழப்பதற்கு இவ்வளவு யுக்தி செய்கிறீர்களே!'' —என்று பரிதபிக்கின்றன ஞான நூல் எழுதத் தோன்றிய ஓலைகள்.

என்ன அழுது என்ன பயன்? கள்ளை ஒழிக்க அரசாங்கத்தார் சட்டம் செய்தாலும் திருட்டுத்தனமாகச் சாராயம் சம்பாதித்துக் குடிக்கிறார்கள்

ஆகாயத்தில் ரிஷிகள் இதையெல்லாம் பார்த்து வருத்தப்படுகிறார்கள்.

“ இது சரஸ்வதி தேவியின் கோபத்தால் வந்த சாபம்'' என்றார் ஒரு ரிஷி.

“ படித்தவர்கள் ஆணவம் கொள்ளலாகாது. படிப்பின் போதையும் கள்ளின் போதையைப் போலவே'' என்றாள் லக்ஷ்மீ தேவி.

“தேங்காயை எனக்காக உடைக்கிறார்கள் மக்கள். ஆனால் ஆணவத்தை உடைக்கமாட்டோம் என்கிறார்களே! ஆணவத்தை உடைத்து உள்ளே இருக்கும் முற்றிய ஞானப் பருப்பைக் காண முயல்வதில்லை. இவர்களைவிடப் போதை அடைந்து கூத்தாடுகிறவர்களே மேல்” என்றார் கணபதி.

“நீ எப்போதும் இப்படித்தான் ஏதேனும் சொல்லுவாய்! போய்க் குளத்தங்கரையில் உட்கார்ந்து மக்களுக்கு நல்ல உபதேசம் செய். ஒரு நாளில்லாமற் போனால் ஒரு நாள் நல்ல மதி அடைவார்கள்” என்றாள் கருணைக் கடலான லக்ஷ்மீதேவி.

கல்மனம்

மதுகொண்டபள்ளிக்குச் சுவாமியார் ஒருவர் வந்தார். மிக உருக்கமாக உபந்யாசம் செய்வார். ஊருக்கு மத்தியில் பேடராய செட்டியின் செக்கு இருந்த வெளியில் ஊர் ஜனங்கள் கூடினார்கள். சுவாமியாருக்கு மரியாதை செலுத்திவிட்டு உபந்யாசம் கேட்க உட்கார்ந்தார்கள். சுவாமியார் செக்குக் கல்மேல் உட்கார்ந்துகொண்டு ஜீவகாருண்யத்தைப் பற்றி உபந்யாசம் செய்தார். ‘ஆடுகளையும் கோழிகளையும் வதம் செய்யாதீர்கள். காய்கறி உணவே நல்லது. நம் உயிர் போலவே எல்லா உயிர்களும். எல்லாப் பிராணிகளும் தேவியின் குழந்தைகள். பிள்ளைகளை இம்சித்தால் தேவி கண்ணீர் விட்டு அழுவாள். நமக்குத் துணையாக இருக்க மாட்டாள். நாம் செய்யும் பாவங்கள் தீருவதற்கு வழியில்லாமல் போகும்’ என்றெல்லாம்

சொல்லி உபந்யாசம் செய்தார். ஆனால் அந்த ஊரார் கேட்கவில்லை. வழக்கம் போலவே ஆடு கோழிகளை இம்சித்து வந்தார்கள்.

சுவாமியாருடைய பிரசங்கம் கல்லையும் கரைக்கும் படியாக இருந்தது. ஆயினும் ஜனங்கள் மனம் இரங்க வில்லை. உபந்யாசகரைச் சுமந்து கேட்ட பேடராய செட்டியின் செக்கு மட்டும் 'இனிமேல் நான் இந்த எள்ளை இம்சிக்கலாகாது. எள்ளுக்கும் உயிர் உண்டு அல்லவா?' என்று தீர்மானித்துக் கொண்டது.

அறுவடைக் காலம் வந்தது. குடியானவர்கள் ஏராளமாகச் செக்கில் ஆட்ட எள் கொண்டு வந்து கொடுத்தார்கள். பேடராய செட்டியும் தன் செக்கில் ஆட்டினான். ஆனால் ஏனோ எண்ணெய் சரியாக இறங்கவில்லை. என்ன செய்தாலும் பிண்ணாக்கில் எண்ணெய் தங்கிப் போகும்; இறங்காது. குடியானவர் களுக்குக் காரணம் விளங்கவில்லை. எள்ளின் குற்றம் எண்ணெய் சரியாகக் கொடுக்கவில்லை என்று பேடராய செட்டி சொன்னான். அடுத்த ஊர்ச் செக்கில் எண் ணெய்க்குக் குறைவு இல்லை. எப்போதும் போலவே விகிதப்படி அந்த ஊரில் செக்குக்காரன் எண்ணெய் எடுத்துத் தந்தான். பேடராய செட்டியின் வியாபாரம் கெட்டுப் போயிற்று. அவன் தன் மாடுகளை விற்று விட்டுச் சாமியாராய்ப் போக நிச்சயித்தான். போவதற்கு முன் தன் செக்கின் முன்னால் நின்று அதை வணங்கிப் பூஜை செய்தான். செக்கு சொல்லிற்று: "அண்ணே! ஏன் நம்மை விட்டு விட்டுப் போகிறாய்? வேண்டாம் - இனிமேல் சரியாக எண்ணெய் தருவேன். பயப் படாதே, நீ கொஞ்சம் ஜீவகாருண்யத்துடன் நடந்து

கொள். மாடுகளை அடிக்க வேண்டாம். மெள்ளத் தட்டிக் கொடுத்து நல்ல வார்த்தையில் ஓட்டு. ஜீவ காருண்யப் பிரசங்கத்தைக் கேட்டால் என்னுடைய கல் மனமும் இளகிப் போகிறது. பிரசங்கம் வேறு இடத்தில் போடச் சொல்'' என்று செக்கு செட்டியைக் கேட்டுக் கொண்டது.

பத்ரகாளியம்மன் கோயிலுக்குப் போய்ப் பொங்கல் வைத்து, செக்கு சொன்னபடி பேடராயசெட்டி நடந்து கொள்ளுவதாக அம்மன் முன் சத்தியம் செய்தான்.

"எனக்குக்கூட இனிமேல் பொங்கலே வையுங்கள். கோழியோ ஆடோ கொண்டு வராதீர்கள்'' என்றாள் தேவி. பூசாரியும் விஷயத்தை ஊராருக்குச் சொல்லி விட்டான்.

பிறகு எல்லாம் சரியாகப் போயிற்று. மாடுகள் அடிக்காமலேயே நன்றாக ஏரும் செக்கும் இழுத்தன. எல்லா வியாபாரமும் விவசாயமும் முன்போல நன்றாக நடந்தன. ஆனால் அதுமுதற் கொண்டு பிரசங்கங்களெல்லாம் பாவடியில் வைத்தார்கள், பேடராய செட்டி தன் செக்கடியில் வேண்டாம் என்று சொல்லி விட்டான். நெசவுக்காரர் வெகு உற்சாகத்தோடு பாவடியில் போட ஒப்புக்கொண்டார்கள்.

பொங்கற் பரிசு

குப்புசாமியின் கையில் இரண்டு ரூபாய் இருந்தது. மாதம் மாதம் தகப்பனர் அனுப்பி வந்த பணத்தில் கொஞ்சம் மிச்சம் செய்து வந்தான். சென்னைப் பட்ட

ணத்தில் பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்ந்து நான்கு மாதங்களாயிற்று. இரண்டு ரூபாய் சேர்ந்தது. இதைக்கொண்டு போய் ஏதாவது அழகான சாமான் வாங்கி ஊரில் மாமா மகள் அல்லிக்கு அனுப்ப வேண்டும் என்று சீனு பஜாரில் கடை கடையாகப் பார்த்துக் கொண்டே போனான்.

அல்லி எதை விரும்புவாள், அவளுக்கு எது பிடிக்கும், என்று யோசித்த வண்ணம் மெதுவாகக் கடைகள் ஓரம் பார்த்துக் கொண்டே சென்றான்.

கடைக்காரர்கள் "வாங்கோ—ஸார்—இதோ நல்ல பேனா—சீப்—ஸார்—பவுன்டன் பேனா" "இந்தாங்கோ சார் இருக்கிறது உங்களுக்கு வேண்டிய பிரஷ்" "இந்தாங்கோ ஸார், என்ன வேண்டும்?" "இந்தாங்கோ நல்ல ஸென்ட் தைலம். அங்கே போகாதேங்கோ" என்று அவர்கள் வழக்கம் போல் கூப்பிட்டழைத்தார்கள். குப்புசாமி சும்மா பார்த்துக் கொண்டே பேசாமல் நடந்தான். அவன் பார்த்த சாமான்களில் ஏதும் அல்லிக்குப் பிடிக்கும்படியானதாகக் காணப்படவில்லை.

" இவர் நாட்டுப்புறத்து ஆள், உங்களுக்குத் தெரியவில்லையா ?" என்று கடைக்காரர்கள் கேலி செய்தார்கள்.

ஹாஸ்டலில் போய்ச் சேர்ந்தான்.

காகிதத் தாள் எடுத்து ஒரு கடிதம் எழுதினான்.

" அல்லி! உனக்குப் பிடித்த சாமான் ஏதாவது வாங்கி அனுப்பலாம் என்று கடையெல்லாம் பார்த்தேன். ஏதும் சரியாகப் படவில்லை. என் உள்ளம் ஒன்றே உனக்கு அனுப்பக்கூடிய சாமான், அதைத்

தபாலில் அனுப்ப முடியாதே!'' என்று பொங்கலுக்குப் போய்ச் சேர ஒரு கடிதம் எழுதித் தபால் பெட்டியில் போட்டான்.

அன்பைப் போன்றது வேறு என்ன பரிசு இருக்கிறது? அதிலும் அத்தானுடைய அன்பைப் போல் வேறு எந்தப் பரிசு கடையில் வாங்கியது அல்லிக்குப் பிடிக்கும்?

கடிதத்தைத் தபால்காரன் கொண்டு வந்ததும் வாங்கிப் படித்தாள் அல்லி. கொண்டு போய் யாருக்கும் காட்டாமல் தன் பெட்டியில் துணிகளுக்குக் கீழே பத்திரமாக யாரும் காணுதபடி மூடி வைத்தாள். மறு நாளும் எடுத்துத் தனியாகப் படித்தாள். படித்து மறுபடியும் பெட்டியில் வைத்தாள். அடுத்த நாளும் அப்படியே செய்தாள்.

எப்படியோ தம்பி முத்துசாமி இதைக் கண்டு கொண்டு விட்டான். பெட்டிக்குப் பூட்டு இல்லை. ரகசியமாக எடுத்து அவனும் படித்துவிட்டுப் பெட்டியில் துணிகளுக்கு அடியில் முன்போல் வைத்து விட்டான்.

''அம்மா! அல்லிக்கு அத்தான் கடிதம் எழுதியிருக்கிருன்'' என்ருன்.

தாயார் சிரித்தாள். ''அதுவெல்லாம் உனக்கு என்னத்துக்கு? அக்காவைப் பரிகாசம் செய்யலாகாது'' என்று சொல்லி அனுப்பி விட்டாள்.

''இந்தச் சித்திரை மாதம் ஏன் அல்லிக்குக் கல்யாணம் செய்து விடக்கூடாது?'' என்று அல்லியின் தகப்பனுர் மனைவியிடம் யோசித்தார்.

"பையன் இன்னும் கொஞ்ச நாள் படிக்க வேண்டும். இதற்குள் என்ன அவசரம்?" என்ருள் குப்புசாமியின் தாயார்.

* * *

தாய் தகப்பன்மார்கள் இப்படித்தான் தள்ளிப் போடுவார்கள். அவர்களுக்கு விஷயம் தெரிகிறதில்லை. படிப்பு படிப்பு என்று ஆசைப்படுகிருர்கள். கலியாணமாய்விட்டால் படிப்பு நின்று போக வேண்டுமா? படிப்பதற்கும் இதற்கும் என்ன விரோதம்?

* * *

குப்பு அல்லியைப் பற்றியே எண்ணி எண்ணிப் படிப்பைக் கவனிக்கவில்லை. பரீட்சையில் தேறவில்லை.

அடுத்த வருஷம் கவனித்துக் கஷ்டப்பட்டுப் படித்தான். முன் வருஷம் அல்லியை நினைத்துப் படிப்பைக் கவனிக்காமலிருந்தவன், இந்த வருஷம் அல்லியை நினைத்துப் படிப்பை அதிகமாகக் கவனித்துப் படித்தான். அன்பின் வேகம் விசித்திரம். பல விதமாக வேலை செய்யும். குப்புவுக்குப் பரீட்சை பாஸ் ஆயிற்று. பெற்ருேர்கள சந்தோஷப் பட்டார்கள். அவர்களைவிட அல்லிக்கு அதிகச் சந்தோஷம். தானும் ஒரு பரீட்சை எழுதிப் பாஸ் செய்து விட்டதாக மகிழ்ந்தாள்.

மூக்குத்தியின் கதை

ராமய்யர் வீட்டுக் கூரையில் நல்ல இடம் பார்த்து இரண்டு குருவிகள் கூடுகட்டிக் கொண்டு முட்டையிட்டிருந்தன.

"தங்கமே!" என்றது ஆண் குருவி. "என்ன விஷயம்?" என்றது பெண் குருவி. "இந்த வீட்டு அம்மா ஏன் இப்படி எப்போதும் புருஷனோடு சண்டை பிடிக்கிறாள்?" என்று கேட்டது குருவி.

"எனக்கு எப்படித் தெரியும்?" என்றது பெண் குருவி. "நம் காரியம் நாம் பார்த்துக் கொண்டு போவோம்" என்றது.

"நீ எப்போதும் இப்படித்தான். உன் சுய நன்மையையே கவனித்துக் கொண்டு போகிறாய். இந்த ராமய்ய பிராமணனுக்கு நாம் உதவி செய்ய வேண்டாமா?" என்றது ஆண் குருவி.

"நீ உதவி செய்யப் போகிறாய், பார்க்கலாம். சும்மா அதிகப் பிரசங்கம் செய்யாதே. நம் கூடண்டை பூனை வராமல் பார்த்துக் கொள். அதுவே போதும்" என்றது பெட்டை.

* * *

எங்கேயோ ஒரு குப்பையில் ஒரு வைரக் கல் மூக்குத்தி கிடந்தது. அதைத் தன் மூக்கில் கொத்தி எடுத்து வந்தது குருவி.

"பார்த்தாயா? இது உனக்கு வேண்டுமா?" என்றது குருவி.

"எனக்கு மூக்குத்தியும் வேண்டாம்; காதுத் தோடும் வேண்டாம். சிறு புழு சிக்குமா பார்! இந்தக் குஞ்சுகளுக்குப் பசி" என்றது தாய்க் குருவி.

ஆண் குருவி மூக்குத்தியைக் கீழே போட்டுவிட்டுப் புழுத் தேடப் போய்விட்டது.

ராமய்யர் மனைவி வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்த போது மூக்குத்தியைப் பார்த்தாள். எடுத்து வைத்துக் கொண்டாள்.

ராமய்யர் : "ஏது உனக்கு இந்த மூக்குத்தி? எந்தப் போக்கிரி உனக்கு இதைத் தந்தான்?" என்று மிகக் கோபமாகக் கேட்டார்.

"நேற்று இங்கே கிடந்தது, எடுத்து வைத்தேன். ஏன் தாறுமாறாகப் பேசுகிறீர்கள்?" என்றாள் மனைவி.

"கொண்டு போய் கிராம முனிசீபுகிட்டக் கொடுத்து விடவேண்டும். நாளைக்குப் போலீசார் வந்து வீட்டைச் சோதனை போட்டால் யாருக்கு அந்த அவமானம்?" என்றார் ராமய்யர்.

"நான் கொடுக்க மாட்டேன். எனக்குத்தானே இது அகப்பட்டது!" என்றாள் பிடிவாதக்காரி.

இன்னொரு வீட்டில் நடந்த பேச்சு:

"குளிக்கிற வீட்டில் வைத்திருந்தேன். அதைப் பெருக்கித் தள்ளி விட்டிருப்பாள். இந்தக் குப்பாயிக்கு ஒன்றும் தெரியாது" என்றாள் லட்சுமி தன் தாயாரிடம்.

"தேடிப் பார்க்கலாம். அப்பாவுக்குச் சொல்லாதே மூக்குத்தியைப் போக்கடித்து விட்டாய் என்று தெரிந்தால் ரொம்பக் கோபித்துக் கொள்வாங்க" என்றாள் மீனாட்சியம்மாள்.

"என்ன ரகசியம் பேசிக் கொள்ளுகிறீர்கள்?" என்றார் ராமநாதம் பிள்ளை.

விஷயம் தெரிந்து போச்சு. பிறகு ஊருக்கெல்லாம் தெரிந்து போயிற்று. ராமநாதம் பிள்ளை வீட்டில்

மூக்குத்தியை வேலைக்காரி குப்பாயி திருடி விட்டாள் என்று பேசிக்கொண்டார்கள். குப்பாயி வீட்டைப்போலீசார் சோதனை போட்டார்கள்; ஒன்றும் சிக்கவில்லை.

ராமய்யர் வீட்டில் அவர் மனைவிக்குக் கடுஞ் சுரம் வந்து விட்டது. படுத்த படுக்கை. ராமய்யருக்கு நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டே யிருந்தது. ஆனால் அந்த வீட்டுக்கு யாரும் சோதனைக்கு வரவில்லை.

* * *

"தங்கமே, பார்த்தாயா வேடிக்கை?" என்றது குருவி.

"நல்ல வேடிக்கை! பாவம் இந்த வீட்டுக்காரிக்குத் திகில் பிடித்துக் கொண்டிருக்கிறது. சுரத்தில் செத்தே போய் விடுவாள்" என்றது பெண் குருவி.

"நல்ல காரியம்!" என்றது பொல்லாத ஆண் குருவி.

"எல்லாம் நீ செய்த வேலை" என்றது பெண் குருவி.

"திருட்டுத்தனம் செய்ய நானா சொன்னேன்? புருஷன் சொன்னதைக் கேளாமல் பிடிவாதம் செய்தால் இப்படித்தான் ஆகும்!" என்றது ஆண் குருவி வெகு கம்பீரமாக.

"உன் வார்த்தையை நான் ஒரு நாளும் தட்ட மாட்டேன்!" என்றது தாய்க்குருவி! "நல்லது. குழந்தைகளுக்குக் கொஞ்சம் சிறு புழு கொண்டு வரப் போவோம்" என்று சொல்லிவிட்டு இரண்டு குருவிகளும் பறந்து சென்றன.

கெட்டிப் பூமாலை

வீரபாண்டிய ராஜாவின் கொலு மண்டபத்தில் தினமும் காலையில் சங்கீத வித்துவான்கள் வந்து பாடி விட்டுச் செல்வார்கள். ராஜாவும் தாயை இழந்த அவருடைய மகள் சந்திரமதியும் கேட்டு மகிழ்ச்சி அடைவார்கள். சந்திரமதி கல்வியும் பண்பாடும் அடைந்து அரசனுக்கு மிகவும் பிரியமாக வளர்ந்து வந்தாள்.

மண்டபத்தில் சுவரோரத்திலும் தூண்களிலும் நடராஜன், முருகன், கணேசன், கண்ணன், சீதாராமன் முதலிய கல் சிற்பங்கள் இருந்தன.

அந்த விக்கிரகங்களும் இசையை நன்ருக அனுபவித்து வந்தன. பாட்டுக்களைக் கேட்கும்போது சிலைகளின் முகங்கள் பிரகாசிக்கும். அவற்றின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உதிர்ந்து ஒழுகும்.

ஒருநாள் காஷ்மீர் தேசத்திலிருந்து ஒரு பெரிய இசை வித்துவான் வந்தார். அவர் பல நாடுகள் சென்று பலவிதமான கான முறைகளையெல்லாம் பயின்று பிரசித்தி பெற்ற சங்கீத மகா வித்துவான். அவர் பெயர் கந்தர்வ வீரமகேசுவரர்.

கந்தர்வ மகேசுவரர் கொலு மண்டபத்தில் அவருக்காக அமைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார். பாடினர். அவருடன் கூட வந்த பக்க வாத்தியக்காரர்களும் வாசித்தார்கள். சாமர்த்தியமாக 'சங்கதி'கள் போட்டுப் பாடினர்.

ராஜாவின் சங்கீதப் புலவர்கள் எல்லாரும் பாராட்டினர்கள். ராஜாவும் அனுபவித்தான். கந்தர்வ வீர

ருக்கு அரசன் பெரிய பரிசு கொடுத்தான். பெற்றுக் கொண்டு அவரும் திரும்பிச் சோழ ராஜாவின் நகரத் துக்குச் சென்றார்.

கந்தர்வ மகேசுவரர் பாடியபோது மண்டபத்தி லிருந்த சிலைகளின் கண்களிலிருந்து கண்ணீர் வடிய வில்லை. முகங்களில் வழக்கம்போல் புது ஒளியும் தோன்றவில்லை.

ராஜகுமாரி தகப்பனைக் கேட்டாள்: "அப்பா! ஏன் அந்தப் பெரிய வித்துவான் பாடியபோது நம்முடைய மண்டபத்தை அலங்கரிக்கும் விக்கிரகங்கள் வழக்கம் போல் பிரகாசிக்க வில்லை?"

ராஜா சிரித்தான்.

"நம்முடைய சிலைகளுக்கு உயர்ந்த சங்கீதப் பயிற்சி இல்லைபோல் இருக்கிறது" என்றான்.

"வித்துவான் தெய்வ பக்தியோடு பாடவில்லை போல் இருக்கிறது" என்றாள் சந்திரமதி.

"நீ சொல்லுவது உண்மை, சந்திரமதி. எனக்குக் கூட இந்தக் கந்தர்வ வீரர் பாடியபோது உள்ளம் கரைய வில்லை. பரிசு கொடுத்தேன். சங்கீதம் சுத்தமாகவும் சாமர்த்தியமாகவும் இருந்தது. ஆனால் இதயத்தைத் துளைக்கவில்லை. அழகிய கோயில், விமானம், கோபுரம், எல்லாம் நிர்மாணித்துக் காட்டினார். ஆனால் உள்ளே மூர்த்தி இல்லை. நம்முடைய பாடகர் கொஞ்சம் பாடி னாலும் நமக்கு உண்டாகும் உணர்ச்சி இந்த மகா வித்து வானுடைய கானத்தில் நமக்கு ஏற்படவில்லை" என்றான் அரசன்.

"அதோ நம்முடைய தீக்ஷிதர் வந்துவிட்டார். பாடுவார், கேட்கலாம்!" என்று ராஜகுமாரி குதூகலத்துடன் சொன்னாள். அரண்மனைப் பாடகர் வைத்திய நாத தீக்ஷிதர் பாடினார்.

உடனே விக்கிரகங்களின் திவ்விய முகங்களும் சந்திரமதியின் முகமும் மலர்ந்து புதுப்பொலிவு அடைந்தன. மண்டபத்தில் ஜோதி நிறைந்தது! கற் சிலைகளின் கண்களில் கண்ணீர் தேங்கிற்று.

"நெட்டி வேலைப் பூவில் வாசனை இருக்காது. தீக்ஷிதர் பாடும் பாட்டு தலையில் சூட்டும் தாழம்பூவைப் போன்றது. காஷ்மீர் வித்துவானுடைய சங்கீதம் நெட்டிப் பூ மாலை" என்றாள் சந்திரமதி.

"உண்மை!" என்றான் அரசன்.

"தெய்வ பக்தியில் கானம் என்கிற அற்புதப் பொருள் உலகத்தில் தோன்றிற்று, குளத்தில் செந் தாமரை தோன்றுவது போல். குளத்திலிருந்து பறித்து எடுத்து விட்ட கமலம் கொஞ்ச நேரம் வாசனையுடன் பரிமளிக்கும். பிறகு வாடிப் போகும். காகிதத்தாலும் நெட்டியாலும் செய்யப்பட்ட தாமரைப் பூவைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. போவோம் வா" என்று சொல்லி ராஜா மகளுடன் அரண்மனைக்குள் சென்றான்.

சுதரிசனத்தைலம்

ஞான சமுத்திர தேசிகரிடம் ஒரு சிஷ்யர் வந்து உபதேசம் பெற்று சாஸ்திரங்கள் கற்றார். மிகப் பெரிய வித்துவான் ஆனார். முறைப்படி ஸ்நானம், ஜபம்

எல்லாம் செய்து வந்தார். சில காலம் கழித்து அவர் தனக்கென்று காவேரிக் கரையில் ஒரு ஆசிரமம் கட்டிக் கொண்டு மக்களுக்கு உபதேசம் செய்தும் திருநீறு வழங்கியும் வந்தார்; கபில தேசிகர் என்று தனக்குப் பெயர் வைத்துக் கொண்டார்.

ஒருநாள் பரதேசிப் பித்தர் ஒருவர் வந்து, கபில தேசிகரை வணங்கி "சுவாமி! இந்த எண்ணெயைத் தேகத்துக்குப் பூசி ஸ்நானம் செய்யுங்கள்" என்று சொல்லி, ஒரு தைலம் கொடுத்தார்.

"எதற்கு நல்லது இந்தத் தைலம்?" என்று தேசிகர் கேட்டார்.

"உடலைக் காக்கும் தோலுக்கு இது மிக நல்லது. இதைத் தாங்கள் அவசியம் பூசி நான்கு நாள் ஸ்நானம் செய்ய வேண்டும். ஏழை அடிமையின் ஆசையை நிறைவேற்ற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

பித்தருடைய அன்பை தேசிகர் பாராட்டி எண்ணெயை வாங்கிக் கொண்டார்.

அவர் சொல்லிய வண்ணம் தைலத்தை உபயோகித்தார்.

ஐந்தாவது நாள் தேசிகருடைய ஆசிரமத்துக்கு வந்த ஊரார் என்ன காரணமோ அவரை வணங்கிய பின் அவரை உற்றுப் பார்த்துவிட்டு உடனே திரும்பிப் போய் விட்டார்கள். உபதேசத்திற்காகவாவது திருநீற்றுக்காவது நிற்கவில்லை. இப்படியே மறுநாளும் அதற்கு மறுநாளும் நடந்தது. எல்லாருக்கும் அவரிடம் வெறுப்பு உண்டாகி விட்டது என்பதை தேசிகர் கண்டார்.

'ஆண்டி கொடுத்த எண்ணெய் ஏதோ கெட்ட மந்திரவாதத் தைலம் போல் இருக்கிறது. அவன் ஒரு அசூயைக்காரன் போலிருக்கிறது. அதனுல்தான் தன்னிடம் மக்களுக்கு இருந்த பக்தி குறைந்து போயிற்று' என்று எண்ணினுர்.

ஜனங்கள் தன் பேரில் வெறுப்புக் கொண்டிருப்பதைப் பார்த்த தேசிகருக்கு இன்னது செய்வது என்று தோன்ருமல் தம்முடைய குரு ஞான சமுத்திர தேசிகரிடம் சென்ருர்.

விஷயத்தைச் சொன்னுர். "அந்தத் தைலத்தைக் காட்டு" என்ருர் ஞான சமுத்திரர்.

வாங்கி மோந்து பார்த்ததும், "அப்பனே! இது தான் காரணம். இத்தத் தைலம் சுதரிசன மந்திரம் ஓதி வடித்த தைலம். இதைப் பூசிக்கொண்டு ஸ்நானம் செய்தால் தோலும் சதையும் உள்ளே கிடக்கும் கருத்துக்கள் வெளியே பார்க்கிறவர்களுக்குத் தென்படும்படி செய்து விடும். தோலும் சதையும் உள்ளே இருப்பதை மறைக்கும் சக்தியை இழந்து, பார்ப்பவர்களுடைய பார்வை ஊடுருவிச் செல்லும் நீர்மையை அடைந்து விடுகிறது. இதைச் சில யோகிகள் பூசிக்கொண்டு நியமத்துடன் இருக்கப் பயில்வார்கள். நமக்கு இது உதவாது" என்ருர்.

கபில தேசிகர் வெட்கப்பட்டார்.

அவர் போன பிறகு, "பக்குவமாகாதவன் சாஸ்திரம் படித்து விட்டுக் குளித்தும் ஜபம் செய்தும் வந்தால் மட்டும் போதாது. உள்ளம் நல்ல சுத்தியடையும் வரையில் ஆபத்துதான்" என்று ஞான சமுத்திர தேசி

கர் தம்முடைய மற்றச் சீடர்களுக்குச் சொல்லி விளக்கினர்.

"இந்தச் சுதரிசனத் தைலம் பொல்லாத தைலம்" என்று சில சீடர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள்.

"எவ்வளவு படித்தாலும் மனத்தைக் காப்பது கஷ்டம். இந்தத் தைலத்தைப் பூசிக் குளிக்கும் தகுதி நமக்கு எப்போது வரப்போகிறது!" என்று வேறு சிலர் பேசிக் கொண்டார்கள்.

"நல்லெண்ணெயே போதும். இந்த ஒளியூடித் தைலங்கள் எல்லாம் நமக்கு வேண்டாம்!" என்ருர்கள் மற்றும் சிலர்.

பட்டணம் போவோம்

"**நா**ன் இந்த ஊரிலுள்ள குப்பைச் சரக்கு, கடைச் சரக்கு, நல்லது பொல்லாதது எல்லாம் அறிவேன். ஆனல் இந்தச் சுப்பம்மாள் மிட்டாய் என்கிருர்களே, அதன் ருசி தெரியவே யில்லை; அது எப்படி யிருக்கிறதோ பார்க்கவே சந்தர்ப்பம் இல்லை" என்றது ஈ, தன் மனைவிக்கு.

"ஆமாம் வீரனே! நானும் எத்தனையோ தடவை பார்த்தேன். எப்போதும் மூடியே வைக்கிருள். அவள் மகன் விற்கப் போகிருனே அந்தப் பயலும் அப்படியே திறந்து வைக்கவே மாட்டேன் என்கிருன். கிட்டப் போனல் விசிறி எடுத்து வீசி விரட்டுகிருன்!" என்றது பெண் ஈ.

சுப்பம்மாள் ஒரு ஏழை விதவை. புருஷன் வியா பாரம் செய்தான். ஆனல் சம்பாதிப்பதற்கு முன் இறந்து விட்டான். சுப்பம்மாளும் மகனும் எப்படியோ கஷ்ட ஜீவனம் செய்து வந்தார்கள். ஒரு ரூபாய்க்குத் தேங்காயும் வெல்லமும் வாங்கி அதை வறுத்துப் பாகு செய்து மிட்டாய் பில்லைகளாகப் பண்ணுவாள் சுப்பம் மாள். மகன் தெருவில் கொண்டுபோய் விற்று வந்தான்.

இரண்டு ரூபாய்க்கு—ஒரு தட்டில் 128 பில்லைகள். பதினறு பதினருக எட்டு வரிசை இருக்கும்—விற்று விடுவான். ஒரு ரூபாய் லாபம்! அதைக் கொண்டு ஜீவனம் செய்வார்கள்.

போட்டியாக ஒருவன் அதே மிட்டாய் செய்ய ஆரம்பித்தான்! ஆனல் எல்லாரும் சுப்பம்மா மிட்டா யைத்தான் வாங்குவார்கள். அவள் சுத்தமாகவும் நல்ல ஆசாரமாகவும் செய்வாள் என்பது ஊரார் நம் பிக்கை. குழந்தைகள் அவள் மிட்டாயைத்தான் விரும்புவார்கள். அது வாயில் நன்ருகத் தங்கிக் கரையும்.

* * *

ஊருக்கு ஒரு பெப்பர்மென்ட்டுக் கடை வந்தது. டப்பாக்கள் சீசாக்கள் நிறையப் பெப்பர்மென்ட்டுகள். விலையும் குறைவு; எங்கிருந்தோ இந்தப் பண்டங்கள் வரும். கடைக்காரனும் வெகு சாமர்த்தியசாலி. சிரித் துக் கொண்டே பேசுவான்!

சுப்பம்மா மிட்டாயின் விற்பனை வரவரக் குறைந்து போச்சு. ஆறு மாதங்கள் இழுத்துப் பிடித்துப் பிறகு நின்றே போயிற்று.

ஐயோ, பாவம்! சுப்பம்மா தத்தளித்தாள். பையனை அந்தப் பெப்பர்மென்ட்டுக் கடையில் ஒரு வேலைக்கார னுக அமைத்தாள். கடைக்காரன் மிரட்டுவான் பயந்து பயந்து அழகாயிருந்த பையனுடைய முகம் கூடக் கோணிப் போயிற்று.

"எனக்குக் கொஞ்சம் இடம் கொடுத்திருந்தால் இப்படி ஆயிருக்குமா?" என்று சொல்லி ஈ, பையன் காதில் உட்கார்ந்தது. அதை ஓட்டக்கூடப் பையனுக்கு இப்போது தோன்றவில்லை. எஜமானனையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருப்பான். அவன் என்ன சொல்லுவானே, அதைக் கவனிக்காமல் போனுல் அதட்டுவான். அடிக்கவும் அடிப்பான் சில சமயம்.

"ஐயோ பாவம்! இவன் ரொம்ப இளைத்துப் போனுன்" என்று சொல்லித் தட்டில் சில்லறையாக வைத்திருந்த பெப்பர்மென்ட்டு பேரில் உடகார்ந்தது ஈ. ஒரு புழக்கடைக் குப்பையில் உட்கார்ந்து ரொம்ப நேரம் அதை அனுபவித்து விட்டு இப்போதுதான் பெப்பர்மென்ட்டுக் கடைக்கு வந்தது பெண் ஈயும், பெப்பர் மென்ட்டு ருசிக்கவில்லை.

"என்ன சொல்லுகிருய்?" என்றது பெண் ஈ.

"இந்தப் பையன் கதியைப் பார்த்து, ஐயோ பாவம் என்றேன்" என்று சொல்லிற்று ஆண் ஈ.

"பரிதாபம் தான்! அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?" என்றது பெண் ஈ.

"இந்தப் பெப்பர்மென்ட்டு வந்து ஊரைக் கெடுத்தது. உனக்கு இது பிடிக்கிறதா?" என்றது ஆண் ஈ

"இல்லை! வா போவோம், குப்பை வாரிப் போடும் இடத்துக்கு" என்றது பெண்ண.

* * *

சுப்பம்மாவின் தம்பி சென்னைப் பட்டணத்தில் ஒரு சின்ன வேலையி லிருந்தான். அவன் வந்து ஒரு நாள் மருமகனைப் பட்டணத்துக்குத் தன் கூட அழைத்துப் போனான். கடைக்காரனிடம் சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டு பையனும் போனான். "கடையிலில்லாத நாட்களுக்குச் சம்பளம் இல்லை" என்றார் கடைக்காரர்.

* * *

"அம்மா, சென்னைப் பட்டணத்தில் காப்பிக் கடைக்கு என்னை மாமா அழைத்துப் போனார். அங்கே எல்லாரும் காப்பி எச்சில் பண்ணிச் சாப்பிடுகிறார்கள் அம்மா!" என்றான் பையன்.

"ஐயோ! எல்லாரும் அப்படியே வாயில் வைத்து வாயில் வைத்துக் குடிக்கிறார்களா?" என்றாள் சுப்பம்மா.

"ஒரு பெரிய வாளியில் போட்டு அலசிவிட்டு வைக்கிறார்கள். அம்மா!" என்றான் பையன்.

பிறகு தாயார் கேள்விகள் கேட்டாள்.

"எல்லாம் ஒட்டுக்கப் போட்டு ஒரே ஜலத்தில் அலம்பி ஒரே துணியால் எல்லாம் துடைத்து வைக்கிறார்கள் அம்மா" என்றான்.

"அநியாயம்! ஊர் நாசமாகப் போகும். இப்படி அனுசாரமா பட்டணத்தில்?" என்றாள் தாயார்.

"அது என்ன சொல்லுகிறாய், போ அம்மா!"

“எல்லாரும் எல்லா ஜாதியாரும் சுருட்டுப் பிடிக்கிறார்கள்” என்றான் பையன்.

“எல்லாரும் சுருட்டைக் கையில் பிடிக்கிறது. எல்லாவற்றையும் அதே கையில் தீண்டுகிறது” என்றான்.

“அப்பனே! எனக்கு ஒன்றும் சொல்ல வேண்டாம். நீ மறுபடியும் பட்டணம் போக வேண்டாம்!” என்றாள்.

“அம்மா! மாமாவும் சிகரெட்டு பிடிக்கிறார். எச்சில் பண்ணித்தான் காப்பி குடிக்கிறார்” என்றான் பையன்.

சுப்பம்மா காதைப் பொத்திக் கொண்டு, “ஈசுவரி. மகாதேவா!” என்று எழுந்திருந்து போய் விட்டாள்!

இதெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஈ “கண்ணே! நாம் பட்டணம் போவோம். அதுதான் நமக்குச் சரியான ஊர்” என்றது பெண் ஈக்கு.

“அதற்கென்ன, ரயிலடிக்குப் போவோம். யார் மூட்டை பேரிலாவது உட்கார்ந்து போய்ச் சேருவோம். டிக்கட்டுக் கேட்க மாட்டார்கள்!” என்றது பெண் ஈ.

கோழியின் விசாரம்

குப்புசாமியின் வீட்டுக்கு அவனுடைய மருமகன் கண்டியிலிருந்து வந்தான். குப்புசாமியின் மனைவி மக்கள் எல்லாருக்கும் வெகு மகிழ்ச்சி. பெரிய விருந்துக்கு ஏற்பாடு நடந்தது. மூன்று வருஷத்து மேலாயிற்று, அவர்கள் மருமகன் சுப்புவைப் பார்த்து.

கண்டியிலிருந்து குழந்தைகளுக்கு ஏதேதோ சாமான்கள் கொண்டு வந்திருந்தான். துள்ளிக் குதித்து விளையாடினார்கள்.

* * *

"நாதா, குஞ்சுகளில் ஒன்று குறைந்திருக்கிறதே" என்றது கோழி தன் சேவலைப் பார்த்து.

"நேற்று ராத்திரி இருந்தது. இன்று பார்க்கிறேன் இல்லை" என்றது.

"பருந்து தூக்கிப் போச்சோ என்னவோ?" என்றது சேவல்.

"ராத்திரி பருந்து வராதே. பகலில் இந் நேரத்துக்குள் வந்திருந்தால் நமக்குத் தெரிந்திருக்குமே?" என்றது கோழி.

"நம்ம வீட்டு எஜமானி எடுத்துக் கொண்டு போய் விட்டிருப்பாள்" என்றது சேவல்.

"அவர்களுக்கு என்னத்துக்கு நம்முடைய குழந்தை?" என்றது தாய்க் கோழி.

"பைத்தியக்காரி! உனக்குத் தெரியவில்லை. சும்மாவா வீட்டில் வைத்து நம்மை வளர்க்கிறார்கள்?" என்றது சேவல்.

"என்னத்துக்கு வளர்க்கிறார்கள்? குஞ்சை எடுத்துக் கொண்டு என்ன செய்கிறார்கள்?"

"ஐயோ! சொன்னால் நீ சங்கடப்படுவாய்."

"சொல்லு, பார்க்கலாம்."

''கழுத்தைத் திருகிக் கொன்று சமைத்துச் சாப்பிடுகிறார்கள்.''

''ஐயோ!'' என்று சொல்லிக் கோழி கீழே மூச்சின்றி விழுந்தது.

பிறகு எழுந்து, ''என்ன சொன்னாய்? இப்படியும் உண்டா?'' என்றது.

''நாம் புழுவைக் கண்டு கீறிக் கொத்தி விழுங்குகிறோமோ இல்லையோ? அப்படியே இந்த அரக்கர்கள் நம்முடைய குஞ்சுகளைத் தின்னுகிறார்கள். பச்சையாகத் தின்ன அவர்களுக்கு முடியாது. அதனால் அடுப்பில் வைத்துச் சமைத்துத் தின்கிறார்கள்.''

''நீ இருந்து என்ன பயன்? காலையில் பலமாகக் கத்துகிறாயே, மகா வீரனைப்போல் கொக்கரகோ என்று ஊர் முழுதும் கேட்கும்படி கூப்பாடு போடுகிறாயே! நம்முடைய குஞ்சுகளைக் காப்பாற்ற உன்னால் முடியவில்லையா?'' என்றது தாய்க் கோழி.

''என் கண்ணே! நான் அவர்களோடு சண்டை போட முடியுமா? காலையில் வெளிச்சம் கிழக்கே கண்டதும் என் உள்ளேயிருந்து சத்தம் தானாக உண்டாகிறது. நான் அதை அடக்க முடியாது. நான் வீரன் என்று காட்டிக் கொள்வதற்காகவா கூவுகிறேன்? சில சமயம் சண்டையும் பிடிப்பேன். ஆனால் இந்தத் தடியன்களோடு நான் சண்டை பிடிக்க முடியுமா? அவர்கள் கைகளில் தடியும் கத்தியும் பிடித்துக்கொண்டு ஜகத்தை ஆண்டு வருகிறார்கள்'' என்று சேவல் சொல்லி ஒரு கத்துக் கத்திற்று.

''பருந்தே தேவலை போலிருக்கிறது'' என்றது தாய்க் கோழி.

அதற்குள் ஒரு பூனை வந்தது. பெண் கோழி உடனே குஞ்சுகளைக் கூப்பிட்டுத் தன்னைச் சுற்றிப் பக்கத்தில் வந்து அடங்கி நிற்கச் செய்தது. மறைந்து போன குஞ்சை அப்போது மறந்துவிட்டது. புதுக் கவலையில் பழைய துயரம் மறைந்து போச்சு.

பிறகு பெரிய நாய் ஒன்று ஓடி வந்தது. பூனை ஒரே ஓட்டமாக வேப்ப மரத்தின்மேல் ஏறிக்கொண்டது. அங்கே இருந்த அணில் பாய்ந்து சென்று மேலே நுனிக் கிளையில் இலைகளுக்கு இடையில் கொஞ்ச நேரம் மறைந்திருந்து, அங்கிருந்து இன்னொரு செடிக்குத் தாவிப் போய்க் கீச்சு கீச்சென்று சத்தம் போட்டது.

உள்ளே சுப்புவும் குப்புசாமியும் இலங்கையில் வேலை செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளும் சுற்றி உட்கார்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அநியாயம், அநியாயம்!" என்றாள் குப்புசாமி மனைவி. அவரவர்களுக்கு அவரவர்களுடைய சங்கடம்!

ராஜா வேஷம்

ஒரு கிராமத்தில் தெருக்கூத்து ஒன்று போட்டார்கள். அதில் சாம்பிராணிப் பிள்ளை ராஜா வேஷம் போட்டான். ஆட்டம் முடிந்ததும் அந்த உடுப்போடே வீட்டுக்குப் போனான். அவரவர்களுக்குத் தந்த உடுப்பு அவரவர்களுக்கே சொந்தமாக எடுத்துப் போகலாம் என்று ஆட்டம் போட்ட எஜமானர் சொல்லி விட்டிருந்தார். அதுவே ஆட்டத்துக்குக் கூலி.

சாம்பிராணி ராஜா வெகு குதூகலத்துடன் வீட்டுக்குப் போனான். வேஷம் போட்ட மற்றவர்கள் தங்களுக்குக் கிடைத்த உடுப்புகளைப் பத்திரமாக எடுத்து மடித்து வைத்துக்கொண்டார்கள். ஆனால் சாம்பிராணிப் பிள்ளை தன் அரச உடுப்பைப் போட்டுக் கொண்டேயிருந்தான்.

"எல்லாம் எடுத்து வையுங்கள்" என்றாள் மனைவி. அவள் ரொம்ப நல்லவள். புருஷனுக்கு வேண்டியதெல்லாம் வெகு கவனமாகச் செய்து வருவாள். சாம்பிராணிக்கு அவளிடம் வெகு பிரியம். ஆனால் அன்று வெகு கோபமாக இருந்தான். ஆட்டத்தில் ராஜா கோபமாக இருந்தான். அதை அப்படியே வைத்துக்கொண்டு அவன் வீட்டிலும் மனைவியை அதட்டினான்.

"அதிகமாகப் பேசாதே! நான் ராஜா என்பது தெரியுமா?" என்றான்.

மனைவிக்கு ஒன்றும் விளங்கவில்லை. பயந்தாள். புருஷனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று பயந்தாள்; காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று சும்மா இருந்து விட்டாள்.

மறுநாள் காலையிலும் சாம்பிராணி தான் ராஜா வென்றே எண்ணிக் கொண்டு "மந்திரியே!" என்று அழைத்தான். அவர்கள் வீட்டில் ஒரு நாய் வளர்த்திருந்தார்கள். அதற்கு 'மந்தி' என்று பெயர்.

"மந்திரி!" என்று சாம்பிராணி அழைத்ததும் அது தன்னை எஜமானன் கூப்பிட்டதாக எண்ணி வாலை ஆட்டிக் கொண்டு வந்தது.

“வா, வேட்டைக்குப் போவோம்!” என்றான் சாம்பிராணி.

வெளியே வேஷத்துடனே கிளம்பினான்.

“ஐயோ! போகாதீர்கள்!” என்றாள் மனைவி. ஊரார் சிரிப்பார்கள் என்று அவள் பயந்து புருஷனைத் தடுத்தாள்.

“என் பிரிய மனைவியே! அரசியே! எதிரிகள் வந்து விட்டார்கள், நான் யுத்தத்துக்குப் போக வேண்டும், தடுக்காதே!” என்றான் ராஜா. ஆட்டத்தில் அந்த மாதிரி ஒரு கட்டம் இருந்தது. அதன்படி நடந்தான்.

“மோசமாகப் போச்சே!” என்று மனைவி அழுதாள்.

“அழ வேண்டாம்! நான் வெற்றி மாலையுடன் திரும்பி வருவேன்” என்று சாம்பிராணி தெரு வழியாகச் சென்றான். நாய்க்கு வெகு சந்தோஷம். கூடவே ஓடிற்று.

போகும்போது வழியில் ஒரு நரி வந்தது. அதற்கு விஷயம் புரிந்தது.

“ஐயா! சாம்பிராணி ராஜாவே! தேசத்திலுள்ள அரசர்கள் எல்லாருடைய வேஷமும் முடிந்துவிட்டது. தங்களுடைய ஆட்டம் ஒரு ராத்திரி நடந்தது. மற்ற ராஜாக்களின் ஆட்டம் கொஞ்சம் நீடித்து நடந்தது. ஆனால் அதுவும் எல்லாம் முடிந்துவிட்டது. தாங்கள் அரண்மனைக்குத் திரும்பிவிடலாம்” என்றது நரி.

அந்த நரி நல்ல நரி. தினசரி பத்திரிகைகள் படித்து வந்த நரி. ஜமீன்தார் ஒழிப்பு, 526 ராஜாக்களின் சமாப்தி எல்லாம் படித்துத் தேர்ந்த குள்ள நரி.

"மந்திரி!" என்று தன் நாய் மந்தியைப் பார்த்துச் சாம்பிராணி கேட்டான். "இது உண்மையா? இந்த நரியின் பேச்சை நம்பலாமா? உன் பாஷையில் சொல், எனக்கு விளங்கும்!"

இப்படி எஜமானன் தன்னைக் கேட்டதில் நாய்க்கு வெகு திருப்தி. "ஹூம்! ஹூம்!" என்று மெதுவாக சப்தம் செய்தது.

சாம்பிராணி வீடு திரும்பினான். நரி அங்கே இருந்த ஒரு கோழிக் குஞ்சைக் கவ்விக்கொண்டு ஓடிற்று. அதன் தாய் "கொக்! கொக்!" என்று தன் மற்ற குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு குடிசைக்குள் ஓடிப் புகுந்தது.

"எல்லா ராஜாக்களும் ஒழிந்தார்கள். நானும் இனிமேல் சும்மா இருப்பேன்" என்று மனைவிக்குச் சாம்பிராணி வாக்குறுதி கொடுத்தான். அவளும் கவலை நீங்கிச் சந்தோஷமாக வீட்டு வேலையில் மனம் செலுத்தினாள்.

ஒரு தவளைக் கதை

வயலில் வரப்பின் பேரில் ஒரு தவளை தன் பாட்டுக்கு எதையும் பாராமல் சுகமாக யோசனை செய்து கொண்டிருந்தது. ஒரு பாம்பு அதன் பின்னால் வந்து அதை விழுங்கிவிட்டது.

செத்துப்போன தவளை பிரம்மனிடம் சென்றது. அது ஒரு பாவமும் செய்யாதபடியால் அதைச் சந்தோஷமாக, "வா! குழந்தாய்!" என்று வரவேற்றான்.

"உனக்கு என்ன வேண்டும்? மறுபடி தவளையாகப் பிறக்கவேண்டுமா, அல்லது மனிதனாகப் பிறக்க விரும்பு கிறாயா?" என்று கேட்டான்.

"பகவானே! நான் பாம்பாகப் பிறக்க விரும்பு கிறேன்!" என்றது தவளை.

"சரி! போ! நல்ல புத்தி வந்ததும் திரும்பி வா!" என்றான் பிரம்மன்.

பாம்பின் மேல் அதற்குள்ள பயத்தினால், பாம்பாகி விட்டால் பிறகு பயமில்லை என்று நினைத்தது தவளை. இப்படி வரம் கேட்டுப் பெற்று மறுபடி வயலில் பாம் பாகி வந்து சேர்ந்தது.

ஒரு நாள் குடியானவனும் அவன் மகனும் கிரா மத்திலிருந்து வயலுக்கு வந்துகொண்டிருந்தார்கள். பையன் பின்னால் வந்தான். தகப்பன் முன்னால் ஒரு தடி வைத்துக்கொண்டு நடந்தான்.

பாம்பைப் பார்த்ததும், "நில், முத்துசாமி!" என்று மகனுக்குச் சொல்லிவிட்டு, பாம்பின்மேல் தடியால் ஒரு நல்ல அடி போட்டான். அது துள்ளிச் சுருண்டு புரண்டது. அடிமேல் அடி போட்டுக் கொன்றான்.

"நான் ஒன்றும் செய்யவில்லை. என்பாட்டுக்கு மாலை வெய்யில் அநுபவித்துக் கொண்டிருந்தேன். என்னை அந்த மனிதன் அடித்து நசுக்கி இம்சை செய்து கொன்றான்" என்றது பாம்பு பிரம்மனிடம்.

"நீ தவளையாக இருந்தபோது பாம்பாகவேண்டும் என்றாய். இப்போது என்ன வேண்டுகிறாய்? நீ ஒரு பாவமும் செய்யவில்லை. கேள்!" என்றான் பிரம்மன்.

"நான் தடியாக வேண்டும். அதைத்தான் விரும்புகிறேன். அந்த மனிதனை அடித்துக் கொல்ல வேண்டும்" என்றது.

"குழந்தாய்! முதலில் மரமாகிப் பிறகு தடியாக வேண்டும். தடியாகவே பிறக்க முடியாது" என்றான் பிரம்மன்.

"சரி. நான் வேப்பமரமாக விரும்புகிறேன்" என்றது பாம்பு.

"நீ கேட்டது சரி. ஒரு தீமையும் செய்யாத வேப்ப மரமாவாய், போ" என்றான் பிரம்மன்.

வேப்பமரம் வளர்ந்தது. நன்றாக வளர்ந்தது. பூ கம கம வென்று பூத்தது. பிறகு நிறையக் காய்த்தது. ஊரில் சிறுமிகள் பழத்தைப் பொறுக்கி எடுத்துக் கொட்டையைச் செக்கில் போட்டு எண்ணெய் எடுக்கக் கொடுத்தார்கள்.

"ஐயோ! என் குழந்தைகளை இப்படிச் செக்கில் போட்டு இம்சிக்கிறார்களே" என்று அழுதது மரம். பிறகு துயரத்தை மறந்து மறுபடி பூத்தது. மறுபடி காய்த்தது. அந்த வருஷமும் கொட்டையை எடுத்துச் செக்கில் போட்டு ஆட்டினார்கள். மரம் கண்ணீர் விட்டு அழுதது.

இப்படியே பல ஆண்டுகள் வேப்பமரம் துயரத்தில் கழித்தது. பிறகு ஒரு நாள் குடியானவன் கோடாலி எடுத்துக்கொண்டு வந்தான். மரத்தை வெட்டித் தள்ளினான். அந்த இடத்தில் சோளம் விதைத்துப் பயிர் செய்யலாம் என்று குடியானவன் மரத்தை வெட்டிப் போட்டான். விறகுக்கும் குடிசை கட்டுவதற்

கும் போக, ஒரு தடியும் செதுக்கி எடுத்துக் கொண்டான்.

தடி எடுத்துக்கொண்டு குடியானவன்—அவன் கொஞ்சம் முரடன்—எல்லாரையும் விரட்டிக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் சண்டையில் தடியைக் கொண்டு ஒருவனை அடித்தான். அவன் பெரிய காயமடைந்து கச்சேரியில் வழக்குச் செய்தான். குடியானவனைத் தண்டித்துவிட்டுச் சண்டையில் உபயோகித்த தடியைக் கொளுத்திவிட வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். தடி எரிந்து சாம்பலாய்ப் போய்விட்டது.

"எனக்கு மறு பிறப்பு வேண்டாம்!" என்றது தடி பிரம்மனிடம்.

மடியில் மூட்டை

ஆத்தங்குடி சுவாமியாரின் ஆசிரமத்துக்கு ஒரு கிழவன் வந்தான். வணங்கி, "நல்லுலகம் சேரும் வழியை எனக்குச் சொல்லவேண்டும்" என்று வேண்டினன்.

சுவாமியார் உபதேசப் பேச்சுக்கள் ஒன்றும் சொல்லவில்லை. "இந்த ஊருக்கு நீர் வந்த காரியம் என்ன?" என்று கேட்டார்.

"பேரனுக்கு ஒரு நல்ல இடம் பார்த்து விவாகம் செய்துவிடலாம் என்று பெண் பார்க்க வந்தேன்" என்றான் அவன்.

"அந்தக் காரியம் முடிந்ததா?" என்று சுவாமியார் கேட்டார்.

"ஒருவாறு முடிந்தது" என்றான்.

"என்னிடம் ஏன் வந்தீர்?" என்று கேட்டார் சுவாமியார்.

"எல்லாரும் உங்களிடம் உபதேசம் பெற்று வருவதாகச் சொன்னார்கள். நானும் பார்த்துப் போகலாம் என்று வந்தேன்" என்றான்.

"வாரும்! ஆற்றங்கரைக்குப் போவோம்!" என்று அவனையும் கூட்டிக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றார்.

அக்கரையில் பெரிய திருவிழா. இக்கரையிலுள்ள கிராமத்தார்கள் திரள் திரளாக ஆற்றங்கரையில் ஓடம் ஏறிச் செல்வதற்குக் கூடியிருந்தார்கள்.

"ஓடத்தில் பாரம் ஏற்றக்கூடாது. ஆட்கள் மட்டுந்தான் ஏறலாம்" என்றான் படகோட்டி.

ஒரு குடியானவன் தன் மூட்டையை எடுத்துக் கொண்டு ஓடத்தில் ஏறப் போனபோது படகோட்டி இப்படி ஆட்சேபித்தான்.

"மூட்டையை நீ ஏற்றிக்கொள்ள வேண்டியதில்லை. என் மடியிலேயே வைத்துக்கொண்டு உட்காருகிறேன். ஏன் தடுக்கிறாய்?" என்றான் குடியானவன்.

"நீ உன் மடியில் மூட்டையை வைத்துக்கொண்டு உட்காரலாம். ஆனால் உன் மூட்டையையும் உன்னையும் இரண்டையும் தாங்கவேண்டுமே இந்த ஓடம்? ஒவ்வொருவரும் இப்படியே மூட்டைகள் கொண்டு வந்து உட்கார்ந்தால் என்னுடைய ஓடம் மூழ்கிப் போகும்" என்றான் ஓடக்காரன்.

"மூட்டையை நான் என்ன செய்வேன்? மூட்டையில்லாமல் நான் ஆறு தாண்டினாலும் என்ன பயன்?" என்று குடியானவன் கவலைப்பட்டு வாதாடினான்.

படகோட்டி மிகக் கண்டிப்பானவன். மூட்டைகள் ஓடத்தில் கூடவே கூடாது என்று சொல்லிவிட்டு, "மூட்டைகள் வைத்திருப்பவர்கள் தயவு செய்து இறங்கிவிட வேண்டும்" என்றான்.

சிலர் இறங்கி விட்டார்கள். வேறு சிலர் சத்திரத்து அதிகாரியிடம் மூட்டைகளை வைத்துவிட்டு வெறுங் கையாக ஓடத்தில் தைரியமாக ஏறினார்கள்.

'மூட்டையை விட.மாட்டோம்' என்றவர்கள் நின்று போனார்கள்.

ஓடம் நகர்ந்துவிட்டது.

"நம்முடைய மூட்டையை இன்னொருவர் கையில் எப்படிக் கொடுக்க முடியும்? திருவிழா முடிந்து போய் விடுமே. நாம் போவதற்கு இல்லாமல் போய்விட்டதே" என்று வருந்தினார்கள்.

"அந்தப் படகு பாரம் தூக்கிச் செல்லாது. வெறுங் கையாகத்தான் ஏறவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றான் சத்திரத்து அதிகாரி.

"நான் என் மடியில் மூட்டையை வைத்துக் கொண்டு உட்கார்ந்தால் படகுக்கு என்ன பெரும் பாரமாய்ப் போகும்?" என்று குடியானவன் கோபமாகப் பேசினான்.

மூர்க்கனோடு பேசிப் பயன் என்ன என்று அவனோடு யாரும் விவாதம் செய்யவில்லை.

"பார்த்தீரா?" என்றார் சுவாமியார்.

"பார்த்தேன். இதில் என்ன விசேஷம்?" என்றான் பேரனுக்குப் பெண் பார்க்க வந்தவன்.

"நல்லுலகம் போய்ச் சேரும் வழி கேட்டீரே, அதற்கு நீர் முதலில் செய்யவேண்டியது உம்முடைய மூட்டைகளை ஆண்டவனிடம் ஒப்புவித்துவிட வேண்டும். அதைச் செய்ய நீர் இஷ்டப்படுகிறீரா?" என்றார்.

"வீட்டில் கிழவியிடம் யோசித்துத்தான் சொல்ல வேண்டும்!" என்றான்.

"திருவிழா முடிந்து போகுமே!" என்றார் சாமியார்.

கோர்ட்டில் குருவிகள்

ஜட்ஜ் சிவலிங்க நாடார் ஜில்லா கோர்ட்டில் வழக்கு விசாரித்துக் கொண்டிருந்தார். புதிதாக அந்த வேலையில் அமர்ந்திருந்தபடியால் வெகு உற்சாகமாகச் சாட்சிகளுக்குக் கேள்விகள் போட்டு இருதரப்பு வக்கீல்களையும் தொந்தரவு செய்துகொண்டிருந்தார். புதிதாக அமுலுக்கு வந்த விவாக ரத்துச் சட்டத்தின்படி ஏற்பட்ட ஒரு வழக்கு.

வாதி மனைவி. புருஷன் பிரதிவாதி. விவாகமாகிப் பதினெட்டு மாதம் ஆகியிருந்தது. இந்தப் புருஷன் தனக்குப் பிடிக்கவில்லை, அவனுடைய குணங்கள் தன்னுடைய மனப்பான்மைக்கு ஒத்து வரவில்லை, என்று மனைவியின் வழக்கு.

பிரதிவாதி இதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆட்சேபிக்கிறார். வாதி வக்கீல் சுப்பிரமணிய பிள்ளை சிறு வயது ஆனாலும் சாமர்த்தியசாலி. பிரதிவாதி வக்கீல் வாசுதேவய்யர் கிழவர். பழைய தினுசு.

சாக்ஷிகளின் விசாரணைக்கு மத்தியில் இரண்டு குருவிகள் கோர்ட்டுக்குள் மேலே ஜன்னலண்டை உட்கார்ந்து கொண்டு 'கிசு' 'கிசு' என்று சப்தம் போட்டுக் கொண்டிருந்தன.

வாசுதேவய்யருக்குச் சாக்ஷி சொன்னது சரியாகக் கேட்கவில்லை. அவர் காது கொஞ்சம் மந்தமோ, என்னவோ! ஆனபடியால் திரும்பத் திரும்ப, "என்ன? என்ன?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

"இந்தக் குருவி உபத்திரவம் அதிகமாய்ப் போச்சு" என்றார் ஜட்ஜ் சிவலிங்க நாடார்.

"இப்படிப் பைத்தியக்கார மக்கள் விவாகரத்துக்கு வழக்குப் போடுகிறார்களே என்று குருவிகள் சிரிக்கின்றன" என்று சொன்னார் வாசுதேவய்யர்.

இது சொன்னதும் குருவிகள் இன்னும் சிரிக்க ஆரம்பித்தன. வக்கீல் சொன்னது அவைகளுக்குத் தெரிந்து போய்விட்டது.

"என்ன? நீயும் கோர்ட்டுக்குப் போவாயோ?" என்றது ஆண் குருவி.

"ஒரு நாளும் போகமாட்டேன்" என்றது மனைவிப் பறவை.

இந்தக் குருவிகளின் தொந்தரவால் கேசு கெட்டுப் போகும்போல் தோன்றிற்று சுப்பிரமணிய பிள்

ளைக்கு. வாசுதேவய்யர் சிரித்துக்கொண்டே சாக்ஷி களைக் குறுக்கு விசாரணை செய்தார். வழக்கு விசாரணையை ஒத்திப் போட்டால் நல்லது என்று எண்ணி, 'தனக்கு ஏனோ தலை சுற்றுகிறது' என்று சொல்லி வாய்தாக் கேட்டார் வாதி வக்கீல்.

தலைக் கிறுகிறுப்பு என்று வாதி வக்கீல் சொன்னதும் பாவம், வாசுதேவய்யருக்கு ஆட்சேபிக்க இடம் இல்லாமல் போயிற்று. "இளைஞர்களுக் கெல்லாம் இப்படி வியாதிகள் வருவதற்குக் காரணம் என்ன?" என்று மட்டும் கேட்டார்.

"இவர்களுக்குக் குழந்தைகள் இல்லை போலிருக் கிறது. குழந்தைகள் இருந்தால் இப்படி வழக்குப் போடுவாளா மனைவி?" என்றது பெண் குருவி.

"அப்போதும் போடுவார்கள்" என்றது ஆண் குருவி.

பிறகு, "நமக்கு இந்தச் சகவாசம் வேண்டாம்" என்று சொல்லி ஆண் குருவி அவ்விடத்திலிருந்து கிளம்பிப் பக்கத்திலிருந்த ஆஸ்பத்திரிக் கட்டடத்துக் குப் பறந்து போயிற்று.

"இந்தக் குருவிகளுக்குச் சீர்திருத்தச் சமாசாரமே தெரியவில்லை போலிருக்கிறது. அவர்களுக்கிடையில் பிரசாரம் செய்ய வேண்டும்" என்றது அங்கிருந்த ஒரு குரங்கு!

சொறி நாய்

ராமசமுத்திரம் என்கிற கிராமத்தில் ராமகிருஷ் ணஞ் செட்டியார் பணக்காரர். அந்த ஊரில் பாதி நிலம் அவருடையது. அவருடைய மெத்தை வீடு

ஒன்றுதான் அந்த ஊரில் சுண்ணும்பில் கட்டிய வீடு. மீதியெல்லாம் குச்சு வீடுகள்.

அந்த ஊரில் பல நாய்கள் தெருவில் எச்சில் இலைகளை நக்கிப் பிழைத்து வந்தன. இரவு முழுதும் கத்திக் கொண்டிருக்கும். கன்னக்கோல் திருடர்கள் அந்த ஜில்லாவில் அதிகம். ஆனால் அவர்கள் காமசமுத்திரத்தண்டை வரமாட்டார்கள். நாய்கள் குலைக்கும். காரியம் நடைபெருது என்று அந்த ஊரை அவர்கள் விட்டு விட்டார்கள். வேறு ஊர்களில் அவ்வப்போது ஏதாவது சம்பாதிப்பார்கள். ரொம்பக் காலத்துக்கு முந்தி நடந்த கதை. இப்போது அந்த ஜில்லாவில் கன்னக் குறவர்கள் இல்லவே இல்லை.

ஒரு சொறி நாய் எப்போதும் செட்டியார் வீட்டுத் திண்ணைமேல் படுக்கும். செட்டியாரின் கடைசி மகன் தான் சாப்பிட்ட இலையை அவனே கொண்டு வந்து வாசலில் போடுவான். அதில் ஒரு பிடி சோறு மீத்தியிருப்பான். இலையில் உள்ள நெய்யையும் நாய் மிக ஆவலாக நக்கும். அந்த நாய் எப்போதும் அங்கேயே படுக்கும். பெரிய செட்டியாரும் அவருடைய வேலைக்காரர்களும் எவ்வளவோ பார்த்தார்கள். அதன் மேல் கல்லை வீசித் துரத்துவார்கள். அது கத்திக்கொண்டு ஓடிப் போகும். அவர்கள் திரும்பிக் கதவு சாத்தினதும் அது மறுபடியும் வந்து, அங்கேயே திண்ணையில் படுத்துக்கொள்ளும்.

ஒரு புதுக் குறக் கூட்டம் வந்தது. பகலில் மூங்கில் சீவிக் கூடையும் பாயும் முடைவார்கள். நாய்களை மெள்ளச் சிநேகம் செய்தார்கள். பிறகு அவர்களைக் கண்டு குலைத்தாலும் மெதுவாகத்தான் குலைக்கும்.

அன்றிரவு அமாவாசை தீர்ந்து மூன்றும் நாள் ஞாயிற்றுக்கிழமை. ராத்திரி ராகி ஓட்டப்பம் எறிந்து நாய்களை ஏமாற்றிவிட்டார்கள். அவை சத்தம் போட வில்லை. இரண்டு சாப்பிடும் வெங்கலத் தட்டுகள் ஒரு வீட்டில் எடுத்தார்கள். இன்னொரு வீட்டில் இரண்டு கோழிகளைப் பிடித்துப் பையில் போட்டுக் கொண்டார் கள். கடைசியாக, செட்டியார் வீட்டண்டை வந்தார் கள். சொறி நாய் குலைத்தது. ஓட்டப்பத்தை விண்டு எறிந்தார்கள். ஆனாலும் நாய் குலைத்துக் கொண்டே யிருந்தது. செட்டியார் விழித்துக்கொண்டு, "இந்தப் பாழும் நாயால் தூங்கவே முடியாமலிருக்கிறது" என்று வெளியே வந்து தடியால் நாயை அடித்தார். நாய் பெருங் கூக்குரலிட்டுக்கொண்டு ஓடிப் போயிற்று. பிறகு கதவை மூடிக்கொண்டு படுத்தார். செட்டியார் தம் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தபடியால் பதுங்கியிருந்த திருடர்கள் இங்கே இனி வேலை நடக் காது என்று போய்விட்டார்கள்.

வழக்கம்போல் மறுநாள் செட்டியார் மகன் தான் சாப்பிட்ட இலையை எடுத்து வந்தான். நாய் வாலை ஆட்டிக்கொண்டு தயாராக வந்தது.

"உன்னால்தான், சேஷா! இந்த நாயின் உபத் திரவம்" என்றார் பக்கத்தில் கை அலம்பிக் கொண் டிருந்த செட்டியார்.

"பாவம்! வால் ஆட்டிக் கொண்டு வருகிறது. அப்பா! நாய்க்குப் புண் வந்தால் மருந்து இல்லையா?" என்றான் சேஷன்.

"மருந்து எடுத்து நாய்க்குத் துடைப்பாய் போலி ருக்கிறது. நன்றாய்ப் போச்சு!" என்றார் செட்டியார்.

சொறி நாயின் உண்மை உபத்திரவம் அந்தக் குறக் கூட்டத்துக்கு அல்லவோ தெரியும்! செட்டியார் என்னத்தைக் கண்டார்!

உழைத்துப் பிழை

ஒரு ஏழைக் குடியானவன் கண்ணபிரானை மிக பக்தியுடன் பூஜை செய்து வந்தான். கண்ணன் அவனுக்கு இரங்கி, "உனக்கு என்ன வேண்டும்? கேள், தருவேன். ஆனால் உனக்குத் தருவதை எல்லாருக்கும் தருவேன். எதையும் உனக்கு மட்டும் தருவதற்கு முடியாது" என்றான்.

"கோபாலா! எனக்கு வேண்டியதை நீ தந்தால் போதும். அதை நீ எல்லாருக்கும் தந்தாயானால் எனக்கு என்ன ஆட்சேபனை? நான் அப்படித் துர்ப் புத்திக்காரன் அல்ல. எனக்கு யார் பேரிலும் அசூயை இல்லை" என்றான் குடியானவன்.

"நீ மிகவும் நல்லவன். எனக்குத் தெரியும். உனக்கு வேண்டியதைக் கேள். மனைவியுடன் யோசித்துக் கேள். பிறகு மாற்றிக் கொள்ள முடியாது" என்றான்.

"அப்படியே சரி! மனைவியைக் கேட்டுச் சொல்லுகிறேன். எனக்கு மூளை உன்னைப் பார்த்ததும் கலங்கிப் போயிற்று. நாளைக் கேட்கலாமா?" என்றான்.

"அப்படியே!" என்றான் கண்ணன்.

குடியானவன் அன்றிரவு தன் மனைவியுடன் யோசனை செய்தான். தன் புருஷன் பெற்ற வரத்தைக் கேட்டு மனைவிக்கு வெகு சந்தோஷம். இதைக் கேட்க

லாமா, அதைக் கேட்கலாமா என்று இருவரும் வெகு நேரம் யோசித்துக் கடைசியாக முடிவு செய்து கொண்டார்கள்.

மறுநாள் குடியானவன் கண்ணனைத் தியானித்தான். ஆண்டவன் சிரித்துக்கொண்டே தரிசனம் தந்தான்.

"தம்பீ, என்ன கேட்கிறாய்?" என்றான்.

"கருணைக் கடலே, கோபித்துக் கொள்ள வேண்டாம். நான் ஏழை, எனக்கு அறிவு அதிகமில்லை. ஆனபடியால் நீ சொல்லியபடி என் மனைவியுடன் யோசித்தேன்" என்று ஆரம்பித்தான்.

கண்ணன்: "என்ன வேண்டுமோ அதைக் கேட்டுப் பெறுவாய். அது ஊரில் எல்லாருக்கும் கிடைக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்."

"ஆண்டவனே! என் பெட்டி நிறையப் பணம் வெள்ளி ரூபாயாக இருக்க வேண்டும். எவ்வளவு எடுத்தாலும் குறையக் கூடாது. இதைக் கேட்கிறேன்" என்றான்.

"அப்பனே உனக்கு ஏன் பண ஆசை பிடித்து விட்டது?" என்று சொல்லிக் கோவிந்தன் தாமதித்தான்.

தான் கேட்ட வரத்தையே தர வேண்டும் என்று குடியானவன் வணக்கத்தோடு பிடிவாதம் செய்தான்.

"சரி, அப்படியே!" என்று சொல்லிக் கோவிந்தன் மறைந்து விட்டான்.

பணம் இருந்தால் எல்லாமே பெறலாம், அவ்வப்போது என்ன வேண்டுமோ அதைப் பெறலாம், ஆனா

படியால் இந்த வரத்தைக் கேள், என்று தன்னுடைய மனைவி சொன்னதைக் குடியானவன் சரி என்று ஒப்புக் கொண்டு இவ்வாறு கேட்டு வரம் பெற்றான்.

வரத்தின்படி பெட்டியில் ரூபாய் நிறைந்து விட்டது. உடனே கை நிறைய ரூபாய் எடுத்துக் கொண்டு அடுத்த ஊரில் துணிக் கடைக்குச் சென்றான். வீட்டுக்காரிக்கு நல்ல புடவை இரண்டு வாங்க வேண்டு மெனச் சென்றான்.

அவன் சென்ற வழியில் ஜனங்கள் எல்லாரும் ஏதோ வெகு குதூகலமாக இருப்பதைக் கண்டான். தனக்குக் கோவிந்தன் தந்த வரம் எல்லாருக்குமே பயன்பட்டு விட்டதை அவன் முதலில் மறந்து விட்டான். பிறகு நினைவுக்கு வந்தது. ஊரில் எல்லா ரும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து அவனும் மகிழ்ந்தான். ஜவுளிக் கடைக்குள் நுழைந்தான்.

நல்ல புடவைகள் இரண்டு எடுத்துத் தரச் சொன்னான்.

"நீ என்ன கொடுப்பாய்?" என்றார் கடைக்காரர்.

"என்ன விலை சொல்லுகிறீரோ அதைத் தரு கிறேன்."

"விலையா? எங்களுக்குப் பணம் வேண்டாம். பணத்தை இப்போது மதிப்பார் இல்லை. அது எல்லா ரிடமும் ஏராளமாக இருக்கிறது. எத்தனை மூட்டை அரிசி தருவீர் சொல்லும்" என்றார் கடைக்காரர்.

"ரூபாய்க்கு ஏன் மதிப்பில்லை? அதற்கு என்ன வாயிற்று?" என்றான் குடியானவன். கடைக்காரர் வேடிக்கை செய்கிறார் என்று எண்ணி இப்படிக் கேட்டான்.

"எல்லாரிடமும் ரூபாய் வேண்டிய அளவு குறையாமல் இருக்கிறது. இப்போது யாருக்கும் பணம் வேண்டியதில்லை. இது உமக்குத் தெரியாதா?" என்றார் கடைக்காரர். குடியானவனுக்கு விஷயம் விளங்கவில்லை. அடுத்த கடைக்குப் போனான். அங்கேயும் "அரிசியோ, பருப்போ, கடலையோ ஏதாவது கொண்டு வா, பணம் வேண்டாம். அது நம்மிடம் ஏராளமாக இருக்கிறது" என்றார்கள்.

குடியானவன் துக்கமடைந்தான். பிறகு எந்தக் கடைக்கு எந்தப் பண்டம் வாங்கப் போனாலும் இதையே கண்டான். ரூபாய்க்கு மதிப்பே இல்லாமல் போயிற்று. மனைவியும் புருஷனும் துயரத்தில் மூழ்கினார்கள்.

"கோவிந்தா, ஏமாற்றி விட்டாயே" என்று அழுதான்.

"உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டாய்" என்றான் கோவிந்தன்.

"நானும் குடும்பமும் பசியில் செத்துப் போவோமே!" என்று குடியானவன் அழுதான்.

"வரத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறாயா?" என்று கேட்டான் கண்ணன்.

"உன் வரத்தை நீயே எடுத்துக்கொண்டு போ. நான் முன்போல் உழைத்துப் பிழைப்பேன். அதற்கு நீ உதவினால் போதும்" என்றான் குடியானவன் தைரியமாக.

"அதுவே சரி, நீயும் உழைத்துப் பிழை. எல்லாரும் உழைத்துப் பிழைக்கட்டும்" என்றான் கோவிந்தன்.

வரம் கேட்ட குதிரை

ஒரு காலத்தில் குதிரை மாட்டைப் பார்த்துப் பொருமைப்பட்டது. "இந்தப் பிராணிக்கு எவ்வளவு நல்ல கொம்புகள்! எனக்கு இல்லையே. இருந்தால் எவ்வளவு உபயோகமாக இருக்கும்!"

இப்படி யெல்லாம் யோசித்து, 'கொம்பு வேண்டும், இரண்டு நீண்ட கொம்புகள் வேண்டும்' என்று தவம் இருந்தது.

தவம் பலித்தது. தலையில் கொம்புகள் முளைத்து வளர்ந்தன. குளத்தில் ஜலத்தில் தன் உருவத்தைப் பார்த்துக் குதிரை மிகவும் சந்தோஷப்பட்டது. தான் அடைந்துவிட்ட கொம்புகளை எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டுக் கொணடு குதிரை புல் மேய்ந்து கொண்டிருந்தது

திடீர் என்று எதையோ கண்டு ஓடிற்று. ஆனல் முன்போல் ஓட முடியவில்லை. மாட்டைப்போல் தடுமாறி ஓடிற்று. கால்களில் ஓடும் சக்தி முன்போல் இருக்கவில்லை. "என்னவாயிற்று என் கால்களுக்கு?" என்று ஏக்கம் கொண்டது.

பிறகு புல் தின்று பசி தீர்த்துக்கொண்டு நின்ற போது, வயிற்றில் ஏதோ ஒரு கலக்கம் உண்டாயிற்று.

"இதுவென்ன வயிற்றில் என்னவோ பண்ணுகிறதே" என்று சொல்லி முடிப்பதற்குள் சாப்பிட்ட புல் வாய்க்கு வந்தது. அதை மெள்ள மறுபடி கடித்து விழுங்கிய பின்னும் மறுபடி வயிறு கலக்கிற்று.

"இதுவென்ன வம்பு!" என்று ஒரு மரத்தடியில் படுத்துக் கொண்டது. தின்ற புல் அவ்வளவும் மறுபடி அசை போட்டுத் தூங்கிற்று. பிறகு எழுந்து நடந்தது.

"என் பாடு கஷ்டமாகி விட்டது. மாட்டைப்போல் ஆகிவிட்டேனே! இந்தக் கொம்புகளும் வேண்டாம்; இந்த அசை போடும் தொல்லையும் வேண்டாம்!" என்று மறுபடி பழைய மாதிரி ஆகவேண்டும் என்று தீவிர தவம் செய்ய ஆரம்பித்தது. அவ்வப்போது கால்களைப் பார்த்துக் கொண்டது. குளம்புகள் ஒவ்வொன்றும் இரண்டாகப் பிளந்து போய், முன்போல் இல்லை. முதுகின்மேல் ஒரு ஈ வந்து உட்கார்ந்தது. வாலால் அதை ஓட்டிக்கொண்டபோது தன் புது வாலைப் பார்த்து மிக வெட்கம் கொண்டது. 'ஐயோ! துரௌபதியின் தலையில் அவிழ்ந்த கூந்தலைப்போல் இருந்த என் வால் இப்படி வைதீகனுடைய உச்சிக் குடுமியைப் போல் ஆய்விட்டதே' என்று துக்கம் மேலிட்டு அழுதது.

"நான் கெட்டேன், ஈசுவரா! இந்தக் கொம்புகளைத் திருப்பிப் பெற்றுக் கொள். என்னை முன்போல் சுகமாக இருக்கவும் கால் குளம்புகள் பிளந்து போனதைச் சரிப்படுத்தியும் செய்து என்னைக் காப்பாற்றுவாயாக.

"இந்த வாலை என்னால் சகிக்க முடியவில்லை. என்னுடைய பழைய வாலை எனக்குத் தருவாயா?" என்று மிகத் துயரப்பட்டுத் தவம் செய்தது.

"குதிராய்! என்ன உனக்கு?" என்றான் மகாதேவன்.

"என் கால்களைப் பார். இனி நான் ஓடமுடியுமா? என் வாலைப் பார். இது என்ன வெட்கக்கேடு!" என்றது குதிரை.

"என்ன இதற்கு? மான்களைப் போலவும் பசுக்களைப் போலவும் இரட்டைக் குளம்புகளும், அழகான

குச்சு வாலும். அதனுலென்ன?'' என்ருன் மகாதேவன் சிரித்துக்கொண்டு.

"போதும், போதும்! என் பழைய குளம்புகளே, பழைய வாலே எனக்கு வேண்டும். தவிர, இது வென்ன, சாப்பிட்டது ஜீரணமாவதில்லே? வயிற்றில் என்னவோ செய்து மேலுக்கு வருகிறதே!'' என்றது பாவம் குதிரை.

"அது அப்படித்தான் செய்யும். அதனுல் என்ன? மறுபடி நன்ருகக் கடித்து அசை போட்டு விழுங்கினுல் சரி!'' என்ருன் சங்கரன்.

"எனக்கு உண்டாகும் குழந்தைகளுக்கும் இதே பாடா'' என்றது குதிரை.

"ஆமாம்!'' என்ருன் பரமசிவன்.

"ஐயோ! என்மேல் கருணே கொண்டு தப்புவிப் பாய்!'' என்று அழுதது குதிரை.

"கொம்புகளேத் திருப்பிக் கொடுத்து விடு!'' என்ருன் மகாதேவன்.

"இதோ எடுத்துக் கொள்! எனக்குக் கொம்பும் வேண்டாம், மாட்டுக் குளம்பும் வேண்டாம். தின்றது உடனே ஜீரணமாகும்படி யிருக்கட்டும், படுத்து அசை போடும் வேலே எனக்கு வேண்டாம். நான் ஓடிக் குதித்து வாழ விரும்புகிறேன்!'' என்று சொல்லிக் குதிரை பரமசிவன் காலேத் தொட்டு வணங்கிற்று.

"ததாஸ்து!'' என்று ஆண்டவன் வரமளித்தான்.

வேம்பின் தவம்

ஒரு பழைய வேப்பமரம். அதன் பக்கத்தில் ஒரு சிறு வேப்பஞ் செடியும் நன்ருகத் தள தளவென்று வளர்ந்து கொண்டிருந்தது.

"அம்மா! நானும் உன்னைப் போலவே கசப்பாகத் தான் வளருவேனா?" என்றது செடி.

"வேறு எப்படி வளர்வாய்? அப்படித்தான் வளருவாய். அது உனக்குச் சம்மதமில்லையா?" என்றது கிழ வேம்பு.

"மருந்துக்கும் மந்திரத்துக்கும் தான் உன்னிடம் எல்லாரும் வருகிறார்கள். ருசித்து வந்தவர்கள் யாரையும் நான் காணவில்லையே!" என்றது செடி.

"மருந்தும் மந்திரமும்தானே துக்கத்தைத் தீர்க்கும். தித்திக்கும் பழம் என்ன தரும்? நிலையான சுகத்தைத் தராது. நான் இருக்கும் நிலை எனக்குத் திருப்தி. நீயும் அப்படியே இருப்பாய், குழந்தாய்!" என்றது தாய் மரம்.

"எனக்கு ஆசையாக இருக்கிறது. நல்ல கறிவேப்பஞ் செடியாகத்தான் ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்றது செடி.

"குழந்தாய்! வேண்டாம். என்னைப்போல் நீயும் நீண்ட ஆயுள் இருந்து சுகமாக இருப்பாய். பிறருடைய சுகம் நமக்கு வேண்டாம். அதைக் கண்டு ஆசைப் படுதலால் கேடு விளையும்" என்று மரம் சாஸ்திரம் சொல்லிற்று.

குழந்தைச் செடி கேட்கவில்லை.

"நான் வேப்பமரம் ஆகமாட்டேன்" என்று தீர்மானித்தது. கணேசனைத் துதி செய்து வரம் பெற்று விட்டது. வேப்பஞ் செடி கறிவேப்பஞ் செடியாக வளர்ந்தது.

மூன்று அடி வளருவதற்குள் பக்கத்திலுள்ள வீட்டாரெல்லாம் செடியிலிருந்து சமையலுக்குக் கறிவேப்பிலை பறித்துக்கொண்டு போக ஆரம்பித்தார்கள்.


RATHI-
KALKI

சிலர் கொஞ்சம் இரக்கத்துடன் முற்றிய இலையாகப் பறித்துக்கொண்டு போனார்கள். கிளை கிளையாகவே பறித்தார்கள் சிலர்.

சிலர் தேடி இளங் கொழுந்துகளையே பறித்துக் கொண்டு போனார்கள். அதுதான் சமையலுக்கு ருசி என்று இப்படிச் செய்தார்கள். மீதியிருந்த செடியை ஒருநாள் ஆடு ஒன்று வந்து மேய்ந்துவிட்டது!

மண்ணுக்குள் வேப்பம் வேர் இன்னும் இருந்தது. கணேச பகவானுடைய வரம் வேர்வரையில் போக வில்லை. கணேசனுக்கு இன்னது ஆகும் என்று முந்தியே தெரியுமல்லவா?

"அம்மா! நான் புத்தியடைந்தேன்" என்றது வேர், தாய் மரத்தைப் பார்த்து தீன சுவரத்தில்.

"இன்னும் இருக்கிறாயா, குழந்தாய்?" என்றது தாய் மரம்.

"அம்மா போதும். நான் ஆசைப்பட்டது மடமை. கசப்பு மரமாக இருப்பதே மேல் என்பதைத் தெரிந்து கொண்டேன். எனக்குப் பிழைக்கும் வழி சொல்லித் தா" என்றது அந்த வேர்.

"மறுபடியும் கணேசனைத் துதி செய்!" என்றது மரம். "நானும் உனக்காகக் கேட்டுக்கொள்ளுகிறேன்." இவ்வாறு சொல்லிவிட்டு வேப்பமரம் தன் முழு பக்தி யும் செலுத்திக் குழந்தைக்காகப் பிரார்த்தனை செய்தது.

வேர் துளிர்த்தது. வேப்பஞ் செடியாக நன்றாக வளர்ந்தது. ஊரார் கறிவேப்பிலைக்காக மறுபடியும் வந்தார்கள். சுத்தக் கசப்பாக இருந்ததைப் பார்த்து விட்டுத் திரும்பிச் சென்றார்கள். செடியை வளரவிட்டு விட்டார்கள். ஊர்க் கோழிகள் வந்து செடியின் கீழ் தரையைக் கீறியும் கொத்தியும் கொடுத்தன. அவை

புழுக்கள் தேடிக் கீறின. ஆனல் அது செடிக்கு நல்ல தாயிற்று. வேகமாக வளர்ந்தது. கொழுந்துகளைப் பிடுங்கிப் போவார் யாருமில்லை. தாய் மரத்தின் பூவும் அதன்மேல் சந்தோஷமாக உதிர்ந்தது.

வள்ளி தப்பினுள்

சாம்பசிவ முதலியாருடைய தகப்பனுர் சங்கர முதலியார் பண்பாட்டிலும் படிப்பிலும் மிக ருசி கண்டவர். மகனையும் தன்னைப் போலவே ஆகும்படி வளர்த்தார். சங்கர முதலியார் இறந்துவிட்ட பின்னே சாம்பசிவ முதலியாருக்கு விவாகமாயிற்று. மாமன் மகள்தான். வயது 23.

நன்ருகப் பாடத் தெரியாத மனைவி இருந்து என்ன, இல்லாமலிருந்தாலென்ன என்று சாம்பசிவ முதலியார் மனைவியைக் கும்பகோணத்துக்குப் பக்கத்தில் ஒரு புகழ்பெற்ற பாடகியிடம் பாடக் கற்றுக் கொள்ள அனுப்பினுர். கூட உதவிக்கு ஒரு வேலைக்காரியையும் அனுப்பினுர். "அவசரப்பட வேண்டாம்! நன்ருகக் கற்றபின் வா" என்று சொல்லியனுப்பினுர்.

ஆறு வருஷங்கள் கற்ருள். சுமாராகக் கற்றுக் கொண்டதாகத் தெரிந்தது. ஆயினும் முதலியாருக்கு நம்பிக்கையில்லை. பார்த்து வரச் சொல்லித் தம் காரியஸ்தரை அனுப்பினுர். அவர் போய்க் கௌரியம்மை பாடுவதைக் கேட்டுத் திரும்பி வந்தார்.

"சுருதி சரியாகத்தான் இருக்கிறது. ஆனல் தாளம் கொஞ்சம் திருப்தியில்லை" என்ருர் காரியஸ்தர். இவர் நல்ல பெரிய வித்துவான்கள் பாடியதைக் கேட்டவர். சிலருடைய ஆட்சேபணையைச் சாம்பசிவ முதலியார் தள்ளிவிடுவதற்கில்லை.

"அப்படியானால் திருவாரூர் சுப்பய்யரிடம் சிட்சை செய்துகொண்டு வரச் சொல்லவும்" என்று சொல்லிக் காரியஸ்தரை அனுப்பினார்.

அப்படியே திருவாரூரில் நான்கு வருஷம் இருந்தாள் கௌரியம்மை. சுப்பய்யரே முதலியாருக்குச் சொல்லியனுப்பினார்: "கௌரியம்மைக்குத் தாள ஞானம் நன்றாக இருக்கிறது. இன்னும் இரண்டு வருஷமிருந்தால் ஒரு குறையுமில்லாமல் பாடுவாள். ஆனால் அவசரப்படுகிறாள். என்ன செய்வது?"

இதைக் கேட்டதும் முதலியார், "அவசரப்பட்டு என்ன பிரயோசனம்? சங்கீதமும் அவசரமும் சேராது. இன்னும் இரண்டு வருஷம் சிட்சை அடைந்தே திரும்பலாம்" என்று சொல்லியனுப்பினார்.

இரண்டு வருஷம் முடிந்த பின்—பழைய காரியஸ்தர் இறந்துவிட்டார். புதுக் காரியஸ்தர், பெரிய தமிழ்ப் புலவருடைய குமாரர், ஆனந்தரங்கம் பிள்ளையை அனுப்பினார். "போய்ப் பார்த்துவிட்டு வாரும். எவ்வளவு தூரம் படிப்பு நடந்திருக்கிறது என்பதைத் தாட்சண்யமின்றிச் சோதித்து வாரும்" என்று சொல்லியனுப்பினார்.

அவரும் போய்த் திரும்பி வந்தார். "சங்கீதத்தைப் பற்றி ஒரு குறையுமில்லை. எந்த வித்வானும் அம்மாளுக்குச் சமானமாகமாட்டார். ஆனால் தமிழ்ச் சொற்கள் சரியான உச்சரிப்பில்லை. கொஞ்சம் தெலுங்கு சப்தமாக இருக்கிறது. இந்தக் குறையும் தீர்ந்தால் நல்லதாகும்" என்றார்.

"சந்தேகமென்ன? சங்கீதம் எவ்வளவு குற்றமற்றதாக இருந்தாலும் சாகித்தியத்தில் இலக்கணமோ உச்சரிப்போ தவறு ஏற்பட்டால் சகிக்க முடியுமா?

இதற்கு என்ன செய்ய?'' என்றார் சாம்பசிவ முதலியார்.

ஆனந்தரங்கம் பிள்ளை, ''இதற்கு ஒரு கஷ்டமும் இல்லை. யாழ்ப்பாணத்தில் சுப்பிரமணிய நாவலர் இருக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட குற்றங்களையும் திருத்தி விடுவார்'' என்றார்.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பட்டாள். பப் அவ் விடம் இரண்டு ஆண்டுகள் தொல்காப்பியமும் நன் னூலும் மிகக் கவனமாகப் படித்துத் தேறின பிறகு ஊருக்குக் கௌரியம்மையார் திரும்பி வந்தார்கள்.

முதலியாருடைய ஆரோக்கியத்தில் இதற்குள் கொஞ்சம் குறை ஏற்பட்டு இரண்டு சித்த வைத்தியர் கள் பார்த்து வந்தார்கள். அவர்கள் கொடுத்து வந்த மருந்துகளின் சூட்டினால் சில கஷ்டங்கள் தோன்றின. அதன் பேரில் நெல்லைக்குச் சென்று அவ்விடம் ஆஸ்பத்திரி மருந்து பார்த்தார். ''வயது ஐம்பது ஆனபடியால் குணமடைவது கஷ்டம். பாஷாண மருந்துகளின் வேலை இது. சித்த வைத்தி யத்தில் ரொம்ப ஆபத்து'' என்றார் சீமையில் படித்துத் திரும்பி வந்த டாக்டர் கோவிந்த பிள்ளை.

கௌரியம்மை ஊருக்குத் திரும்பியதாக அறிந்த தும் முதலியாரும், ''சரி, நான் ஊருக்குப் போகிறேன். ஆண்டவன் இட்ட வழி'' என்று டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினர்.

முதலியாருக்குக் கௌரியம்மையை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அம்மையாரும் புருஷனைப் பார்த்து, 'இவரா என் அத்தான்?' எனறு கொஞ்ச நேரம் சந்தேகித்தாள்.

பாட்டை நிறுத்திவிட்டுப் புருஷனுக்கு சிசுருஷை செய்ய முற்பட்டாள். ஆறு மாதத்திற்குள் முதலியாருக்கு உடம்பு தானாக மருந்தில்லாமல் சொஸ்தமாகி விட்டது. இருவரும் சந்தோஷமாக இருந்தார்கள். கற்றுக்கொண்டு வந்த பாட்டாவது தொல்காப்பியமாவது முதலியாரும் கேட்கவில்லை; கௌரியம்மையும் பிரஸ்தாபிக்கவில்லை.

ஒரு பெண் குழந்தை பிறந்தது. மிக்க மகிழ்ச்சியுடன் வள்ளி என்று பெயரிட்டார்கள்.

குழந்தை வள்ளி வளர்ந்தாள்.

பள்ளிக்கூடமே வேண்டாம் என்றார் முதலியார்.

"ஊரெல்லாம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்களே!" என்று கௌரியம்மையார் வாதாடிப் பார்த்தும் பயனில்லை. முதலியார் ஒரே பிடிவாதமாகப் படிப்பு வேண்டாம் என்று சொல்லிவிட்டார். 'நான் பட்டது போதும்' என்று நினைத்தார் போலிருக்கிறது. வள்ளி தப்பினாள்.

பூனையும் குரங்கும்

"அம்மா! அந்தப் பூனையைப் பார்" என்றது குரங்குக் குட்டி தாயைப் பார்த்து. "அது தன் குழந்தையை எப்படித் தூக்கிக்கொண்டு ஓடுகிறது பார். நான் உன்னைக் கையாலும் காலாலும் கட்டிக்கொண்டு தலைகீழாகக் கஷ்டப்பட வேண்டியது ஏன்?" என்று கேட்டது.

"தூக்கிப் பார்க்கட்டுமா உன்னை?" என்று தாய்க் குரங்கு குட்டியைக் கழுத்தைக் கவ்வித் தூக்கிற்று.

"கீச்! கீச்!" என்று கத்தி "வேண்டாம்" என்றது குட்டி. "ரொம்ப வலிக்கிறதம்மா. அந்தப் பூனைக் குட்டி எப்படியோ பொறுத்துக்கொள்கிறது. என்னால் முடியவில்லை."

"நான் உன்னைக் கவ்விக்கொண்டு மரம் ஏறினால் உனக்கு உடம்பெல்லாம் காயமுண்டாகிச் செத்துப் போவாய்" என்றது குரங்கு.

பூனையை ஒரு நாய் துரத்தி வந்தது. அது ஒரே பாய்ச்சலாக ஒரு வீட்டின்மேல் ஏறித் தப்பித்துக் கொண்டது வாயில் கவ்வியிருந்த குட்டிக்கு ஒரு சேதமுமாகாமலே அப்படிக் குதித்து ஏறிக்கொண்டது.

இதையெல்லாம் இரு வைஷ்ணவ பிராம்மணர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் தென்கலை, மற்றொருவர் வடகலை சம்பிரதாயம். "இந்தப் பூனையைப் பார்த்தீரா, சுவாமி?"என்றார் தென்கலைப் பக்தர்.

"பார்த்தேன். குரங்கையும் பார்த்தேன்" என்றார் வடகலைப் பண்டிதர்.

"ஆண்டவன் கருணை இந்தப் பூனையின் உள்ளத்தைப் போல். நம்மை அவன் தானே தூக்கிக் காப்பாற்றுவான். நீயே கதி என்று சர்வமும் அவனிடம் நாம் ஒப்படைத்து விடவேண்டும்" என்றார் பக்தர்.

"அவ்விதம் சொல்வது சரியே. ஆயினும் குரங்குக் குட்டியைப்போல் நாம் ஆண்டவனைத் தழுவிக் கொண்டாலல்லவோ கடைத்தேறுவோம்?" என்றார் பண்டிதர்.

"உம்முடைய வேதாந்த தேசிகர் அப்படிச் சொல்லுகிறாரோ!" என்றார் தென்கலையார்.

"ஆம்! சந்தேகமென்ன?" என்றார் வடகலையார்.

"நம்முடைய ஆழ்வார்கள் அப்படிச் சொல்ல வில்லையே!" என்றார் தென்கலையார்.

இவர்கள் என்னவோ பேசுகிறார்கள் என்று குரங்கு கவனித்துக்கொண்டே யிருந்தது. தன் பேரில் கல்லை எறிந்து தொந்தரவு செய்வார்கள் என்று பயந்து, ஒரு ஓட்டை எடுத்துக் கீழே போட்டது.

"பார்த்தீரா, சுவாமி! உம்முடைய குரங்கின் சுபாவம்? கூரையைக் கெடுத்து மழை ஒழுகச் செய்கிறது. பூனையே மேல் அல்லவா?" என்று கேட்டார் தென் கலையார்.

"உம்முடைய பூனை பாலையும் நெய்யையும் திருடிப் பிழைக்கிறது. எலியைத் தின்று ஜீவிக்கிறது. கீழ்த் தரப் பிராணி. அதைப் பார்த்துப் பக்தி பிரவசனம் செய்கிறீரே! குரங்கல்லவோ உயர்ந்த ஜீவன். பழமும் காயும் அதன் போஜனம். பகவானுடைய சேவக வம்சம். உம்முடைய பூனையைக் கொளுத்தும்!" என்றார் வடகலையார்.

"என்னமோ பேசுகிறீர் சுவாமி! பூனையின் சுத்தம் உம்முடைய குரங்குக்கு உண்டா? நாள் தவறாமல் தன் நாக்கைக் கொண்டு கங்கா ஸ்நானம் செய்கிறது. உம் முடைய குரங்கின் உடலெல்லாம் பேனும் அழுக்கும். கண்டவிடத்தில் ஜல மலம் கழிக்கிறது. பூனை தன் மலத்தைப் பிறர் காணாமல் மண்ணைப் போட்டு மூடு கிறது. ஆஹா! பூனையின் சுசி பிற பிராணிகளுக்கு உண்டோ! பாலைத் திருடுகிறது, வெண்ணெயைத் திருடுகிறது, உண்மை. அது நம்முடைய கண்ணனும் செய்தானல்லவா?"

கண்ணனுடைய கதையைச் சொன்னதும் வட கலையார் வாயைத் திறக்கவில்லை. 'இவருடன் பேசிப்

பயனில்லை. பாவம், இவர் வேதாந்த தேசிகருடைய பிரபந்தங்களைப் படியாதவர்' என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டு போகப் புறப்பட்டார்.

அப்போது இருவருக்கும் ரொம்ப வேண்டியவரான சந்திரசேகர சாஸ்திரியார் அங்கே வந்து சேர்ந்தார். 'இவர்கள் என்ன பூனையும் குரங்கும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். சர்வமும் மாயம் என்பது இவர்களுக்குத் தெரியவில்லையே! தாயாவது குட்டியாவது வீடாவது ஓடாவது! இவையெல்லாம் பொய்யல்லவா?' என்று எண்ணிக்கொண்டு சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீர் சாஸ்திரிகளே?" என்றார் வடகலையார்.

"இல்லை, இந்த வாதங்களெல்லாம் என்னத்துக்கு என்று சிரித்தேன். ஸ்ரீரங்கத்துக் கோயில் விவாதம் கோர்ட்டில் முடிவாச்சே? பார்த்தீர்களா?" என்றார்.

"ஐயோ! பார்த்தேன்" என்றார் வடகலையார். "இந்த அநியாயம் உண்டா?" என்று கேட்டார்.

"கோர்ட்டுக்குப் போனால் அப்படித்தான் ஆகும்!" என்றார் சாஸ்திரியார். அவர் குமாரர் கூனூரில் ஜட்ஜு வேலை.

அணுகுண்டைப் பற்றி அல்ல

மகேச புரத்தில் இரண்டு துஷ்டர்கள் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் குடியிருந்தார்கள். வெளியூரில் இவர்களுடைய கொள்ளையும் மோசமும் முடிந்து விட்டன. இருவரும் ஒருவரையொருவர் மிகவும் சந்தேகித்துக் கொண்டு ஒரே தெருவில் வசித்து வந்தார்கள்.

"என்றைக்கோ ஒருநாள் இந்தக் கிழக்கு வீட்டுக் காரன் நம் வீட்டில் கன்னம் வைத்துத் திருடிவிடுவான்" என்றாள் மேற்கு வீட்டுக்காரன் மனைவி.

"என்றைக்காவது ஒரு ராத்திரி இந்தப் பொல்லா தவன் நம்முடைய வீட்டுக்கு நெருப்பு வைத்து விடு வான்" என்றாள் கிழக்கு வீட்டுக்காரி.

மனைவிகள் பேச்சைக் கேட்டு இரு துஷ்டர் களும் தடியும் துப்பாக்கியும் சேகரித்துக்கொண்டு எப் போதும் பயந்துகொண்டே இருந்து வந்தார்கள்.

"இந்தத் தடியும் துப்பாக்கியும் இருந்து என்ன பயன்? பக்கத்து வீட்டுக்காரப் பயல் அதிகமாக வைத் துக்கொண்டிருக்கிறான். தவிர அவன் தடியன்களை வைத்திருக்கிறான். உங்கள் சாமர்த்தியம் அவர்க ளுடைய துஷ்டத்தனத்துக்கு ஈடாகாது" என்றாள் மேற்கு வீட்டுக்காரி.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்றான் அவ ளுடைய புருஷன்.

"நான் ஒரு பாம்பாட்டியைப் பார்த்துப் பேசி வைத்திருக்கிறேன். அவன் ஒரு விஷப் பாம்பைப் புட்டியில் போட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்லி யிருக்கிறான். அதை வாங்கி வைத்தால் நாம் பிழைப் போம். பக்கத்து வீட்டுக்காரன் நம்மை ஏதேனும் செய்தால் பாம்பை அந்த வீட்டில் விட்டுவிடலாம்" என்றாள்.

"நல்ல ஏற்பாடு" என்றான் புருஷன். "ஆனால் பாம்பு நாம் சொன்னபடி கேட்குமா?" என்று விசா ரித்தான்.

"அதற்கு நாம் தினமும் கொஞ்சம் உணவு போட்டுக்கொண்டு வந்தால் அது நம்மை ஒன்றும்

செய்யாது என்று பாம்பாட்டி சொல்லுகிறான்'' என்றாள்.

''நம்பலாமா?'' என்றான்.

''நம்பலாம்'' என்றாள்.

அப்படியே செய்தார்கள்.

பாம்பாட்டி கெட்டிக்காரன். அவன் இன்னொரு புட்டியில் இன்னொரு விஷப் பாம்பை வைத்துக் கிழக்கு வீட்டுக்காரனுக்கும் ரகசியமாகக் கொடுத்தான்.

சில நாள் கழித்து சங்கதி இருவருக்கும் தெரிந்து போயிற்று. பிறகு ஊருக்கெல்லாமே தெரிந்து போயிற்று. ''இப்படி இவர்கள் விஷப் பாம்பு வைத்திருக்கிறார்களே, இது ஊருக்கே அபாயமல்லவா?'' என்று ஊரார் சிலர் ஆட்சேபித்தார்கள்.

ஆனால் அந்தத் துஷ்டர்கள் ஊராரின் ஆட்சேபணையைப் பொருட்படுத்தவில்லை. ''எங்களுக்குள்ள பயம் எங்களுக்குத்தான் தெரியும். ஊராருக்கு என்ன தெரியும்? நான் பாம்பை விட முடியாது'' என்றான் மேற்கு வீட்டுக்காரன்.

''இரண்டு பேரும் பாம்புகளைப் புட்டியோடு எரித்து விடலாம்'' என்றான் கிழக்கு வீட்டு ஆசாமி.

''இந்த மோசக்காரனை யார் நம்புவார்கள்? அவன் எத்தனை பாம்புகள் எத்தனை புட்டியில் வைத்திருக்கிறானோ யாருக்குத் தெரியும்?'' என்றான் மேற்கு வீட்டுக்காரன்.

''அவன்தானே ஆரம்பித்தான்'' என்றான் கிழக்கு வீட்டுக்காரன்.

ஊரார் பஞ்சாயத்துப் போட்டார்கள். ஒன்றும் முடிவாகவில்லை. கள்ளுதான் ஏராளமாய்ச் செலவாயிற்று.

பழையபடியே ஊரெல்லாம் பயந்து கொண்டிருந்தது. இரண்டு வீட்டுக்காரர்களைப்பற்றிச் சொல்லவேண்டியதே யில்லை. இரவில் அவர்களுக்கு உறக்கமேயில்லை.

"யாராவது ஒருவர் பாம்பைக் கூடையுடன் முதலில் நெருப்பில் போட்டு எரித்துவிட்டால், இந்தப் பயம் தீரும். மற்றவனும் அப்படியே செய்வான். ஏன் தூக்கமில்லாமல், சுகமில்லாமல் வேண்டாத துயரத்தில் சிக்கி யலைகிறீர்கள்?" என்றார் ஊருக்கு வெளியே இருந்து வந்த ஒரு சாமியார்.

"இந்த ஆண்டிக்கு என்ன தெரியும்? இந்தத் துஷ்டனுடைய நடவடிக்கை எங்களுக்கல்லவோ தெரியும்?" என்றாள் மேற்கு வீட்டுக்காரி.

"நாம் நம்முடைய பாம்பை எரித்துவிட்டபின் அந்தக் கிழக்கு வீட்டுக்காரன் தன்னுடைய பாம்பை நம் பேரில் விட்டுவிடுவது நிச்சயம்" என்றாள் அவள்.

கிழக்கு வீட்டுக்காரி, "சரி, இப்படியே கிடக்கட்டும், பார்க்கலாம். என் வீட்டுக்கு நெருப்பு வைத்துப் பார்க்கட்டும். பிறகு என் பாம்பை அவர்கள் வீட்டிற்குள் விட்டுவிடுவேன். அதன்மேல் வேடிக்கை பார்க்கலாம்" என்றாள்.

"நெருப்பு வைத்துவிட்டபின் நீ எங்கே போய்ப் பாம்பை விடுவாய்?" என்றான் புருஷன்.

"நெருப்பு வைக்க வருகிறானே இல்லையோ? அப்போதே முந்திக்கொண்டு நான் அந்த வீட்டுப் புழக்கடையில் புட்டியைத் திறந்து விடுவேன்" என்றாள்.

தூக்கம் என்னவோ இருவருக்கும் இல்லை.

"இந்தத் துஷ்டன் ஏதோ யோசனை செய்து வருகிறான். நாம் ஒன்றுக்கு இரண்டு பாம்பு வைத்தால் தேவலை" என்றாள் மேற்கு வீட்டுக்காரி.

பாம்பாட்டி வேண்டிய பாம்புகளைத் தந்தான். இருவருக்கும் தந்தான். அவனுக்கு நல்ல லாபம்.

ஊராருடைய பயம் அதிகரித்தது. "இத்தனை பாம்புகளைப் பல்லைப் பிடுங்காமல் ஊரில் வைத்துக் கொண்டிருந்தால் எப்போது என்ன ஆகுமோ?" என்று தாய்மார்களெல்லாம் பயந்தார்கள். அந்தத் துஷ்டர்களிடம் பேச ஊரில் ஆண் மக்களுக்குத் தைரியம் இல்லை.

இரு துஷ்டர்களுக்கும் பயம், கவலை, ராத்திரி உறக்கமில்லை. அவர்கள் மனைவிகளுக்கும் உறக்கமில்லை. ஊராருக்கும் பயம் ரொம்ப அதிகமாகப் போயிற்று.

வயல்களைக் கவனிப்பாரில்லை. தொழில்கள் எல்லாம் கெட்டுப் போச்சு. ஊரில் பஞ்சம் ஆரம்பித்தது. மாகாளியம்மன் கண்ணைத் திறந்தாள். வியாதி பரவிற்று. தேசம் பாழாயிற்று.

இப்போது ஆராய்ச்சிக்காரர்கள் குழி தோண்டி அங்கே ஒரு பெரிய நகரம் ஒரு காலத்தில் இருந்தது என்பதைக் கண்டு அதைப் பற்றிப் புதை பொருள் இலாகாவுக்குக் குறிப்புக்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

புலியும் உதவும்

சூரசேனன் கோதாவரிக் கரையில் சந்தாபுரியில் அரசு புரிந்தான். மிக நல்ல ராஜா. அவன் காலத்தில் தபஸ்விகள் பல பேர் இருந்தார்கள். வனத்தில் வாசம் செய்து தவம் செய்து வந்தார்கள். அவர்கள் நினைத்ததெல்லாம் முடிவு பெறும்.

அந்த ரிஷிகளுக்குள் ஒருவருக்கு எப்போதும் பிறருடைய குற்றங்களைக் காண்பதுவே வழக்கம். இதை ராஜா கண்டுகொண்டு, "சுவாமி! தாங்கள் நாராயண மகா அரணியத்தில் தவம் செய்தால் நன்ருக இருக்கும்" என்று கேட்டுக்கொண்டான். அந்த அரண்யம் வெகு தூரத்தில் இருந்த ஒரு காடு.

அவரும் அப்படியே செய்தார். பக்கத்தில் ஜன சஞ்சாரம் அதிகமாக இல்லாத இடம். ஆனபடியால் அவருடைய கவனம் மக்களைப் பற்றிச் செல்லவில்லை. காட்டில் மிருகங்களைக் கவனித்து வந்தார்.

மிருகங்களின் நடவடிக்கையும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஒன்றை ஒன்று கொன்றும் தின்றும் வருவதைப் பார்த்தார். "இது என்ன தவருன வாழ்க்கை. இதை நிறுத்திவிட வேண்டும்" என்று தீர்மானித்தார். அதற்காகத் தவம் செய்தார்.

"மகாதேவா! இந்தப் பிராணிகள் ஒன்றையொன்று கொன்றும் தின்றும் இம்சை செய்வதைப் பார்த்து வருகிருயே! இதை நீ நிறுத்திவிடக் கூடாதா!" என்று வேண்டிக்கொண்டு தவம் செய்தார்.

கடினமான நோன்புகளை மேற்கொண்டு தவம் செய்தார்.

"நான் இருக்கும் காட்டிலாவது இந்தப் பிராணிகளுக்கு நற்புத்தி கொடுப்பாயாக. ஜீவகாருண்ய மார்க்கத்தில் வாழச் செய்வாயாக!" என்று கேட்டுக் கொண்டார்.

மகாதேவனும் இதற்கு இரங்கி, "அப்படியே!" என்று வரம் தந்தான்.

அதன் பிறகு அந்த நாராயண வனத்தில் புலி புல் தின்ன ஆரம்பித்தது. சிறுத்தை, ஓநாய், நரி


RATHI-
KALKI

முதலிய எல்லா மிருகங்களும் புல்லும் பழமும் ஆகாரமாகக் கொண்டுவிட்டன. மான்களும் மற்ற சாந்த மிருகங்களும் ஆனந்தமாகப் பெருகின. பறவைகளும் புழுப் பூச்சிகளைத் தேடாமல் ஜீவகாருண்ணியம் மேற்கொண்டுவிட்டன.

மான்களும் பன்றிகளும் காடு நிறைந்து பக்கத்துக் கிராமங்களிலும் வயல்களிலும் வீடுகளிலும்கூடப் பிரவேசித்து வயல்களைப் பாழ் செய்தும் வீடுகளிலும் புழக்கடைகளிலும் சேகரித்திருக்கும் பண்டங்களைத் தின்னவும் ஆரம்பித்தன. குரங்குகள் லட்சக்கணக்காக நாடெல்லாம் பரவின. எங்கே பார்த்தாலும் நாய்கள், நரிகள்.

நாராயண அரணியப் பிரதேசத்தில் கிராமங்கள் எல்லாம் பாழாய்ப் போயின. குடிமக்கள் எல்லாரும் ஊர் ஊராகப் பரதேசிகளாகத் திரிந்தார்கள். சந்தாபுரி ராஜாவுக்குச் செய்தி வந்தது. அரசனைக் கண்டு சொல்லிக்கொள்ள ஒரு கூட்டமும் வந்துவிட்டது.

அரசன் விசாரித்தான். நிலைமையை அறிந்து கொண்டான். எல்லாம் தன்னுடைய ஜீவகாருண்ணிய ரிஷியின் வேலை என்பதைத் தெரிந்துகொண்டான். அவரைக் காண நாராயணவனம் சென்றான்.

"சுவாமி, தயவு செய்து நம்முடைய சந்தாபுரிக்கு எழுந்தருள வேண்டும். சர்வக்ஞனான பிரமனுடைய ஏற்பாடுகளை நாம் சீர்திருத்தம் செய்ய இயலாது" என்று விண்ணப்பம் செய்துகொண்டான்.

அவரும் அடக்கத்துடன் நகரத்துக்கு வந்துவிட்டார். அவரைக் கொண்டு அரசன் ஒரு வேள்வி நடத்தினான். புலியும் நரியும் பழையபடி தம்முடைய

இயற்கை ஆகார முறைக்குத் திரும்ப வேண்டும் என்று வேள்வியில் பிரார்த்தனை நடந்தது.

மகாதேவனும் சம்மதித்து மிருகங்களுக்கு ஆக்ஞை இட்டான். "பழைய முறையில் உங்கள் பசியைத் தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று ஆணையிட்டான்.

அதன் பிறகு காட்டில் மிருகங்கள் வரம்புக்குள் பெருகியும் வாழ்ந்தும் வந்தன. கிராமவாசிகள் மறுபடி தத்தம் ஊர்களில் பயமின்றிக் குடியிருக்க ஆரம்பித்தார்கள்.

ஜீவகாருணிய முனிவர் பிறரிடம் குற்றம் கண்டு பிடிப்பதை விட்டுவிட்டார்.

கழுதையும் மூட்டையும்

அழுக்கு மூட்டை ஏற்றிக் கழுதையை ஓட்டிக் கொண்டிருந்தான் வண்ணான். நம்முடைய நாட்டுக் கழுதைகள் தெரியுமே, பிறப்பு, தீனி, பலம் எல்லாம் மட்டம். கழுதைமேல் ஏற்றும் இரட்டை மூட்டையும் உங்களுக்குத் தெரியும், இரண்டு பக்கம் சம பாரமாகத் தொங்கும், கழுதையின் முதுகு வளைந்து போகும்.

இப்படிப் போய்க் கொண்டிருக்கும்போது மூட்டை கழுதையுடன் பேச ஆரம்பித்தது. "ஏ, கழுதையே! உன்னைப்போல் சாதுவை நான் கண்டதில்லை. எவ்வளவு அடித்தாலும் கேட்டுக் கொண்டிருக்கிறாய். உன்னைப் பற்றி எனக்குப் பரிதாபமாக இருக்கிறது."

இப்படி மூட்டை சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு அடி கொடுத்தான், பின்னால் நடந்து வந்த வண்ணான்.

"உன்மேல் நான் ராஜா மாதிரி சவாரி செய்கிறேன், தெரியுமா? அரமனைக் குதிரையைப்போல் தலை தூக்கி நட. தொங்கப் போட்டுக்கொண்டு நடக்காதே" என்றது மூட்டை.

பாவம் கழுதைக்கு அடி வேறு; அவமானம் வேறு.

"அழுக்கு மூட்டையே! அகங்காரப்பட வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் என்ன ஆகப் போகிறது பார்!" என்றது கழுதை.

"என்ன ஆகப் போகிறது? ஒன்றுமில்லை. பேசாமல் நட!" என்றது மூட்டை.

ஆற்றண்டை வந்ததும் வண்ணன் மூட்டையை எடுத்துக் கரையில் வைத்துவிட்டுக் கழுதையைப் புல் மேய விட்டுவிட்டான். அது ஆற்றில் தாகம் தீர்த்துக் கொண்டு கரை மேல் சந்தோஷமாக ஓடிச் சென்றது.

மூட்டையை அவிழ்த்துத் துணிகளைப் பிரித்து வண்ணனும் அவன் மனைவியும் துவைக்க ஆரம்பித்தனர். "உஸ்! உஸ்" என்று கல்மேல் போட்டு அடித்தார்கள்.

கழுதை மேலே கரையில் நின்று பல்லைக் காட்டிற்று. "அடி! போடு! இன்னும் போடு!"" என்றது. "அகங்காரத்தை நன்றாகக் கசக்கிப் பிழிந்து போடு! அடி! இன்னும் போடு!" என்றது.

"ஐயோ, போதும், இனிமேல் அப்படிப் பேச மாட்டேன்!" என்றது துணி.

வண்ணன் அதைக் கேட்கவில்லை. அது பேசியதும் அவனுக்குத் தெரியாது. அவன் கவனம் எல்லாம் துவைப்பதில். அடியடி என்று அடித்துக் கொண்டே இருந்தான். இப்படியே துணிகளை



எல்லாம் துவைத்துவிட்டு வெயிலில் புல் தரையில் விரித்து உலர வைத்தான்.

"புத்தி வந்ததா?" என்றது கழுதை.

"வந்தது அப்பனே!" என்றது துணி.

"இன்னும் உன் கதை முடியவில்லை, அப்பனே!" என்றது கழுதை.

"ஐயோ, அதுவென்ன? சொல்!" என்றது வெள்ளைச் சொக்காய்.

"வீட்டுக்குப் போனபின் உனக்கே தெரியும். இப்போது சொல்ல அவசரமில்லை!" என்றது கழுதை.

வீட்டில் துணிகளை மடித்து இஸ்திரி போட்டான் வண்ணான். சுடச்சுட இஸ்திரிப் பெட்டியை வைத்தான் சொக்காய் பேரில்.

"ஐயோ! செத்தேன்!" என்றது சொக்காய். வண்ணான் காதில் அது ஏறவில்லை. அவன் பாட்டுக்கு அழுத்தி இழுத்தான். மூச்சு நின்று போயிற்று சொக்காய்க்கு.

"அற்ப நேரம் என் முதுகின் பேரில் சவாரி செய்தாய். என்னவென்னவோ பேசினாய். இப்போது என்ன சொல்லுகிறாய்?" என்றது கழுதை வாசலிலிருந்து.

"அப்பா தம்பி! நீ சும்மா இரு. எனக்குப் புத்தி வந்தது. சவாரியும் போதும். பிறகு கஷ்டமும் போதும். இனிமேல் நான் உன்மேல் ஏறமாட்டேன்" என்றது.

"உன் கதி இதுவே, நீ கிழிந்து குப்பைக்குப் போகும் வரையில் வண்ணான் கையில் இதையெல்லாம் அநுபவிக்க வேண்டும். தெரிந்துகொள்" என்றது கழுதை.

"நீ படும் கஷ்டம் பெரிதல்ல. என் கஷ்டமே பெரிது" என்றது துணி.

‘உப்புக்காக நக்குகிறது’

“அப்பனே! கன்றை ஏமாற்றிப் பால் கறந்து கொண்டு போகிறாய். அதில் தண்ணீர் சேர்த்து விற்கிறாயே. என்னுடைய பால் நன்றாக இல்லை என்று எல்லாரும் ஏசுகிற பேச்சு எனக்குக் கேட்கக் கஷ்டமாக இருக்கிறதே!” என்று நெல்லூர்ப் பசுமாடு எஜமானனிடம் சொல்லிற்று, கன்றை நக்கிய வண்ணமாக. அவனுக்குப் பசுவின் பாஷை விளங்கவில்லை.

“நல்ல தீனியாவது தரக்கூடாதா?” என்றது பக்கத்திலிருந்த எருமை.

“தண்ணீர் சேர்க்கும்போது நல்ல தண்ணீரையாவது சேர்” என்றார் அந்த வீட்டுக்காரர். அவர் ஒரு டாக்டர்.

“தண்ணீர் சேர்ப்பேனா நான்? அந்த வியாபாரம் என்னிடம் கிடையாது” என்றான் பால்காரக் கந்தசாமி, படியைச் சாய்த்து.

“டின் பாத்திரத்தின் ஓசையைப் பாருங்கள். தண்ணீர் இருந்தால் இப்படிச் சத்தம் உண்டாகுமா?” என்று சொல்லி அவசரம் அவசரமாகக் கறந்தான் பால்.

“இந்தப் பட்டணத்தில் மாட்டுக்கே தண்ணீர் சேர்த்துவிடுகிறார்கள்” என்றான் கம்பவுண்டர் சிறுவன்.

“அது எப்படி?” என்றார் டாக்டர்.

“மாட்டுக்குத் தின்ன நிறைய உப்புக் கொடுத்தால் நிறையத் தண்ணிப் பாலாகக் கறக்கும்” என்றான் கம்பவுண்டர்.

“கொஞ்சம் கூடச் சேர்த்துப் பணம் கொடுத்தால் ஒன்றும் கலக்கமாட்டோம். நல்ல பாலே தருவோம்” என்றான் பால்காரன்.

"இப்போதே விலை அநியாயமாக ஏறிப் போச்சு. இன்னும் வேண்டும் என்கிறாயா? என்ன தந்தாலும் தண்ணீர் சேர்த்துத்தான் விடுவீர்கள்" என்றாள் டாக்டர் மனைவியம்மாள்.

"புல் விலை என்ன? தவிடு விலை என்ன? புண்ணாக்கு விலை என்ன? எல்லாம் ஏறிப்போச்சு. பாலும் மோரும் மட்டும் ஏறாமல் இருக்குமா? உங்கள் சம்பளம் எல்லாம் ஏறவில்லையா?" என்றான் பால் காரன். அவன் தைரியசாலி. போக்கிரியுங்கூட.

இந்தப் பேச்சையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கன்றுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பால் என்றால் என்ன? அதற்கு எப்படித் தண்ணீர் சேர்க்கிறது? ஒன்றும் அதற்குத் தெரியவில்லை.

"அம்மா! பால், பால் என்கிறார்களே அது என்ன அம்மா?" என்றது.

பசுவின் கண்களில் நீர் வடிந்தது. தன் கன்றை அழுத்தி நக்கிற்று.

"அண்ணா! பசு ஏன் இப்படிக் கன்றைச் சும்மா நக்குகிறது?" என்றான் டாக்டரின் கடைசி மகன்.

"கன்றின் உடம்பில் உப்பு ஊறுகிறது. தாய்க்கு உப்பு வேண்டும். அதற்காக நக்குகிறது" என்றார் டாக்டர். அவர் இந்த விஷயமெல்லாம் படித்தவர். படித்துக் கல் மனம் பெற்றவர்.

ஸோஷல் ஸர்விஸ்

தாமரைப்புரத்தில் பெரிய கல்லூரி. இந்த ஊரைப் படத்திலாவது புத்தகத்திலாவது தேடாதீர்கள். அது உண்மைப் பெயரல்ல.

கல்லூரி மாணவர்கள் 'ஸோஷல் ஸர்விஸ்' செய்யப் புறப்பட்டார்கள். கணக்கு வாத்தியாரின் தலைமையில் புறப்பட்டார்கள். 'ஸோஷல் ஸர்விஸ்' என்றால் ஏழைகளுக்கு உபகாரம் செய்வது.

பக்கத்தில் வேட்டுவன் பட்டியில் மழை அதிகமாகப் பெய்து வீடுகளுக்குச் சேதம் உண்டாயிற்று.

மாணவர்கள் புறப்பட்டார்கள். திமுதிமு வென்று லாரியிலிருந்து கிராமத்தில் இறங்கினார்கள்.

அவர்களைப் பார்த்ததும் "சுவாமி! வீடுகளெல்லாம் ஒழுகி ரொம்பக் கஷ்டப்படுகிறோம்" என்றார்கள் அந்தக் கிராமத்துக் குடிகள்.

"எல்லாவற்றையும் நாம் சரிப்படுத்திவிடுகிறோம்!" என்றார் கணக்கு வாத்தியார்.

"ஏறுங்கள் வீட்டு மேலே!" என்றார் வாத்தியார். மாணவர்கள் கொஞ்சம் தயங்கினார்கள். அவர்களுக்கு இந்த விதமான காரியங்கள் புதிசு.

"ஏன் சும்மா நிற்கிறீர்கள்? நான் ஏறிக் காட்டுகிறேன்!" என்று கணக்கு வாத்தியார் ஏறினார். கிழவர் ஏறியதைக் கண்டு மாணவர்களும் ஏறினார்கள். சிலர் ஏறிக் கூரைமேல் நின்றார்கள். அவர்களைக் கூரை மேல் பார்த்ததும் மற்றவர்களுக்கு உற்சாகம் உண்டாயிற்று. எல்லாரும் வேகமாக ஏறினார்கள்.

"ஐயோ! ஈர ஓட்டின்மேல் இப்படி ஏறி நடந்தால் எல்லாம் உடைந்து போகுமே!" என்று கதறினாள் வீட்டுக்காரி.

அப்படியே ஆயிற்று! இங்கும் அங்கும் நடந்து ஓட்டைப் பார்த்தார்கள். நடந்த இடமெல்லாம் ஓடு உடைந்தது. மழையில் சேதமாகாத ஓடுகளும் உடைந்

தன. கணக்கு வாத்தியாருக்கு ஈர ஓடுகளின் விஷயம் தெரியாது. மாணவர்கள், பாவம், என்ன கண்டார்கள்?

"கீழே இறங்குங்கள்! இறங்குங்கள்!" என்று அந்த வீட்டுக்கார ஏழை பலமாகக் கத்தினன். எல்லாரும் இறங்கினர்கள்.

"பயப்படாதே, அண்ணனே! நாம் எல்லாம் சரிப்படுத்திவிடுவோம். புது ஓடுகள் வாங்கப் பணத்துக்கு எழுதி வரவழைத்து எல்லாம் மராமத்துச் செய்துவிடுவோம்" என்ருர் கணக்கு வாத்தியார்.

அவர்கள் தாமரைப்புரம் திரும்பினர்கள். அந்த ராத்திரியும் வேட்டுவன் பட்டியில் மழை பெய்தது. ஏழை வீட்டில் குழந்தை குட்டிகள் ரொம்பக் கஷ்டப்பட்டார்கள். வீட்டுக்காரி தன் புருஷனை மிகவும் நொந்துகொண்டாள்.

"இந்தமாதிரிக் குரங்குகளை வீட்டின்மேல் ஏற்றி எல்லாம் கெடுத்தீர்களே!" என்று சொல்லிச் சொல்லி அழுதாள்.

பாவம், அவன் என்ன செய்வான்! வாத்தியாருடைய அறியாமையும் சோஷல் ஸர்விஸ் ஊக்கமும் இப்படி முடிந்தது.

கணக்கு வாத்தியார் மேலுக்கு எழுதி எழுதிப் பார்த்தார். உடைந்த ஓடுகளுக்குப் பர்த்தி செய்யப் பணம் கொடுக்கச் சொல்லி விண்ணப்பம் செய்தார். சர்க்கார் காரியதரிசி முடியாது என்று சொல்லிவிட்டார். மாணவர்களும் வாத்தியார்களும் பாவம் தங்களுக்குள்ளேயே பணம் வசூல் செய்து குடியானவனுக்குக் கொடுத்தார்கள். இதற்கு மூன்று மாதங்களாயிற்று.

ஈர ஓட்டின் மேல் அவசரப்பட்டு ஏறக்கூடாது என்கிற படிப்பை அடைந்தார்கள். வசூலித்த பணத்

தைக் கொடுக்க அந்தக் கிராமத்துக்கு வாத்தியாரும் சில மாணவர்களும் சென்றார்கள்.

"நீங்கள் மகாராஜாவாக இருங்கள்!" என்றாள் வீட்டுக்காரி. பணத்தைக் கண்டதும் அவளுக்கு வெகு சந்தோஷம்.

வாத்தியாருக்கும் ரொம்ப சந்தோஷம், அவளிடம் 'திட்டு வாங்காமல் திரும்பினோமே!' என்று.

'இனிமேல் அவசரப்பட்டு நமக்குத் தெரியாத காரியங்களில் பிரவேசிக்கக் கூடாது' என்று மாணவர்கள் தீர்மானித்தார்கள்.

'ஓடு எப்படிச் செய்கிறார்கள்? எங்கே செய்கிறார்கள்?' என்றெல்லாம் தெரிந்து கொள்ள அந்தக் கிராமத்துக் குயவன் வீட்டண்டை சென்றார்கள். களி மண்ணையும் சக்கரத்தையும் குயவன் வேலையையும் பார்த்தார்கள். களிமண்ணிலிருந்து பாண்டங்கள் உண்டாவதைப் பார்த்து மாணவர்கள் வியந்தார்கள்.

"போகலாம், திரும்பிப் போகலாம்! நேரமாயிற்று!" என்று வாத்தியார் சொன்னார். மாணவர்களுக்கு அந்த இடத்தை விட்டுத் திரும்பவே மனமில்லை.

கூத்தன் தன் கூத்து

நந்திவர்மனுடைய அரமனை நந்தவனத்தில் ஒரு குயில். அது மிக அழகாகப் பாடும். ராஜகுமாரிக்கு அதன் மேல் மிகப் பிரியம்.

ஒரு நாள் தீபாவளியன்று ஏதோ பிசகு ஏற்பட்டு அரமனையில் நெருப்புப் பற்றிக்கொண்டு பயங்கரமாகப் பரவி விட்டது. ஊரெல்லாம் வந்து கூடி நெருப்பை

அணைக்க எல்லாரும் மண்ணும் தண்ணீரும் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நந்தவனத்தில் குயில் தன் பாட்டுக்கு வழக்கம் போல் பாடிக்கொண்டே யிருந்தது. "அரமனை தீப்பற்றியெரிகிறது! இந்தக் குயில் பாடிக் கொண் டிருக்கிறது!" என்று அரமனை அதிகாரி கோபித்துக் கொண்டு ஒரு கல்லை வீசினன். அது பறவைமேல்பட்டு, பறவை கீழே விழுந்து புரண்டு செத்துப்போயிற்று.

தீயை அணைத்து விட்டார்கள். அதிகச் சேதம் இல்லை. எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். ராஜ குமாரி நந்தவனத்துக்கு வந்தாள். குயில் இறந்து கிடப்பதைப் பார்த்தாள். அவளுக்குத் துயரம் பொறுக்க முடியவில்லை. அரசனிடம் அழுதாள்.

அதிகாரி விஷயத்தைச் சொன்ஞன். ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. "அரமனை யதிகாரியே! குயி லுக்குப் பாடத்தான் தெரியும் என்பது உமக்குத் தெரிய வில்லையா? அது வாளியை எடுத்துத் தண்ணீர் மொண்டு வருமா? தீயை அணைக்க அது என்ன செய்ய முடியும்? அதைக் கொன்றீரே!" என்று அரசன் அதிகாரியைக் கண்டித்தான்.

"மன்னனே! தவறு செய்து விட்டேன். குயிலுக் குப் பாடத்தான் தெரியும், தண்ணீர் மொள்ளத் தெரி யாது என்பதை என் ராஜபக்தியினல் மறந்து விட்டேன். உங்களிடத்தில் எனக்குள்ள பக்தியினல் அறிவு இழந்தேன்" என்ருன்.

"அவரவர்களுக்கு அவரவர்கள் தொழில்தான் தெரியும். குயிலுக்குப் பாடத்தான் தெரியும். அரமனை யதிகாரிக்குக் காவல் வேலைதான் தெரியும். எனக்குத் தண்டிக்கத்தான் தெரியும். நீ உன் உடுப்பைக் கழற்றி


RATHI–
KALKI.

வைத்து விட்டு, வீட்டுக்குப் போகலாம். வேலே யிலிருந்து நீக்கப்பட்டாய்'' என்ருர் பக்கத்திலிருந்த மந்திரி.

''அப்பா! இவரை வேலேயிலிருந்து நீக்க வேண் டாம். குயில் செத்தது போதும். இவருடைய வீட்டில் பெண்டு பிள்ளேகள் அழுவார்கள். அது வேண்டாம்'' என்று ராஜகுமாரி வேண்டிக் கொண்டாள்.

''உனக்குக் கண்ணீர் விடத்தான் தெரியும்!'' என்று அரசன் தன் மகளே எடுத்து அணேத்து முத்த மிட்டான்.

''பார்த்தாயா பார்வதி?'' என்ருன் பரமசிவன். ''உனக்குக் கண்ணீர் விடத்தான் தெரியும் என்கிருன் நந்திவர்மன் தன் மகளேப் பார்த்து—உனக்கு அது தானே தொழில்?'' இவ்வாறு ஆண்டவன் பார்வதிக் குச் சொல்லிச் சிரித்தான்.

''குற்றங்களே நீர்தானே உண்டாக்குகிறீர்? நீர் தான் பெரும் பிழைக்காரர். பரிவு காட்டவே தான் நான் இருக்கிறேன் அல்லவா?'' என்ருள் பகவதி.

''ஆமாம். குயிலே!'' என்ருன் சிவன்.

''என் கூத்தில் குறையொன்றுமில்லே. தூரத்தில் நின்று பார்ப்பவர்களுக்குக் குறையிருப்பது போல் தோன்றும். அவர்களுக்காக நான் ஆடவில்லேயே! உனக்காகத்தானே ஆடுகிறேன்!'' என்று சொல்லிப் பிராட்டியை மகிழ்வித்தான்.

பிரிவினேக் கதை

ஒரு செட்டியார் நான்கு பிள்ளேகளே விட்டுவிட்டு இறந்து போனர். குமாரர்கள் எல்லாருக்கும் வயது ஆகி விவாகமாகி நான்கு மனேவிமார்களும் வீட்டுக்கு

வந்து எல்லாரும் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

நான்கு மனைவிகளுக்குள் சண்டையும் சச்சரவும் அடிக்கடி உண்டாகும். சிறு விஷயங்களைப் பற்றி என்று புருஷன்மார் அவற்றைக் கவனிக்கவில்லை. கவனித்தாலும் மனைவிகள் சமாதானமடைய மாட்டார்கள். தினமும் ஏதாவது ஒரு சிறிய சச்சரவு இருந்து கொண்டே யிருக்கும். இரவில் யாருக்குமே சரியாக உறக்கமில்லை.

இரவும் பகலும் அந்த வீட்டில் நடக்கும் சச்சரவு பக்கத்து வீட்டார்களுக்கெல்லாம் கஷ்டமாக இருந்தது.

தகப்பனுர் ரொம்பச் சொத்து வைத்துவிட்டுப் போயிருந்தார். பணமும் நகைகளும் பெட்டிகளில் போட்டுப் பத்திரமாக ஒரு அறையில் வைத்திருந்தார்கள். இதன்மேல் ஒரு கன்னக்கோல் திருடனுக்கு ரொம்ப நாளாகக் கண். ஆனுல் அவனுக்குச் சரியான சந்தர்ப்பம் சிக்கவில்லை. இரவில் அந்த வீட்டில் யாரேனும் இருவர் மூவர் சண்டை போட்டுக்கொண்டே இருந்தபடியால் எல்லாரும் விழித்தே இருந்தார்கள். திருடனுக்கு அவகாசம் ஏற்படவில்லை.

மூத்த சகோதரன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் தம்பிகள் கேட்கவில்லை.

"நாம் பிரிந்து போனுல்தான் சவுகரியம். இந்தப் பெண்கள் தினமும் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறுர்கள். பிரிந்து போனேமானுல் இது அடங்கும்" என்று வாதாடிக்கொண்டே வந்தார்கள்.

இதற்கு இன்னது செய்வது என்று தெரியாமல் மூத்தவன் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தான்.

பிறகு ஒருநாள் அவன் மனைவி "இந்தச் சள்ளை தீர்ந்தால் நல்லது. பிரித்துக் கொடுத்துவிடுங்கள்" என்று சொன்னாள். அவனும் அதுவே சரியென்று வருத்தத்துடன் தீர்மானித்தான்.

சொத்துக்களைப் பிரித்துக் கொண்டு தொட்டி வீட்டையும் நான்காகப் பிரித்து, செங்கல் சுவர்கள் எழுப்பிவிட்டு வெவ்வேறாகச் சமையலும் குடித்தனமும் செய்ய ஆரம்பித்தார்கள்.

பக்கத்து வீட்டுக்காரர்கள், "அப்பாடா! நிம்மதியாயிற்று. இனித் தூங்குவோம். இரவில் இனி இரைச்சல் இல்லை!" என்று சந்தோஷப்பட்டார்கள்.

* * *

ஒரு வாரம் எல்லாரும் சுகமாக 'கப்சிப்' என்று வாழ்ந்தார்கள்.

திருடன் "இதுதான் சமயம்" என்று தீர்மானித்தான்.

அமாவாசை கழிந்து இரண்டாம் நாள்—ஞாயிற்றுக்கிழமை,—திருடர்களுக்கு அது நல்ல திதியும் வாரமும்—அந்த இரவு இரண்டு மணிக்குச் சரியாகத் திருடன் கன்னம் வைத்தான். எல்லாரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு கஷ்டமும் தடையுமில்லாமல் திருடன் புதிதாகப் போட்டிருந்த சுவர்களில் செங்கல் பெயர்த்து எடுத்துவிட்டு எல்லாருடைய அறைகளிலும் ஒன்றன் பின் ஒன்றாகப் பிரவேசித்தான். கதவுகளை உள்ளிருந்து திறந்துவிட்டுப் பெட்டிகளைத் தூக்கித் தூக்கி வெளியே இருந்த தன் கூட்டாளிகளிடம் கொடுத்துவிட்டுப் பணம் நகைகள் எல்லாவற்றையும் வெளியேற்றிவிட்டான். காரியமெல்லாம் முடிந்த பின் மூத்தவனுடைய சமையலறையில் பெரிய

திருடன் புகுந்து அங்கிருந்த சோறும் ஊறுகாயும் எடுத்து வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டுச் சத்தம் செய்யாமல் போய்விட்டான்.

காலையில் எழுந்து பார்த்தார்கள். "ஐயோ!" என்று நான்கு மனைவிகளும் கதறினார்கள்.

ஊராருக்குக் கொஞ்சம் சந்தோஷமே. இந்தச் செட்டிமார்களின் செல்வத்தைப் பார்த்து அவர்களுக்கு வெகு நாட்களாக ஓரளவு பொறுமையாக இருந்தது.

மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் அனுதாபப் பேச்சுப் பேசினார்கள்.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
சண்டைகள் எத்தனையிருந்தாலும்
ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
பிரிவினை செய்துகொண்டால்
பின்னனைவர்க்கும் கேடே
அனைவர்க்கும் கேடே"

என்று ஊர்க் குழந்தைகள் பாரதி பாட்டை மாற்றிப் பாடினார்கள்.

ஒரு காக்கை வீட்டுக்குமேல் உட்கார்ந்து கொண்டு, "தெரிந்ததா? தெரிந்ததா?" என்று கத்திக்கொண்டிருந்தது.

நான்கு மனைவிகளும் ஒரு மூலையில் தலைமேல் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தார்கள்.

பூச்சியும் புழுவும்

வண்ணத்துப் பூச்சி ஒன்று நந்தவனத்தில் செடியிலிருந்து செடிக்குப் பறந்து பூக்களில் உட்கார்ந்து தேன் குடித்துக்கொண்டு சந்தோஷமாகக் காலம் கழித்

தது. ஒரு செடியில் இலைமேலிருந்த புழு ஒன்றை அது பார்த்தது. பார்த்துச் சிரித்தது.

“ஏய் புழுவே! நீயும் ஒரு பிராணியாக இருக்கிறாயே. உனக்கு வெட்கமில்லையா?” என்று அதை ஏளனம் செய்தது.

“என் பாட்டுக்கு நான் இருக்கிறேன். எனக்கு என்ன குறை?” என்றது புழு.

“உனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் எப்படிப் பறக்கிறேன் பார். சிறகு இல்லாமல் இலையில் ஒட்டிக் கொண்டு நீ ஊர்ந்து ஊர்ந்து செல்கிறாயே, உன் இழிவான வாழ்க்கையில் நீ திருப்தியாக இருக்கிறாயே! உன்னைப் போன்ற மடப் பிராணியை நான் பார்த்ததில்லை!” என்றது பட்டுப் பூச்சி.

“அண்ணே! நீயும் கொஞ்ச நாளுக்கு முன் புழுவாகத்தான் இருந்தாய். அது உனக்கு ஞாபகமில்லையா?” என்றது ஒரு குருவி வண்ணப் பூச்சியைப் பார்த்து.

“பொய் சொல்லாதே! நாவது புழுவாவது. நான் எப்போதும் இப்படித்தான் இருப்பேன்” என்றது பூச்சி.

இப்படிச் சொல்லிவிட்டுத் தன் காதலன் ஆண் பூச்சியுடன் பறந்து போயிற்று. சிலகாலம் கழித்துப் பூச்சிக்குப் புத்திரப் பேறு உண்டாயிற்று. இடம் பார்த்து முட்டைகள் இட்டது. ரொம்ப மகிழ்ச்சியுடன் பூச்சியானது முட்டைகள் இட்டு அவை பொரிவதற்குக் காத்திருந்தது.

ஒருநாள் முட்டைகள் பொரிந்தன. “ஐயோ! இதுவென்ன அநியாயம்? எல்லாம் புழுக்களாயிருக்கின்றனவே? என் குழந்தைகள் என்னைப்போல் அல்லவா இருக்கவேண்டும். இது என்ன சாபம்” என்று அழுதது.



"நீ புழுவை அவமதித்துப் பேசினாயே, அது ஒரு வேளை சாபமிட்டிருக்கலாம்" என்றது ஆண் பூச்சி.

"இல்லை இல்லை. அந்தப் புழு நல்ல புழு. அது சாபம் இட்டிருக்க முடியாது" என்றது பெண் பூச்சி.

கொஞ்ச நேரம் கழித்து, "எனக்கு ஏனோ இந்தப் புழுக்களைக் கண்டால் இப்போது அன்பாகவே இருக்கிறது. முன்போல் இல்லை!" என்றது பூச்சி.

"ஆச்சரியம்தான். எனக்கும் அப்படியே இருக்கிறது" என்றது அதன் புருஷன்.

சில நாள் கழித்துப் புழுக்கள் எல்லாம் பூச்சிகளாய்ச் சிறகு கொண்டு பறந்தன.

"இதோ பார் உன் குழந்தைகள்!" என்றது குருவி.

"புழுவெல்லாம் பூச்சியாய்ப் போச்சே. இப்படியும் உண்டா!" என்றது பூச்சி.

தாய்ப் பூச்சி சின்னப் பூச்சிகளைப் பார்த்து, "குழந்தைகளே! நீங்கள் புழுக்களாக இருந்தீர்களே, ஞாபகமிருக்கிறதா? என் குழந்தைகளாகப் பிறந்தீர்களே?" என்றது.

இதைக் கேட்ட சின்னப் பூச்சிகளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தாயைக் கவனிக்காமல் பறந்து போயின. அவையும் பூக்களில் தேன் குடிக்க ஆரம்பித்தன. தாயையும் தகப்பனையும் கவனிக்கவே யில்லை.

"இந்த உலகம் கெட்ட உலகம். பெற்ற தாயைக் குழந்தைகள் கவனிப்பதில்லை" என்றது கிழப் பூச்சி துக்கத்துடன்.

"ஆமாம், கண்ணே! தூக்கம் வருகிறது. நாம் கண்ணை மூடிக்கொண்டு இனிச் சும்மா இருப்போம்" என்றது பெரிய பூச்சி.

இரண்டும் இருந்த இடத்தில் அப்படியே தூங்கிப் போயின. சுகமாகத் தூங்கிப் போயின.

மறுபடியும் விழித்து எழுந்திருக்கவேயில்லை. ஒரே உறக்கம்.

ராஜா ராணி வேஷம் போட்டு விளையாடுகிருர்களே நாடகத்தில், அந்த மாதிரிப் புழுக்கள் கொஞ்ச நாள் பறக்கும் பூச்சிகளாக விளையாடுகின்றன. பிறகு சுகமாகத் தூங்கிப் போகின்றன. தூங்கி எழுந்திருப்பதே இல்லை. அவை ஒரு பாவமும் செய்யாத பிராணிகள். நேராக ஆண்டவனிடம் போய்ச் சேர்ந்துவிடுகின்றன.

* * *

சில ஏழைகள் அதிர்ஷ்டம் அடைந்து பணக்காரர்கள் ஆகிருர்கள். அவர்களில் சிலர் தங்களுடைய முந்திய நிலைமையை மறந்துவிட்டுக் கர்வமாக நடந்து கொள்கிருர்கள். அதற்கு, புழுக்கள் பூச்சிகளாகித் தம் பூர்வ வடிவத்தை முற்றிலும் மறந்துவிடுவதை உபமானமாகச் சொல்லுவதுண்டு. ஆனால் அப்படிக் கர்வப்படும் மனிதர்கள் பூச்சிகளைப்போல் ஒரு பாவமும் அறியாத அப்பாவிகளல்ல. தவிர அவர்கள் பூச்சிகளைப் போல் பழைய ஜென்மத்தை முற்றிலும் மறந்து போவதில்லை. நினைவு இருந்து கொண்டே கர்வப்படுகிருர்கள். புழு பூச்சிகளைப்போல் அவர்களுக்குச் சுகமான உறக்கமும் இல்லை. அந்த மனிதர்களைப் பார்த்து நாம் பரிதாபப்பட வேண்டும்.

சாமியார் தோற்ருர்

“புலிகாள், சிறுத்தைகாள், நீங்கள் ஏன் இந்தப் பாவ ஜீவனம் நடத்துகிறீர்கள்? பசுக்களையும்,

மான்களையும் கொன்று தின்கிறீர்களே, இது மகா பாவம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்த வழக்கத்தை விட்டு விடுங்கள். என்னைப் போல் நீங்களும் வாழுங்கள்!'' என்றார் சாமியார்.

''இந்தச் சாமியாரின் தொந்தரவு அதிகமாய்ப் போயிற்று. இவரை நீங்கள் தின்று விடலாம் என்பது என் யோசனை'' என்றது நரி.

''இவரை விழுங்கினால் இவருடைய தாடியும் தலை ஜடையும் என் வயிற்றில் சிக்கிச் சுழன்று எனக்கு என்ன ஆகுமோ சொல்ல முடியாது. உன் யோசனை யில் பயன் இல்லை. இவரோடு கொஞ்சம் பேசி விஷயத்தைத் தீர்த்துக் கொள்ளலாம்'' என்று புலி நரியைச் சமாதானப் படுத்திற்று.

''சாமியாரே! உங்கள் ஜனங்களும் ஆடு, கோழி தின்கிறார்களே? எங்களை மட்டும் ஏன் குறை கூறுகிறீர் கள்?'' என்று கேட்டது சிறுத்தை.

''அப்படிக் கேள்'' என்றது புலி.

''குழந்தைகளே! நீங்கள் கேட்பது நியாயம். ஆனால் அவர்கள் ஆடும் கோழியும் சமைத்துச் சாப்பிடு கிறார்கள். பச்சையாக உங்களைப் போல் சாப்பிடுவ தில்லை. நீங்கள் செய்வது அநாகரிகம்!'' என்றார் சாமியார்.

''இது சரியான வாதமல்ல!'' என்றது புலி.

''ஏன்? சொல்'' என்றார் சாமியார்.

''எடுத்துச் சொல், நரி! உனக்குத்தான் பேசத் தெரியும்'' என்று புலி தன்னுடைய மந்திரி நரியை வாதம் செய்ய உத்தரவிட்டது.

''சாமியாரே! இந்தச் சின்ன விஷயம் உமக்குத் தெரியவில்லையே! ஆச்சரியமாக இருக்கிறது. நீர்

எல்லாம் படித்திருக்கிறீர். நான் ஒரு சாஸ்திரமும் படிக்கவில்லை. பச்சையாக ஆடு மாடுகளைத் தின்று ஜீரணம் செய்து கொள்ளும் சக்தி ஆண்டவன் புலிக்கும் சிறுத்தைக்கும் கொடுத்திருக்கிறான். மனிதனுக்கு அந்தச் சக்தியைக் கொடுக்கவில்லை. ஒப்புக்கொள்கிறீரா?" என்று கேட்டது நரி.

"நீ சொன்னது உண்மை! அதனால்தான் நன்றாகச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்" என்றார் சாமியார்.

"ஆண்டவன் செய்து வைத்திருக்கும் அமைப்பில் சாப்பிடக் கூடாத உணவை மனிதர்கள் சமைத்துச் சரிப்படுத்திச் சாப்பிடுகிறார்களே அதுதான் பாபம். ஆண்டவன் உத்தரவுக்கு விரோதம். ஜீரணம் செய்து கொள்ளும் சக்தி இருக்கிற புலியும் சிறுத்தையும் மிருகங்களைச் சாப்பிடுவதில் பாபம் இல்லை. இயற்கைக்கு விரோதமாக நெருப்பையும் தண்ணீரையும் உபயோகித்து மாமிசத்தை மிருதுவாக்கித் தின்பதுதான் பாபம்" என்றது நரி.

"செத்த மாமிசத்தைத் தின்னும் நீ சாதுரியமாகப் பேசுகிறாய். உன் ஜீவனம் மிகக் கேவலம்" என்றார் சாமியார்.

"உங்களை வணங்குகிறேன். உயிருடன் இருக்கும் ஆட்டை வெட்டி உங்கள் இனத்தார் தின்கிறார்கள். பிராணி செத்த பிறகு அழுகிப் போகும் பிரேதத்தை நான் தின்பதா பாவம்?" என்றது நரி.

சாமியார் தலையைச் சொறிந்து கொண்டு யோசனை செய்தார்.

"போய் வருகிறீர்களா? இங்கே இன்னும் நீங்கள் தங்குவது அபாயம். இந்தச் சிறுத்தைக்குப் பசி மேலிட்டு வருகிறது" என்றது புலி.

சிறுத்தை வாயினின்று எச்சில் ஊறிக் கொண்டிருந்தது. அதைக் கண்டு புலி இவ்வாறு எச்சரித்தது.

சாமியார் வேகமாகவே போய்விட்டார்!

குச்சுப்பாளையத்துக் குழந்தைகள்

கரூரண்டை குச்சுப்பாளையத்தில் ஒரு பள்ளிக் கூடம். பள்ளிக்கூடத்துக்குப் பின்னால் திறந்த வெளி.

"உன் அப்பாவுக்கு என்ன வேலையடா, சின்னு?" என்றான் அப்புக்குட்டி.

"உன்னுடைய அப்பாவுக்கு என்ன வேலை, முதலிலே சொல்லு. நான் அப்புறம் சொல்லுகிறேன்." என்றான் சின்னு.

"என் அப்பா வீடு கட்டுகிற வேலை செய்கிறார். செங்கல், சுண்ணும்பு, கரண்டி, இதைப்பற்றியெல்லாம் உனக்கு என்ன தெரியும்? உனக்கு ஒன்றும் தெரியாது" என்றான் அப்புக்குட்டி.

"எனக்கு அது ஏன் தெரிய வேண்டும்? நான் புஸ்தகம் படித்துக் கச்சேரி வேலைக்குப் போறேன்" என்றான் சின்னு.

"கச்சேரியிலே என்ன வேலை? பெருக்கிக் கூட்டுவாயா?" என்றான் அப்புக்குட்டி.

இருவருக்கும் சண்டை உண்டாயிற்று.

"பயல்களே! சண்டை ஏண்டா போடுகிறீர்கள்?" என்று சொல்லிக்கொண்டு புகுந்தான் வள்ளியப்பன்.

"உன் அப்பா என்ன வேலை செய்கிறார், வள்ளி?" என்றான் அப்புக்குட்டி.

"என்னப்பா கரூரில் பாங்கிக் கடை வைத்திருக்கிறார்" என்றான் வள்ளியப்பன்.

"அது என்ன கடையடா? கடையில் என்ன விற்கிருர்?" என்று சின்னு கேட்டான்.

"அங்கே ஒன்றும் விற்கிறதில்லை. பணத்தைப் பெட்டியில் போட்டு வைப்பார்கள். அது குட்டிகள் போடும். குட்டிகளை எடுத்து இன்னெரு பெட்டியில் போட்டு மூடுவார்கள். இன்னும் குட்டிகள் உண்டாகும். இப்படியே பெட்டி பெட்டியாக நிறையும்" என்ருன் வள்ளியப்பன்.

"அடே, கோழி வளர்க்கிருர் இவன் அப்பா! கோழி தானே முட்டை இடும், பணம் எங்கேயாவது குட்டி போடுமா?" என்ருன் சுப்பு.

"உனக்குத் தெரியாது. எங்கள் கடையில் நிஜமாகப் பணம் குட்டி போடுகிறது. வாத்தியாரைக் கேட்டுப்பார், வேண்டுமானுல்" என்ருன் வள்ளியப்பன்.

"வாத்தியாரைக் கேட்டால் அடித்துப் போடுவார்" என்ருன் அப்புக்குட்டி.

* * *

"கண்ணு பிணங்கு போய்விட்டான். உனக்குத் தெரியுமா?" என்ருன் அப்புக்குட்டி.

"ஏன் போனுன்?" என்ருன் சுப்பு.

"அவன் அப்பா வீட்டை வள்ளியப்பனுடைய தகப்பனுர் ஏலம் போட்டு, அவனை வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்" என்ருன் அப்புக்குட்டி.

"ஐயோ பாவம்!" என்ருன் சுப்பு.

"வள்ளியப்பனின் அப்பா கடன் கொடுத்திருந்தார். கண்ணுவுடைய அப்பா கள்ளுக் குடித்துவிட்டு எல்லாம் போக்கடித்து விட்டானும்" என்ருன் அப்புக் குட்டி.

"கள்ளுக் குடித்தால் எல்லாப் பணமும் போய் விடுமா?" என்று கேட்டான் சுப்பு.

"போய்விடும்" என்ருன் அப்புக்குட்டி.

"ஆனல் ஏன் வாங்கிக் குடிக்கிருர்கள்?" என்று கேட்டான் சுப்பு.

"நீ கள்ளு மோந்து பார்த்திருக்கிருயா?" என்று கேட்டான் அப்புக்குட்டி.

"இல்லை, எப்படி யிருக்கும்?"

"கெட்ட நாற்றம். கிட்டப் போகவே முடியாது!" என்ருன் அப்புக்குட்டி.

"பினுங்கு வெகு தூரமா?" என்ருன் சுப்பு.

"எனக்குத் தெரியாது" என்ருன் அப்புக்குட்டி.

"வாத்தியாரைக் கேட்கலாம்" என்ருன் சுப்பு.

"ஐயோ! அடிச்சுப் போடுவார்" என்ருன் அப்புக் குட்டி.

இந்தக் குழந்தைகளுக் கெல்லாம் வாத்தியாரைக் கண்டால் வெகு பயம். அவர் எப்போதும் கோபத் திலேயே இருப்பார். இன்ஸ்பெக்டருக்கு அவர் ரொம்ப இஷ்டம். குச்சுப்பாளையம் குழந்தைகளின் துரதிர்ஷ்டம்.

வாத்தியார்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. எல்லா வாத்தியார்களும் இப்படி யில்லை.

ஊமைப் பிராணி

சம்சாரி ஒருவன் ராஜாவைப் பற்றி அதிருப்தி அடைந்து காட்டுக்குச் சென்று தவம் செய்தான்.

"தெய்வமே! நம்முடைய ராஜா நல்லவன் அல்ல. எங்களுக்கு ஒரு நல்ல அரசனைக் கொடு!" என்று அவன் தவம் செய்தான்.

இன்னொருவன், ஒரு ஏழை. அதே காட்டில் தவம் செய்தான். "நான் நம்பிய நண்பன் மோசம் செய்து விட்டான் சுவாமி! எனக்கு வேறே ஒன்றும் வேண்டாம். நல்ல நண்பனைக் கொடு!" என்று அவன் வேண்டிக் கொண்டு தவம் செய்தான்.

ஒரு சேவகன் "நான் என்ன செய்தாலும் இந்த எஜமானனுக்குத் திருப்தியில்லை" என்று காட்டுக்கு ஓடிப்போனான். அவனும் அங்கே தவம் செய்தான்.

"என் தகப்பனே எனக்குச் சத்துருவாகி விட்டான்" என்று ஒரு மகன் வீட்டைவிட்டு வனம் சென்று தவம் செய்யப் போனான்.

மற்றொருவன் தன் தாயின் பேரில் கோபங் கொண்டு, "கடவுளே எனக்கு ஒரு நல்ல தாய் வேண்டும்" என்று தவம் செய்தான்.

இன்னொருவன் சுவாமி பேரிலேயே கோபித்துக் கொண்டு எல்லாவற்றையும் துறந்து விட்டு, காடு சென்று இன்னது செய்வது என்று தெரியாமல் பித்தனாக உட்கார்ந்து தவம் செய்ய ஆரம்பித்தான்.

அங்கே ஒரு வேடன் அவனுடைய நாயுடன் வந்து சேர்ந்தான். தவம் செய்பவர்களைக் கண்டு வேட்டை நாய் சிரித்தது.

"அடே, பயல்களே! ஏன் உங்களுக்குப் புத்தி இப்படிக் கெட்டுப் போச்சு? நீங்கள் என்னைப் போல் நாயாகப் பிறந்திருந்தால் சந்தோஷமாக இருந்திருப்பீர்கள்" என்றது.

"அது எப்படி?" என்றான் தெய்வத்தின் மேல் கோபங் கொண்ட பக்தன்.

மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக "அது எப்படி?" "அது எப்படி?" என்று கேட்டு நாயைச் சுற்றிக் கொண்டார்கள்.

"பாருங்கள், என் எஜமான் வேடனே! எனக்கு அவன் தகப்பன், அவனே தாயும், அவனே நண்பன், அவனே ராஜா, அவனே கடவுள்! எனக்கு என்ன குறை. நீங்களும் ஒவ்வொருவரும் ஒரு நாயாகப் பிறந்து ஒரு மனிதனிடம் போய்ச் சேருங்கள். சந்தோஷமாக இருப்பீர்கள்! பக்தியில் அல்லவோ சுகம் இருக்கிறது. விவேகத்தை நம்பி அவிவேகிகள் ஆகிவிட்டீர்கள்!" என்றது நாய்.

வேடன் யார் தெரியுமா? அவனே மகாதேவன். அற்ப மிருகத்தைக் காட்டித் தவம் செய்து கொண்டிருந்தவர்களுக்குப் புத்தி கற்பிக்க வந்தான்.

குழந்தைகளே! நீங்களும் வீடுகளில் வளர்க்கப் படும் நாய்களைக் கவனித்துப் பாருங்கள்—நான் சொன்னது விளங்கும். நாய் ஊமைப் பிராணி, பேசாது. ஆனால் அதன் கண்களைப் பாருங்கள். கண்களைப் பார்த்தால் உள்ளே ஒரு நல்ல குழந்தை, மிக நல்ல குழந்தை, நாயின் உடலில் ஊமையாக அடைத்து வைக்கப் பட்டிருப்பதைக் காண்பீர்கள்!

நாய் மிக நல்ல ஜந்து. அதை நம்பலாம். அவசியம் ஏற்பட்டால் அது தன் உயிரையே கொடுக்கும்—ஒரு யோசனையுமில்லாமல் கொடுத்து விடும்!

நாயை நன்றாக, அன்பாக, வளர்க்க வேண்டும். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு நோய் வந்து விட்டால் பார்த்துச் சகிப்பது கஷ்டம். அழ முடியாமல் அழும்.

வெள்ளைக்காரர்கள் தாங்கள் வளர்க்கும் நாய்களை மிக அன்புடன் நன்ருகப் பார்த்துக் கொள்ளுகிருர்கள். நாம் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களில் நாய்க் கதைகள் ரொம்ப உண்டு. நம்முடைய நாட்டில் நாய்க் கதைகள் அவ்வளவாக இல்லை. ஒரு கதை உண்டு. தருமராஜா பாண்டவர்களில் மூத்தவர். கடைசியாகத் தம்பிகளுடன் மலை ஏறிச் சுவர்க்கம் சென்ருர். மலைமேல் ஏறும்போது மனைவியும் தம்பி களும் ஒருவர் பின் ஒருவராகத் தேக சக்தி தீர்ந்துபோய் நடக்க முடியாமல் விழுந்து மாண்டார்கள். அப்போது ஒரு நாய் மட்டும் தருமராஜாவைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. மனைவி திரௌபதியும் தம்பிகளும் ஒருவர் பின் ஒருவராக உடல்களை விட்டுப் பிரிந்து அவர்களுடைய ஆத்மாக்கள் சுவர்க்கம் சென்று விட்டன. ஆனல் நாய் மட்டும் தருமபுத்திரன் கூடவே கடைசிவரையில் சென்றது.

இந்திரன் தருமபுத்திரனைச் சுவர்க்கம் அழைத்துப் போக ரதத்துடன் வந்தான்.

"நாயை விட்டு விட்டு நான் மட்டும் ரதம் ஏற மாட்டேன்" என்று தருமபுத்திரன் சொன்னதைக் கண்டு இந்திரன் வியந்து மிகவும் பாராட்டினன்.

அப்போது யுதிஷ்டிரன் கண்டு கொண்டான்; நாயானது தரும தேவதையே என்றும் தன்னைச் சோதனை செய்யவே அது வந்து தன்னை அடைந்தது என்றும் கண்டு கொண்டான்.

இது நாயைப் பற்றிய கதையல்ல; தரும புத்திரனு டைய குணத்தைப் பற்றிய கதை. ஆனலும் புராணத் தில் தருமத்தை ஒரு நாயாக்கிச் சொன்னது கவனிக்கத் தக்கது.

பசு பால் தரும். நாய் தன் அமுதமான பக்தியைப் பாலாகச் சொரிந்து தருகிறது.

மூக்குக் கண்ணாடி

சுப்பராய சாஸ்திரியார் தம் மூக்குக் கண்ணாடியை எங்கேயோ வைத்து விட்டு மறந்து போனார்.

"மூக்கே! என் பிரியமான மூக்கே! எப்போதும் உன் பேரில் சவாரி செய்து வந்த கண்ணாடி எங்கே?" என்றார்.

மூக்கும் பேச ஆரம்பித்தது. "ஏ கண்களே! என்னருமைச் சகோதரிகளே! மூக்குக் கண்ணாடியைத் தேடித் தாருங்களேன். நம் எஜமானர் படிக்க முடியாமல் வருந்துகிறார்" என்று மூக்கு கண்களுக்குச் சொல்லிற்று.

கண்கள் மூக்கின் விண்ணப்பத்தைப் பொருட்படுத்தவில்லை.

"ரொம்ப சரி! சவாரி உன் மேல்! பேரும் உன் பெயர்! எங்களுக்கு என்ன கவலை?" என்றது வலது கண்.

"ஏய் மூக்கே! நீதான் 'மூக்குக் கண்ணாடி!' 'மூக்குக் கண்ணாடி!' என்று சொந்தம் பாராட்டி வந்தாயே! நீயே தேடு!" என்றது இடது கண்.

"சரி, அப்படியே!" என்று ஒப்புக் கொண்டு மூக்கானது வீட்டில் எல்லா இடமும் மோந்து மோந்து தேடிப் பார்த்தது. கிடைக்கவில்லை. மூக்குக் கண்ணாடிக்கு ஏதேனும் தனி நாற்றம் இருந்தால் அல்லவா மூக்குக்குத் தெரியும்?

துயரத்துடன், "எனக்குச் சிக்கவில்லை. உம்

கண்களைக் கேட்டுப் பாருங்கள்'' என்றது மூக்கு, சுப்பராய சாஸ்திரிக்கு.

அவர் தம் கண்களைப் பார்த்து, "கண்களே! உங்களுக்காகத்தான் நான் இந்தக் கண்ணுடியை வாங்கிப் போட்டுக் கொண்டேன். கொஞ்சம் தேடிப் பாருங்கள். எங்கேயோ வைத்துவிட்டு மறந்து போனேன்!'' என்று வேண்டிக் கொண்டார். கண்கள் இந்தக் காரியத்தில் கவனம் செலுத்தாமல் மந்தமாக இருந்தன.

அப்போது காது சொல்லிற்று. "கண்களே! இப்படி ஒருவர் மேல் ஒருவர் நாம் போட்டியும் பொருமையும் அசூயையும் வைத்துக் கொண்டோமானல் எல்லாருக்கும் கஷ்டமாகும். பெரியோர் சொல்லக் கேட்ட சாஸ்திரம் உங்களுக்குச் சொல்லுகிறேன். கேளுங்கள்'' என்று வாயைத் தூண்டிற்று வலது காது. இடது காதும் கூடச் சேர்ந்து கொண்டது. வாயானது பேச ஆரம்பித்தது. அதாவது சாஸ்திரியார் பாட ஆரம்பித்தார் :—

பார்ப்பான் அகத்திலே பால்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினல்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே

ஐந்து 'பசு'க்கள் என்ருல் தெரியுமா? சுவை, ஒளி ஊறு, ஓசை, நாற்றம் இவற்றிற்குரிய ஐந்து பொறிகள். இந்த ஐந்து 'பசு'க்களும் வெறி கொண்டு தம் பாட்டுக்குச் செல்லாமல், எஜமானனல் சரியாக ஆளப்பட்டு நின்ருல், அதாவது அவன் அவற்றைச் சரியாக அடக்கி ஆண்டால், அதாவது அவன் அந்தப் பசுக்களைச் சரியாக மேய்த்தானானல் அந்த ஐந்து

பசுக்களும் நல்ல பால் சொரிந்து கறக்கும். இது திரு மூலருடைய பாட்டு.

எவ்வளவு சாஸ்திரம் படித்து வித்துவானாக இருந் தாலும் ஐம்புலன்களை ஆளாமல் ஒருவனுக்கு ஆனந் தம் கிடையாது.

"நாம் ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டும். ஒன்றின்பேரில் பொறாமையோ அசூயையோ பட லாகாது" என்று வாயானது சொல்லிற்று. கண்களுக் குப் புத்தி வந்தது. தேடிப் பார்த்தன. மூக்குக் கண் ணாடி கிடைத்து விட்டது.

பக்கத்திலிருக்கும் பொருளைத் தான் மூக்கு மோந்து கண்டு கொள்ளும். கண்களோ அளவுக்கு அடங்காத வெகு தூரத்திலுள்ள நட்சத்திரங்களையும் பார்க்கும். இது கண்களின் அற்புத சக்தி. மூக்கின் பெருமையோ, கொஞ்ச நேரம் இருந்து மறைந்த பொருளின் வாசனை யைக் கூடக் கண்டு கொள்ளும். மறைந்துபோன பொருளைக் கண்கள் காணாது. ஆனால் மூக்கு கண்டு கொள்ளும்.

அக்காள் தலையில் ஒரு நாள் சூட்டியிருந்தது மல்லிகைப் பூ. மூன்றாவது நாளிலுங்கூடத் தம்பி மோந்து பார்த்து வாசனையைக் கண்டு கொள்ள முடியும்.

முந்திய நாளிருந்த பூவை இன்று கண்களால் பார்க்க முடியாது. நேற்றிரவு திருடன் நடந்த வழியை, நாய் மோந்து மோந்து கண்டு கொள்ளும். அப்படியே முந்திய இரவு எலி ஓடின வழியைப் பூனை அறிந்து கொண்டு வேட்டையாடும். கண்களால் காண முடியாததை மூக்கு கண்டு கொள்ளும்.

மூக்கும் கண்ணும் காணாத பாட்டைக் காது கேட்டு உள்ளத்துக்கு இன்பம் தரும்.

உடலின் கதை வெகு விசித்திரம். கண்டும், கேட்டும், நுகர்ந்தும், தொட்டும் அனுபவித்த பொருளின் நினைவு முப்பது ஆண்டுகள் கழிந்து போனாலும் வேண்டும்போது பழைய கணக்குப் புஸ்தகத்தில் வாங்கியதும் கொடுத்ததும் பதிவு ஆகியிருப்பதை எடுத்துப் பார்ப்பதைப் போல் வேண்டியபோது நினைவுக்கு வரவழைத்துக் கொள்ளலாம். ஐந்து பொறிகளின் சக்தியை விட நினைவு என்கிற சக்தியானது மிக அற்புதம். எவ்வளவு காலமாயினும் இன்று காண்பது போல் மனத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தும். அறுபது ஆண்டுகளுக்கு முன் கேட்ட என் தகப்பனாரின் குரல், தாயின் குரல் நினைவுக்கு வந்து இப்போது காதில் கேட்பதைப் போலவே இருக்கிறது.

''பசு ஐந்தும் பாலாய்ச் சொரியும்'' என்று திருமூலர் பாடுகிறார். இறந்து போனவர்களின் குரல் நினைவில் வந்தால் பாலைப் போல் தித்திக்கிறது. அப்படியே அவர்கள் உருவமும், அன்போடு கைகளால் அவர்கள் தடவிய நினைவும் வந்தபோது இறந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் பேதமில்லாமல் போகிறது.

நல்ல நினைவுகளின் ஆனந்தத்தைப் போல் வேறு ஏதுமில்லை.

பூனைக் கதை

ஒரு பூனை அடுப்பங் கரையில் தூங்கிக் கொண்டிருந்தது. ராத்திரி யெல்லாம் எலிக்காக விழித்துக்

கொண்டிருந்து. பாவம், பகலில் நன்றாகத் தூங்கிப் போயிற்று.

பக்கத்தில் அதன் மூன்று குட்டிகளும் படுத்துத் தூங்கின.

பூனை ஒரு கனவு கண்டது. தான் ஒரு புலியாகி விட வேண்டும் என்று அதற்கு எப்போதும் ஆசை. ஆனபடியால் அன்று கனவில் தான் புலியாகப்போய் விட்டதாகக் கண்டது.

புலி ஒரு ஆட்டைத் துரத்திக் கொண்டு ஓடிற்று. ஆட்டின் சொந்தக்காரனுடைய நாய் புலியைத் துரத் திக் கொண்டு வந்தது. புலி ஓடிற்று. நாய் அதை விட வேகமாக ஓடிப் புலியின் அண்டையில் வந்து விட்டது.

புலியான பூனை தன் பழைய சுபாவத்தால் ஒரு மரத்தின் மேல் ஏறித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தது. ஆனால் புலியாய் விட்ட பூனைக்கு மரம் ஏற முடிய வில்லை. திடீரென்று மறுபடியும் கனவில் புலி பூனை யாய் விட்டது. மரத்தின் மேல் ஏறித் தப்பித்துக் கொண்டது.

பூனை விழித்துக் கொண்டது.

"நல்ல வேளை நான் புலியல்ல, பூனையே! இல்லா விட்டால் அந்த நாய் என்னைக் கடித்துக் கொன்றே போட்டிருக்கும்" என்று சந்தோஷப்பட்டது. அந்தச் சந்தோஷத்தில் எழுந்து ஓடிப்போய் ஒரு மரத்தின் மேல் ஏறி அணில் ஒன்றைப் பிடிக்கப் பார்த்தது. அணில் பூனைக்குச் சிக்கவில்லை. கீழே இறங்கிச் சமையல் அறைக்குள் போய், பாலோ தயிரோ ஏதாவது திறந்து வைத்திருக்கிறார்களா என்று பார்த்தது.

ஒன்றும் கிடைக்கவில்லை. எல்லாம் பத்திரப் படுத்தியிருந்தார்கள். மறுபடியும் படுத்துத் தூங்கிற்று.

* * *

மறுபடியும் தான் நாயாகி விட்டதாகக் கனவு கண்டது.

ஒரு திருடன் வந்தான். 'வள்' 'வள்' என்று கத்துவதற்குப் பதிலாக 'மியாவ்' 'மியாவ்' என்றது. யாரும் எழுந்திருக்க வில்லை. திருடன் வீட்டுக்குள்ளே புகுந்து சாமான்களெல்லாம் எடுத்தான். பால் பாத்திரத்தை எடுத்துப் பாலைக் கீழே கொட்டி விட்டுப் பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு ஓடி விட்டான்.

திருடனை மறந்து விட்டுக் கீழே சிந்திப் போன பாலைப் பூனை நக்க ஆரம்பித்தது. வீட்டுக்காரி எழுந்திருந்து, 'இந்த நாய் உபயோகமில்லை' என்று துடைப்பக் கட்டையை எடுத்து ஒரு அடி போட்டாள். அடி பட்டதாகக் கனவு கண்டதும் பூனை விழித்துக் கொண்டது.

"நல்ல வேளை, நான் நாயல்ல!" என்று சந்தோஷப்பட்டது. ஓடி வீட்டுக்காரியின் கால்களைச் சுற்றிக் கொண்டும் உராய்ந்து கொண்டும் அன்பு காட்டியது. "புலியும் வேண்டாம்; நாயும் வேண்டாம். நான் பூனையாகவே இருப்பேன்" என்று 'மியாவ், மியாவ்' என்று சந்தோஷமாகக் கத்திற்று.

அது சொன்னது வீட்டுக்காரிக்குத் தெரியவில்லை. பூனையின் பேச்சுக்கள் நமக்கு விளங்காது. அதன் குட்டிகளுக்குத்தான் விளங்கும். 'அதுவே சரி!' என்று குட்டிகள் மூன்றும் கத்தின.

பல்லாண்டு பாடின செடிகள்

வனதேவதை ஒரு பரிஷத்து கூட்டிற்று. மரம், செடி, கொடி, பறவை, பூச்சி, மாடு, மான் முதலிய எல்லாத் தாவர ஜங்கமப் பிராணி வகைகளின் பிரதிநிதிகளும் கூடின. சாது ஜந்துக்கள்தான் கூடின. புலி, கரடி முதலியவை இந்தப் பரிஷத்தில் சம்பந்தப்படவில்லை.

"உங்கள் சுகம் எப்படி?" என்று கேட்டது வனதேவதை.

எல்லாச் செடிகளும் கொடிகளும் பிராணி வகைகளும் தத்தம் நிலைமையைப் பற்றிப் பேசின.

பிராணிகளும் செடிகளும் நமக்குத்தான் ஊமை. அவை தங்களுடைய பரிஷத்தில் நன்ருகப் பேசும். நம்முடைய பேச்சும் வாதமும் மற்றப் பிராணிகளுக்குப் பொருளில்லாத கூச்சல் போல் தோன்றும். அப்படியே பூச்சிகளும் பறவைகளும் மரங்களும் கொடிகளும் பேசுவது நமக்கு ஒன்றும் தெரிவதில்லை. அவை பேசும் சத்தம் நமக்குக் கேட்பதில்லை. கேட்டாலும் புரிவதில்லை. மொத்தத்தில் பார்த்தால் அவையல்ல ஊமை, நாம்தான் செவிடு.

"வாழ்க, பூச்சிகள்!" என்றன, புஷ்பங்கள்.

"வாழ்க" "ஒழிக" என்கிற சத்தங்கள் மானுட அரசியல் கோஷங்களாக வழங்கி வருகின்றன. தாவரங்களிலும் அந்த வாழ்த்துக்களும் சாபங்களும் உண்டு.

"வந்து தேனைக் குடியுங்கள். பூவினின்று பூவுக்குத் தாவிச் செல்லுங்கள். எங்களுக்கு ஒரு தீங்கும் தொந்தரவுமின்றி எங்கள் வம்சத்தைப் பெருக்குங்கள். காதலின் ஆனந்தத்தை எங்களுக்குத் தரும் பூச்சிகளே !

ஈக்களே! உங்களுக்குப் பல்லாண்டு சொல்லுகிறோம்" என்றன.

குழந்தைகளே! இதன் விவரம் தாவர வாத்தியாரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். எப்படிப் பூச்சிகள் புஷ்பங்களுக்கு உதவுகின்றன என்பதை அவர் சொல்லுவார்.

* * *

"பறவைகளே! நீங்கள் பல்லாண்டு வாழ்வீர்களாக! குரங்குகளே! உங்களுக்கும் பல்லாண்டு!" என்றன காட்டு மரங்கள்.

"எங்கள் பழத்தைப் பொறுக்கித் தின்று நல்ல விதைகளைக் காட்டில் கொண்டு போய்ப் போடுங்கள். பழங்களைத் தின்று விதைகளை உங்கள் வயிற்றில் காப்பாற்றி நல்ல பூமியில் வெளிப்படுத்திப் போடுங்கள். மழை பெய்து வெய்யில் நன்றாகக் காயும் இடத்தில் போடுங்கள். நாங்கள் வளரும் இடத்தில் அவற்றுக்கு வெய்யிலும் வெளிச்சமும் போதியபடியில்லை. எங்களுடைய குழந்தைகள் தாமாக நடந்து குடியேற முடியாது. அவற்றுக்குக் கால் இல்லை. சிறகு இல்லை. திருமாலைப் போல் நீங்கள் எங்கள் வம்சத்தை வயிற்றில் வைத்துக் காப்பாற்றிப் பூமியில் பரப்புங்கள்" என்றன.

"நடக்கும் பிராணிகளே! எங்கள் குலத்துக்கு யமன் ஆடுகளும் மானிடர்களும். நன்றாகக் கிளைத்து இலை விட்டு வளர்வதற்கு முன் ஆடுகள் எங்களைக் கொல்லுகின்றனவே? எங்களைத் தின்று கொழுத்த ஆடுகளைத் தின்பதற்காக மானிடர்கள் ஆடுகளை எங்கள் மேல் விடுகிறார்கள். இதற்கு என்ன செய்வோம்?" என்று செடிகள் கதறின.

"பல்லில் அழுக்கு எடுக்கப் பல்லுக் குச்சிக்காக இந்த மானிடர்கள் எங்கள் இளங் கிளைகளை ஒடித்து நாசம் செய்கிறார்களே! இவர்களுக்கு இரக்கமில்லையே!" என்றன மரங்கள்.

"விறகுக்காக எங்களை வெட்டித் தள்ளுகிறார்களே! தந்தத்துக்காகக் கூட மனிதர்கள் யானைகளைக் கொல்ல மாட்டார்கள். ஆனால் நாங்கள் சாவதற்கு முன் எங்களுடைய எலும்புக்காக எங்களைக் கொல்லுகிறார்களே விறகு வெட்டிகள்!"

இவ்வாறெல்லாம் மரங்களும் செடிகளும் அழுதன.

"எங்கள் ஊனைத் தின்று இந்த இருகால் பிராணிகள் தங்கள் ஊனைப் பெருக்கி வருகிறார்களே! ஆண்டவன் எங்கள் சதையில் விஷம் வைக்கவில்லையே. வைத்திருந்தால் நாம் பிழைத்திருப்போம்!" என்றன மாடுகள்.

பிரபஞ்சத்தில் ஊமைப் பிராணிகள் பேசும் பேச்சும் அழும் பிரலாபமும் காற்றில் அலை அலையாகச் சென்று வானத்தில் இடிக்கின்றன.

எல்லாம் பரமன் கூத்து. அவன் கூத்தை நாம் அறியும் வண்ணம் அருள்வானாக.

மரத்தை வெட்டித் தள்ளுகிறவர்கள் மரங்களாகப் பிறந்து, வெட்டப்பட்டு, பட்டையிலிருந்து பால் சொரியச் சாவார்களோ என்னவோ? ஆண்டவனுக்குத் தான் தெரியும்.

* * *

செடிகளையும் மரங்களையும் சேதம் செய்யலாகாது.

வனதேவதை சொல்லிற்று. "நன்றாக வளர்ந்து பெருகுவீர்களாக! மரம் ஒன்றுக்கு லக்ஷம் பூக்கள்

பூத்து, ஆயிரம் பழங்கள் காய்த்து வம்சம் பெருக்குவீர்களாக. யார் நாசம் செய்தாலும் நீங்கள் அழிய மாட்டீர்கள். வாழ்வீர்கள்!'' இவ்வாறு ஆசீர்வதித்து, வனதேவதை கூட்டத்தைக் கலைத்தது.

அறியாவூர்க் கதை

அறியாவூரில் எலி உபத்திரவம் அதிகமாகி விட்டது. ஊரார் ஜமீன்தாரிடம் சொல்லிக் கொண்டார்கள். அவர் பூனையூருக்குப் போய், பூனையாரை வேண்டிக்கொண்டார். அவர் அங்கே சந்நியாசியாக இருந்தார்.

‘‘தேசிகரே! எங்கள் சிறு கிராமத்தில் தாங்கள் கொஞ்ச நாட்கள் முகாம் போட்டால் நாம் கடமைப் பட்டிருப்போம்'' என்று கேட்டுக் கொண்டார். அதன் பேரில் பூனைச்சுவாமி, ‘‘நமக்கு இப்போது எலிகள் பேரில் கருத்தில்லை. நாம் சிவ பூஜையில் ஈடுபட்டிருக்கிறோம்'' என்று சொன்னார்.

‘‘சாதுர்மாஸ விரதம் அங்கேயே நடத்தலாம். தயை பண்ணுங்கள்'' என்றார் ஜமீன்தார். அதன் பேரில் பூனைச்சுவாமி ஒப்புக்கொண்டார்.

பகல் எல்லாம் உபந்நியாசக் கூட்டம். ஏராளமான ஜனங்கள், ஆண், பெண், குழந்தைகள் ஏராளமாக வந்து கூடுவார்கள். பூனைச் சுவாமியின் பிரசங்கங்கள் மிக உருக்கமாக இருந்தன.

‘‘உங்கள் கிராமத்தில் தானியத்துக்குக் குறைவில்லை. காய்கறி வகைகள் தோட்டங்களில் ஏராளமாக விளைகின்றன. உங்களுடைய பசுக்கள் பாலும், தயிரும் வெண்ணெயும் நிறையக் கொடுத்து வரு

கின்றன. என் புலால் உணவில் மனம் செலுத்து கிறீர்கள்? அது, பாவம், வேண்டாம்! என்னைப் பாருங்கள்! முன் காலத்தில் நானும் அந்தத் தவறு செய்து வந்தேன். என் ஆசாரிய சுவாமியின் அருளால் இந்த இரண்டு வருஷ காலமாக நான் சைவ போஜனத்திலேயே இருந்து வருகிறேன்."

இப்படி யெல்லாம் பேசி ஜனங்களுடைய மனத்தை உருக்கி விட்டார் பூனைச் சுவாமியார்.

அறியாவூரில் வசித்து வந்தவர்கள் எல்லாரும் 'சைவ' மாகிவிட்டார்கள்.

மாலையில் பூனைச் சுவாமியை எல்லாரும் வணங்கி விட்டுக் கலைவார்கள். அதன் பின் இரவில் பூனையை ஜபம் செய்ய விட்டு விடுவார்கள். பூனைச் சுவாமியார் கொழுத்து வந்தார். அறியாவூரில் எலிகள் உபத் திரவம் குறைந்து போயிற்று. காரணம் ஊராருக்குத் தெரியவில்லை.

பிரசங்கங்களைக் கேட்டவர்கள் அடுத்த கிராமங் களில் தங்கள் பந்துக்களிடையில் சுவாமியாரின் மகிமை யைப் பற்றிப் பேசி வந்தார்கள். "மகா தபஸ்வி, நம் முடைய பாக்கியத்தின் விசேஷம். நம்மை நல்வழியில் திருப்பி விட்டார்" என்று அவர்களுக்குப் பூனைச் சுவாமியாரைப் பற்றிச் சொல்லி வந்தார்கள்.

பக்கத்து ஊரில் ஒரு குறும்புக்காரன். அவன் ஒரு சாமர்த்தியமான போன் ஒன்று செய்தான். அதற் குள்ளே இரண்டு எலிகளைப் பிடித்து உள்ளே ஒரு அறையில் தாராளமாக ஓடியாட விட்டு விட்டு, மரத் தால் தந்திரமாகச் செய்யப்பட்ட அந்தப் பெரிய போனைக் கபாலீசன் கோயிலில் வைத்து விட்டுப் போனான்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் பூனையின் பிரசங்கம் கேட்க எல்லாரும் கூடியிருந்தார்கள். சாமி யார் வரவில்லை. என்ன காரணம் என்று விசாரித் தார்கள். யாருக்கும் தெரியவில்லை.

சுவாமியாருக்கு அமைத்துக் கொடுத்திருந்த மடத் துக்குச் சென்று பார்த்தார்கள். அவ்விடமும் சுவாமி யார் இல்லை. ஒரு விவரமும் தெரியவில்லை.

குறும்புக்காரன், "வாருங்கள், நான் உங்கள் சுவாமி யாரைக் காட்டுகிறேன்" என்று ஊராரை அழைத்துச் சென்றான். கிராமத்துக்கு வடக்கே, கொஞ்சம் பாழ் பட்டிருந்த கபாலேசன் கோயிலுக்கு அழைத்துப் போனான். அவ்விடம் மரக் கூண்டில் பூனை சுவாமி அகப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்!

"அவதூறு பேசாதீர்கள், நான் அல்ல அந்தச் சுவாமி!" என்றது பூனை.

"வேறு யார் நீ?" என்றார்கள் ஊரார்.

"கடவுள் அருளால் அவர் என் நீச உடலில் சில நாட்கள் தங்கி யிருந்தார். நேற்றிரவு அவர் என்னிடம் விடை பெற்றுக் கொண்டு அந்தர்தானமாகி மறைந்து விட்டார். என்னைத் தயவு செய்து வெளியே விட்டு விடுங்கள்" என்றது பூனை.

குறும்புக்காரனுடைய தாயார் அனுதாபப் பட்டுக் கதவைத் திறந்து விட்டாள். உடனே பூனை தாவி வெளியே வந்து கண்ணுக்குத் தெரியாமல் ஓடிப் போயிற்று.

அறியாவூரில் எல்லாரும் மறுபடியும் முன்போல் ஆடும் கோழியும் உணவில் சேர்த்துக் கொள்ள ஆரம் பித்தார்கள்.

சாதுர் மாஸ விரதம் என்றால் மழை காலத்தில் பக்தர்கள் ஒரு ஊரில் தங்கி பூஜைக்கிரமம் நடத்தி, போஜனம் சுருக்கி நியமமாக நான்கு மாதங்கள் கழிப்பது.

முதல்வன் மகாதேவன் அருளைப் பெற்றால் எந்த நாயும் சிவிகை ஏறும். ஆனால் பொய்யை மூடிப் பிழைப் பவர்கள் அருள் பெற மாட்டார்கள். பொய்யை விட்டுத் தள்ளவும் ஆண்டவன் அருள் வேண்டும். அதற்கு அழுது தீர்க்கவேண்டும். மனம் கரைந்து அழுதால் அருள் பெறுவோம்.

புத்தி வந்தது

பரத்வாஜ வம்சத்தில் பிறந்த ஒருவர் வாலிபப் பருவத்திலே தவம் செய்து கொண்டிருந்தார். அவ ருக்கு ஒரு ஆசை, முன்னாளில் ரிஷிகள் எழுதிய உபநிஷத்துகளைப் போல் தாமும் ஒரு நல்ல உப நிஷத்துப் புதிதாக எழுத வேண்டும் என்று. இப்படி ஆசைப்பட்டு, இதற்கு என்ன செய்வது என்று தோன்றாமல் சதுர்முகப் பிரம்மனைத் தியானித்துத் தவம் செய்தார்.

''குழந்தாய்! என்ன வேண்டும்?'' என்றான் பிரம்மன்.

''நான் ஒரு நல்ல புதிய உபநிஷத்து எழுத வேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டும். சொல்லுவீராக'' என்றார் பாரத்துவாஜ வாலிப ரிஷி.

''பழைய உபநிஷத்துக்களை நன்றாய்ப் படிப் பாயாக'' என்றான் பிரம்மன்.

''பழைய உபநிஷத்துக்களை நான் படித்தேனானால் புதிய விஷயம் ஒன்றும் தோன்றாது. பழைய உப

நிஷத்துக்களில் சொன்னதே என் மனத்தைக் கவர்ந்து விடும். வேறு புதுக் கருத்துக்களுக்கு இடமே இராது. எழுத உட்கார்ந்தால் பழைய ரிஷிகள் சொல்லி யிருப் பதையேதான் நானும் எழுதுவேன். புதியதொன்றும் இருக்காது. என்னுடைய எண்ணம் நிறைவேருமல் போகும்'' என்ருர் ரிஷி.

‘‘நீ சொல்வது உண்மைதான். உபநிஷத்துக் களைப் படிக்க வேண்டாம். கொஞ்சகாலம் உலக வாழ்க்கை வாழ்ந்து முடிப்பாய். அப்படிச் செய்தால் புதுக் கருத்துக்கள் தோன்றும்'' என்ருன் பிரம்மன்.

‘‘நான் ஒரு ரிஷி. உலக வாழ்க்கையில் நான் எப்படி இறங்கலாம்? உலக வாழ்க்கையில் புகுந்தால், அதுவே என்னுடைய உள்ளத்தை யெல்லாம் பிடித்துக் கொள்ளும். ஞானம் நிறைந்த புது உப நிஷத்து எழுதத் தோன்ருது. நான் கோருவது அது வல்லவா?'' என்ருர் ரிஷி.

பிரம்மன் நான்கு முகங்களும் மலர்ந்து புன்னகை புரிந்தான்.

‘‘அப்பனே! உன்ஞல் உபநிஷத்து எழுத முடி யாது. வீண் ஆசையை வைத்துக் கொண்டு அலை யாதே!'' என்ருன்.

ரிஷிக்குச் சமாதானம் ஏற்படவில்லை. பிரம்மன் மறைந்து விட்டான்.

ஒரு வேடன் வந்து, ‘‘ஐயா! மிகவும் தாகமாக இருக்கிறது. களைத்துப் போய் இருக்கிறேன். கொஞ் சம் குடிக்கத் தண்ணீர் கொடுப்பீரா?'' என்று ரிஷியைக் கேட்டான்.

உள்ளே சென்று ரிஷி தம் கமண்டலத்தைப் பார்த்தார். அதில் தண்ணீர் இல்லை. ‘‘கொஞ்சம்

பொறு. குளத்துக்குச் சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன்'' என்றார்.

''குளத்துத் தண்ணீர் எனக்கு வேண்டாம். அது என் தாகத்தைத் தணிக்காது'' என்றான் வேடன்.

''அப்படியானால் கொஞ்ச தூரத்தில் ஓடும் ஆறு இருக்கிறது. அங்கே போய் ஆற்றுத் தண்ணீரை மொண்டு வருவேன். நீ இங்கேயே இரு'' என்றார் ரிஷி.

''முடியாது. நான் காத்திருக்க முடியாது. நீர் ஆற்றுக்குச் சென்றால் பின் திரும்பி வரமாட்டீர். அங்கே புலியும் ஓநாயும் மக்களைக் கொல்லக் காத்திருக்கின்றன'' என்றான் வேடன்.

ரிஷிக்கு வேடனுடைய பேச்சுக்கள் ஒன்றும் விளங்கவில்லை. யோசித்துக் கொண்டிருந்தார். வேடன் மறைந்து போனான்.

''ஓகோ! இவன் வேடன் அல்ல. நான்முகக் கடவுளே எனக்கு உபதேசிக்க இந்த நாடகம் நடத்தினான் போலிருக்கிறது. நான் பழைய உபநிஷத்துக்களைப் படிக்க மாட்டேன் என்று சொன்னதுபோல் இந்த வேடன் ''குளத்து நீர் வேண்டாம்'' என்றான். உலக வாழ்க்கையும் வேண்டாம் என்றேன். ஓடும் ஆறு போல் அல்லவா உலக வாழ்க்கை. நிலையில்லாத பொருள்கள் உண்டாகி மறைந்து, மறுபடியும் உண்டாகி, ஆற்று நீரைப் போல் வாழ்க்கை ஓடுகிறது. அதில் மொண்டு ஞானத் தண்ணீர் பெறுவதும் இயலாது என்றேன் அல்லவா நான்? என் கமண்டலத்தில் தண்ணீர் இல்லை. தண்ணீர் வேண்டுமானால் ஆற்றுக்காவது குளத்துக்காவது போய்த்தான் பெற வேண்டும், புத்தி வந்தது!'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார் ரிஷி.

"சந்தோஷம்" என்முன் பிரம்மன், ரிஷிக்கு மறுபடி தரிசனம் தந்து.

ஆயுதபூஜை

பாண்டிய நாட்டில் ஒரு நல்ல ராஜா இருந்தான்.

நவராத்திரி வந்தது. ஆயுத பூஜை நடத்தினன். வில்லும், அம்பும், கத்தியும், சூலமும், கலப்பையும், மண்வெட்டியும், சுத்தியும், உளியும், அரிவாளும், ரம்பமும், கோடாலியும், ராட்டையும், தறியும் இன்னும் எல்லாக் கருவிகளையும் ஆயுதங்களையும் தங்கள் தங்கள் தொழிலுக்குச் சேர்ந்தவைகளை அவரவர்கள் கொண்டு வந்து வைத்தார்கள்.

அரசன் பெரியபூஜை செய்ய ஏற்பாடுகள் செய்தான்.

பூஜைக்குப் பிராமணர்கள் தங்கள் ஓலைச் சுவடிகளையும் கொண்டு வந்து வைத்தார்கள். செருப்புத் தைப்பவர்களும் தங்கள் சாமான்களைக் கொண்டு வந்து வைத்தார்கள்.

அரண்மனையில் ஒரு மூலையில் ஒரு விளக்குமாறு துக்கத்தோடு சுவரில் சாய்ந்து கொண்டிருந்தது.

"ஏன் விளக்குமாறே! ஒரு மாதிரியாக இருக்கிறாய்? நவராத்திரி பூஜைக்காக அரமனை யெல்லாம் சுத்தம் செய்து களைத்துப் போனாயா?" என்று கேட்டாள், ராஜகுமாரி. அவள் மிக நல்ல பெண்.

"இல்லை, தாயே! எனக்கு வேலை செய்வதில் ஒரு சலிப்பும் கஷ்டமுமில்லை. எல்லா ஆயுதங்களும் கருவிகளும் பூஜைக்கு வைத்திருக்கிறார்கள். என்னை மட்டும் மறந்து விட்டார்களே! இதுதான் என் துக்கம்" என்றது விளக்குமாறு.

"ஐயோ பாவம்!" என்று ராஜகுமாரி பரிதாபப் பட்டு பூஜை யிடத்துக்குச் சென்றாள்.

"விளக்குமாறு, முறம் ஏன் இங்கே பூஜைக்கு வைக்கப்படவில்லை? அவற்றையும் கொண்டுவந்து வையுங்கள்" என்று சேவகர்களிடம் சொன்னாள்.

அவர்கள் அரசனிடம் போய் இதைப் பற்றிக் கேட்டார்கள்.

அரசன், "தொழிலில் ஏற்றத் தாழ்வு இல்லை என்பது சாஸ்திரமல்லவா? குருக்களைக் கேட்கலாம். அவரை அழைத்து வாருங்கள்" என்றான்.

குரு வந்தார். இவர் முதலில் கொஞ்சம் தயங்கினார். இப்படியும் அப்படியும் சொன்னார்.

"புஸ்தகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்" என்றான் அரசன்.

குருவும் ஏட்டைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்.

பிறகு, "ராஜகுமாரி சொல்லுவது சரியே. மக்களுக்குப் பயன்படும் எந்தத் தொழிலும் அதற்கு உபயோகப்படும் எந்தக் கருவியும் பூஜைக்குத் தகுந்தது" என்றார்.

முறத்துக்கும் விளக்குமாறுக்கும் பூஜை நடக்க வேண்டுமென்று உத்தரவு பிறந்தது. அரசனுடைய கட்டளைப்படி மந்திரியும் அதிகாரியும் போய் அவற்றையும் எடுத்துவந்து ஆயுத பூஜையில் வைத்தார்கள்.

தேவி சந்தோஷப்பட்டாள். அன்று முதல் பல காலம் பாண்டி ராஜாவினுடைய நாட்டில் எந்த மூலையிலும் அழுக்கு, தூசி என்பது இல்லாமல் சுத்தமாக இருந்தது.

அன்பிலே பொறாமை

காட்டில் ஒரு புலியிருந்தது. அதற்கு வயது அதிகமாகிக் கொஞ்சம் தள்ளாமல் போய்விட்டது. அந்தக் கிழப்புலிக்கு ஒரு பெண் இருந்தது. அதற்கு வயது முதிர்ந்ததும் அதை ஒரு ஆண் புலிக்குக் கலியாணம் செய்து கொடுத்து விட்டுத் தாய்ப்புலி சந்தோஷமாக இருந்தது. மானோ மாடோ எருமையோ ஏதேனும் சிக்கினல் சின்னப் புலிகள் தாமும் தின்று கிழப்புலிக்கும் மிகுந்த மாமிசத்தைக் கொடுக்கும். அதுவும் தன் பசியைத் தீர்த்துக் கொள்ளும். தன் தாய் பேரில் பெண் புலிக்கு மிகுந்த பிரியம்.

''என்னை நீ லட்சியமே செய்வதில்லை. எப்போதும் தாயைப் பற்றியே உனக்குக் கவலை'' என்று ஆண் புலி தன் மனைவியிடம் குறை சொல்லிக் கொள்ளும்.

''என்னைப் பெற்ற தாயை நான் எப்படி மறக்க முடியும்?'' என்று பெண் புலி சமாதானம் சொல்லும்.

* * *

கிழப் புலிக்குத் தன்னுடைய பெண்ணின் நல்ல குணம் தெரியவில்லை. தெய்வத்தைத் தியானித்துக் குறை சொல்லிக் கொள்ள ஆரம்பித்தது.

''தெய்வமே! மாகாளியே! ஏன் என்னை இப்படி அநாதையாக விட்டுவிட்டாய்? என் மகள் தன் புருஷனோடு விளையாடிச் சிரித்துக்கொண்டு சந்தோஷமாக இருந்து வருகிருள். என்னை மறந்தேவிட்டாள். நான் பிரியமாக வளர்த்த குட்டி என்னை இப்போது கவனிப்பதில்லை!'' என்றது.

காளியம்மை கிழப் புலிக்குச் சமாதானம் சொன்னுள்: "மகளே! நீ பாக்கியசாலி. உன் குழந்தை உன்னிடம் மிகப் பிரியமாக இருக்கிறது. தன் புருஷனை அது விட்டுவிட முடியுமா? நீதானே விவாகம் செய்து கொடுத்தாய்'' என்ருள் தேவி.

"நான் தான் கட்டிக் கொடுத்தேன். ஆனுல் விவாகமானதும் இப்படி என் மேல் வைத்திருந்த பிரியத்தை மறந்துவிடுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் சீக்கிரம் இறந்துபோனுல் சுகம்'' என்றது.

"பைத்தியமே! இப்படிப் பேச வேண்டாம். உனக்குப் புத்தி இல்லை'' என்ருள் தேவி.

தேவி சொன்னதில் புலிக்குச் சாந்தி ஏற்படவில்லை. துக்கத்திலேயே இறந்துபோயிற்று. தேவியின் அருளால் அந்தக் கிழப் புலி மனித ஜன்மம் எடுத்தது. புலி ஒரு வீட்டுக்கு மருமகளாகப் புகுந்தாள்.

"இப்படி உண்டா, ஒருவர்! நான் என் அப்பா வீட்டில் எவ்வளவோ பிரியமாக வளர்ந்தேன். என்னை இவருக்குக் கொடுத்தார்களே! இவர் என்னை விரும்பாமல் இம்சை செய்கிருரே! காரணம் இல்லாமல் கோபித்துக் கொள்கிருரே! எப்போதும் என் தாயார், அந்தச் சண்டாளி குப்பம்மாவிடமே தான் சம்பாதிப்பதையெல்லாம் கொட்டி நாசம் செய்து வருகிருரே! கைச் செலவுக்குப் பத்து ரூபாய்கூட எனக்குத் தரமாட்டேன் என்கிருரே." இவ்வாறு அழுதாள் வள்ளியம்மா தன் அண்ணன் சுந்தர முதலியிடம்.

"தான் சம்பாதிப்பதைத் தன் தாயாரிடம் கொடுப்பதில் நமக்கு என்ன நஷ்டம்?'' என்ருன் சுந்தர முதலி.

"ஐயோ! அதை ஏன் கேட்கிருய்? எல்லாம் அவளுடைய பெண்கள் காளியக்கா நல்லமுத்து இவர்களுக்கு ரகசியமாகக் கொடுத்துவிடுகிருள். இந்தக் கிழவி தன் மகனுடைய வாழ்க்கை எப்படிக் கெட்டாலும் சரி என்று இப்படிச் செய்கிருள்" என்ருள் வள்ளி.

"தான் பெற்ற பெண்களின்மேல் கொஞ்சம் பிரியமாக இருப்பதைப் பார்த்து நாம் அசூயை கொள்ளலாகாது" என்ருன் சுந்தர முதலி.

"அண்ணு! கொண்ட மனைவியை அலட்சியம் செய்துவிடும் ஒருவனுக்கு என்னைக் கொடுத்துக் கெடுத்தீர்களே!" என்று அழுதாள்.

பிறகு வள்ளிக்கு ஒரு குழந்தை பிறந்தது. நல்ல அழகான குழந்தை. ஆனல் பிரசவத்துக்குப் பின் கடுஞ் சுரம் கண்டு வள்ளியம்மை உயிர் நீத்தாள்.

அவளுடைய ஆவி தேவியை அடைந்தது. "புத்தி வந்ததா?" என்ருள் தேவி.

"கணவனும் மனைவியும் பிரியமாக இருப்பதே நல்லது. பெற்ருேர் அதைக் கண்டு அசூயைப் படலாகாது. அறிவு வந்தது" என்ருள் வள்ளிப் புலி.

"சரி, இப்போது மறுபடி நீ புலி ஆவாயா அல்லது மனித ஜன்மம் வேண்டுமா?" என்ருள் தேவி.

"நான் புலியாகவே இருப்பேனுக! மனித ஜன்மம் வேண்டாம். மனித உலகம் ரொம்பக் கெட்டுப் போயிருக்கிறது!" என்ருள் வள்ளி.

"இன்னும் உனக்குப் பைத்தியம் தீரவில்லை! நீ எங்கேயும் போகவேண்டாம். என் கூடவே இரு" என்ருள் மாகாளி.

இல்லறம்

தவம் செய்துகொண்டிருந்த ஒரு ரிஷி பறவைகளைப் பார்த்தார். தானும் ஒரு பறவையானால் வாழ்க்கையில் சுகம் காணலாம் என்று எண்ணினார்.

அவர் செய்து வந்த தவத்தின் பலத்தினால் அவர் எண்ணிய எண்ணம் உடனே கைகூடிவிட்டது. அவர் ஒரு குருவியாகி ஒரு பெண் குருவியோடு சந்தோஷமாகப் பறந்து சென்றார்.

* * *

கூட்டிலிருந்த தம் குஞ்சுகளுக்கு இரண்டு குருவிகளும் சிறு புழுக்கள் கொண்டு வந்து தந்து தாமும் தமக்கு வேண்டிய உணவைச் சம்பாதித்துக் கொண்டு சில நாட்கள் வாழ்ந்து வந்தன. ஒருநாள் ஆண் குருவி கூட்டுக்குத் திரும்பி வரவில்லை. வேறொரு பெண் குருவியோடு பறந்து போயிற்று.

"இந்தக் குருவி மனித ஜன்மத்து நடவடிக்கையை என்னிடம் காட்டிவிட்டது" என்று துயரப்பட்டது பெண் குருவி.

சிலகாலம் கழித்து ஒருநாள் காலையில் ரிஷிக் குருவி தன் பழைய காதலியைச் சந்தித்தது. ஒரு மரக் கிளையில் உட்கார்ந்திருந்த பெண் குருவியண்டை முதலில் கொஞ்சம் எட்டி உட்கார்ந்து, மெள்ள மெள்ள அதன் அண்டை நகர்ந்தது.

"கிச்சு கிச்சு! கிச்சு கிச்சு!—தயவு செய்து தூரவே நில். என்னிடம் வரவேண்டாம்" என்றது பெண் குருவி.

"கிச்சு கிச்சு—ஏன் இப்படிச் சொல்லுகிறாய்?" என்றது ரிஷிக் குருவி.

“நீ உண்மையான பறவையல்ல. நிஜமான குருவியாயிருந்தால் இப்படி என்னையும் என் குஞ்சுகளையும் விட்டுவிட்டு இன்னொரு மனைவியைத் தேடிக் கொண்டு போவாயா?” என்றது பெண் குருவி.

ஆண் குருவி வெட்கமடைந்து பறந்து போயிற்று.

பறந்து போய் ஒரு மரத்தின்மேல் தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தது. அங்கே ஒரு பூனை மெள்ளப் பதுங்கிக்கொண்டு பறவையை நெருங்கிற்று.

குருவி பயந்துபோய்த் துள்ளிக் கீழே உயிரற்று வீழ்ந்தது. விழுந்ததும் குருவி ரிஷியாகப் போயிற்று. அங்கேயே மறுபடி தவம் செய்துகொண்டு ரிஷி உட்கார்ந்தார்.

பூனை ரிஷியண்டை மெதுவாகப்போய் மோந்து பார்த்தது. பறவை வாசனை இன்னும் கொஞ்சம் இருந்தபடியால் இப்படிச் செய்தது.

ரிஷி பூனையை ஒன்றும் செய்யவில்லை. பூனையும் அவர் பக்கத்தில் தபசிபோல் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்தது.

“மனிதனும் பறவையைப் போல் நற்குணம் அடையக்கூடாதா?” என்று ரிஷி துக்கப்பட்டுத் தியானித்துக்கொண்டு தவம் செய்தார்.

“அது முடியாது” என்றது பூனை. ரிஷியின் யோசனையை அது எப்படியோ தெரிந்துகொண்டது.

“ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?” என்றார் ரிஷி.

“மியாவ்! மியாவ்! சுபாவம் என்பது ஒரு கொடிய சக்தி. நானும் நல்லவன் ஆகவேண்டும் என்று எவ்வளவோ பார்க்கிறேன். ஆனால் பறவையோ எலியோ கண்டால் உடனே எல்லாம் மறந்து போகிறது. அதைப் போலவே உன்னுடைய ஜாதி

விசேஷமும். மனித ஜன்மத்தில் ஆண் மக்களுடைய உள்ளம் நிலையில் நிற்கிறதில்லை. பூனைகளாகிய நாங்களும் இந்த விஷயத்தில் உங்களைப் போலத்தான் இருக்கிறோம்'' என்றது பூனை.

ரிஷிக்கு வெட்கம் இன்னும் அதிகமாயிற்று.

''தயவு செய்து நீ அகன்று போ. நான் தவம் செய்யவேண்டும்'' என்றார்.

''மியாவ்! மியாவ்!—இதையும் அதையும் எண்ணிக் கொண்டு சஞ்சலப்பட்டுக் கொண்டு நீர் என்ன தவம் செய்யப் போகிறீர்?'' என்று சொல்லிவிட்டுப் பூனை ஓடிப்போயிற்று.

ரிஷிக்குத் தேவி பிரசன்னமாகி, ''அப்பனே! உனக்கு ஆசை நீங்கவில்லை. நீ முதலில் இல்லறம் சரியாக நடத்தப் பயிற்சி அடைந்து, அதன் பிறகு தவம் செய்!'' என்றாள்.

எலியின் முக்தி

சென்னப்பட்டணத்தில் ஒரு நாஸ்திகனும் ஒரு பக்தனும் பக்கத்து வீட்டுக்காரர்கள். இருவருக்கும் சிநேகம் வரவர அதிகரித்தது. நாஸ்திகன் நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். பேசுவது நாஸ்திகமாயினும் நடவடிக்கைகளில் யோக்கியன். தினமும் பேசிப் பேசி வாதிப்பார்கள். முடிவில் இருவரும் உட்கார்ந்து காப்பி பலகாரம் சாப்பிட்டுக் கலைவார்கள்.

நாஸ்திகன் கடவுள் 'இல்லை' 'இல்லை' யென்று தினமும் கடவுளைத் தியானித்து வந்தான். பக்தன் 'உண்டு' என்று நிரூபிப்பதற்காக எதிர்க்கட்சியில்

சொல்லப்படும் பூர்வபட்சத்தை எடுத்துச் சொல்லி எடுத்துச் சொல்லித் தன்னுடைய பக்தியை அரைப் பங்கு இழந்துவிட்டான். திடீர் என்று இருவருக்கும் டைபாய்டு ஜுரம் வந்து இருவரும் இறந்து விட்டார்கள்.

யமன் நாஸ்திகனை வரவேற்றான். "பிள்ளாய்! நீ உன்னையும் அறியாமல் நல்ல கதி அடைந்துவிட்டாய். உனக்காகக் காத்திருக்கிறார்கள். பார் அங்கே!" என்று விஷ்ணுவின் கிங்கரர்களைக் காட்டி, "செல் அங்கே!" என்றான்.

"வேண்டாம்! கடவுள் இல்லை!" என்றான் நாஸ்திகன் அங்கேயும்.

ஹரியின் கிங்கரர்கள் கேட்கவில்லை. அவனைப் பலாத்காரமாக இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவனும் அழுதுகொண்டே விஷ்ணு லோகத்துக்குச் சென்றான்!

* * *

"அப்பனே!" என்று யமன் பக்தனைப் பார்த்து அநுதாபத்தோடு பேச ஆரம்பித்தான்.

பக்தன் மறுபடியும் வாதாட ஆரம்பித்தான். "உன் வாதங்களால் இப்போது பயனில்லை. நீ உன் வாழ் நாளை வாதப் பிரதிவாதங்களில் வீண் செலவு செய்து விட்டாய். மறுபடியும் திரும்பிப் போ. கொஞ்ச காலம் சீரங்கம் கோயிலில் ஒரு மூஞ்சூறு எலியாக இருந்து, அவ்விடத்தில் போடப்படும் எச்சில், அழுக்கு இவைகளைத் தின்று பயத்தோடு வாழ்க்கை நடத்தி விட்டுப் பிறகு வா!" என்று யமன் பக்தனைத் தட்டிக் கொடுத்து அனுப்பிவிட்டான்.

"தாயே! பெருந்தேவி! இப்படி என்னைச் செய்யலாமா?" என்று பக்தன் அழுதுகொண்டே சீரங்கம் வந்து சேர்ந்தான். "சேர்ந்தது" என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் பக்தன் இப்போது எலியாகப் போய்விட்டான்.

அந்த எலி தாயார் சந்நிதியிலேயே தன் வாழ்க்கையை நடத்திற்று. எலிகளுக்கு ஆயுள் மிகக் குறைவு. மனிதனுக்குத்தான் நூறு வருஷங்கள். எலிகள் வெகு சீக்கிரம் கிழம் தட்டிப்போய் இறந்துவிடும். தவிர, கிழ வயதுக்கு முன்னமேயே பூனையோ, பெரிய எலியோ பிடித்துத் தின்றுவிடும். நம்முடைய பக்தர் ஆறு மாதங்களுக்குள் அம்மன் திருவடி யடைந்துவிட்டார்.

"வா! கண்ணே! உனக்காகத்தான் காத்திருந்தேன்" என்று தேவி எலியை அழைத்தெடுத்து அணைத்துக்கொண்டு சென்றாள்.

சோம்பேறிச் சூரியன்

"அப்பாடா! போதுமப்பா இந்தத் தொழில்!" என்றது ஈ.

"என்ன உனக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டது?" என்றது மந்தை வெளியில் தரையைக் கொத்திக் கொண்டிருந்த ஒரு கோழி.

"சப்பலடியிலிருந்து மயிலாப்பூர் வரை மூட்டை வண்டி இழுத்து வந்தால் உனக்குத் தெரியும்" என்றது ஈ.

"என்ன மூட்டை? என்ன வண்டி நீ இழுத்தாய்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை" என்றது கோழி.

"உனக்கு எப்படித் தெரியும்? மண்ணைக் கீறிக் கொத்திப் புழுவும், சிந்திய அரிசியும் தின்னும் ஜீவன் நீ.

உனக்கு என்ன தெரியும்? நான் இன்று ஒரு ஆள் முதுகில் உட்கார்ந்து அவனோடு வண்டியைத் தள்ளித் தள்ளி அந்த வண்டியை இங்கே கொண்டு வந்து சேர்த்தேன். அந்தக் களைப்பை உன்னிடம் சொல்லி என்ன பயன்?'' என்றது ஈ.

''உனக்கு இவ்வளவு பலம் எப்படி வந்தது? வண்டி ரொம்பப் பாரம் ஆச்சே?'' என்றது கோழி.

''பலம் எல்லாம் உள்ளத்திலும் ஊக்கத்திலும் இருக்கிறது. வழியில் எவ்வளவோ பலகாரக் கடைகள். வாழைப்பழம் நன்ருகப் பழுத்து அழுகித் தொங்கிக் கொண்டிருந்த கடைகள். அவ்விடம் நின்று விட லாமா என்று யோசித்தேன். ஒவ்வொரு இடத்திலும் இப்படி ஆசை தோன்றும். ஆனல் ஐயோ! பாவம்! இந்த ஆட்கள் நான் இல்லாமல் எப்படி வண்டி இழுப் பார்கள் என்று பரிதாபப்பட்டுச் சாப்பாட்டுக் கடைகளி லுங்கூட நான் நிற்கவில்லை'' என்றது ஈ.

''உன் ஜீவகாருண்யமே ஜீவகாருண்யம். எனக் கும் ஆசை உண்டு. நல்லவனுக இருக்கலாம் என்று பார்க்கிறேன். முடியவில்லை. இந்தப் புழுக்களின் ருசியை நான் தாங்க முடியவில்லை'' என்றது கோழி.

''நல்லவர்களுக்கு இது காலமல்ல. ஏதோ மருந்து போட்டுப் போட்டு எங்களைக் கொல்லுகிருர்கள். நாம் என்ன செய்தோம்? இந்த மனிதர்கள் இப்படிக் கோபாவேசமாக நம் பேரில் யுத்தம் நடத்துகிருர்களே!'' என்றது ஈ.

''ஏதோ வியாதிக் கிருமிகளைக் கண்டு பயந்து இப் படிச் செய்கிருர்கள். அந்தக் கிருமிகள் உங்கள் கால் களிலும் உங்கள் தும்பியிலும் ஒட்டிக்கொண்டு இவர்கள்

உடலிலும் ரத்தத்திலும் ஏறி விடுகிறதென்று இப்படிச் செய்கிறார்கள்'' என்றது கோழி.

“அதற்கென்ன செய்வது? நாம் குளத்தில் நன்றாகத் தேய்த்து ஸ்நானம் செய்து விட்டு அப்புறம் இந்தப் பயங்காளிகள் மேல் உட்கார முடியுமா? ஸ்நானம் செய்தால் உட்கார முடியுமா? ஸ்நானம் செய்தால் செத்துப் போய் விடுவோமே!'' என்றது ஈ.

“உண்மை'' என்றது கோழி மிகத் துக்கத்துடன்.

இன்னும் ஈ சொல்லிக் கொண்டு போயிற்று: “குப்பைத் தொட்டியைக்கூட மூடி வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் சில புண்ணியவதிகள் மூடியைத் திறந்து குப்பையைக் கொட்டிவிட்டு மறுபடி மூடாமல் போய் விடுகிறார்கள். நம் பேரில் இந்தத் தாய்மார்களுக்காவது கொஞ்சம் கருணை இருக்கிறது.''

கோழிக்குத் தூக்கம் வந்து விட்டது.

“சரி! நான் தூங்க வேண்டும். இல்லாவிட்டால் சரியாகக் காலையில் எழுந்து சூரியனை எழுப்ப முடியாது. அந்தச் சோம்பேறிச் சூரியன் நான் கூப்பிட்டுக் கத்தி எழுப்பாமல் போனால் தூங்கிக் கொண்டே இருப்பான். காலத்தில் எழுந்திருக்க மாட்டான்'' என்றது கோழி.

அப்போது சந்திரன் கிழக்கே மெள்ளக் கிளம்பினான். கோழியும் ஈயும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுச் சிரித்தான். சத்தம் போடாமல் சிரித்தான்.

“எனக்காக ஒரு கோழியும் கூப்பிடவில்லை. நானாக எழுந்துவிட்டேன்'' என்று வேடிக்கையாக எண்ணினான் சந்திரன். அன்று அவனைக் கிரகணம் பிடிக்கப் போகிறது என்பது அவனுக்குத் தெரியவில்லை.

நெய்ச் சாமியார்

அருணாசலஞ் செட்டி கிராமங்களில் அங்கங்கே சென்று நல்ல நெய் குறைந்த விலைக்கு வாங்கிச் சேர்த்துப் பட்டணத்தில் நல்ல விலைக்கு விற்பான். இப்படி அவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்தான்.

பணம் சேரச் சேர, 'இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும்' என்று ஆசை அதிகமாயிற்று. நெய்யோடு கொஞ்சம் கடலையெண்ணெயும் சேர்த்து விற்க ஆரம்பித்தான். நல்ல லாபம் கிடைத்தது.

அவனிடம் நெய் வாங்கியவர்கள் "ஏன் நெய் இப்போது முன்போல் இல்லை?" என்று கேட்டால், "கறக்கும் பசுக்களுக்கு இப்போது கிராமங்களில் நல்ல தீனி போடுவதில்லை. பசும்பாலே கெட்டுப் போச்சு!" என்பான்.

எல்லா வியாபாரிகளும் அருணாசலஞ் செட்டியோடு போட்டி போட்டு நெய்யில் எண்ணெய் கலந்து விற்க ஆரம்பித்தார்கள்.

"இப்படி ஊர் கெட்டுப் போச்சே!" என்று தெற்கேயிருந்து வந்த ஒரு சாமியார் எல்லாருக்கும் வேதாந்த உபதேசம் செய்து வந்தார்.

அருணாசலஞ் செட்டி "கடவுள் இல்லை" என்றான்.

கடவுள் இருந்தால் நெய்யில் எண்ணெய் சேர்த்து விற்பவன் தண்டனை அடைவான். ஆனபடியால் அருணாசலஞ் செட்டிக்கு இந்த நிச்சயம் ஏற்பட்டது. கடவுள் இல்லை என்று தானும் உறுதியாக நம்பினான். பிறருக்கும் உபதேசித்தான்.

"அப்பனே, மேலே பார், சுற்றிப்பார், உலகத்தைப் பார், கடவுள் இல்லை என்று ஏன் சொல்லுகிறாய்?" என்று அவனுக்கு நிறையத் தமிழ்ப் புஸ்தகங்கள் தந்து வாசிக்கச் சொன்னார் சாமியார்.

அவனும் படித்தான். நூல்களைப் படித்தால் ஞானம் வருமா? உள்ளே பண ஆசை வேலை செய்து கொண்டிருக்கும் போது, எவ்வளவு படித்தாலும் பயன் இல்லை கடவுள் இல்லை என்றே அவன் எண்ணம். அது மாறவில்லை.

ஒரு நாள் அருணாசலஞ் செட்டி வீட்டில் திருடர்கள் புகுந்து சேர்த்து வைத்திருந்த பணத்தை யெல்லாம் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். அருணாசலஞ் செட்டி யாரையும் நம்பவில்லை. எந்த பாங்கியிலும் பணம் போடவில்லை. எல்லாரும் மோசம் செய்வார்கள் என்று அவனுடைய பயம். தன்னைப் போலவே எல்லாரும் இருப்பார்கள் என்று அவன் நினைத்தான். ஆனபடியால் அவன் சம்பாதித்த பணம் எல்லாம் ரொக்கமாக வீட்டில் வைத்திருந்தான். திருடர்கள் எல்லாம் சுரண்டிக் கொண்டு போய் விட்டார்கள்.

"அய்யோ!" என்று அழுதான். பிறகு மறுபடியும் வியாபாரம் செய்ய முயற்சி செய்தான்.

ஆனால், யாரும் அவனை நம்பி அவனுக்கு முதலுக்குப் பணம் கொடுக்கவில்லை. அவன் சொந்த வியாபாரம் செய்வதை விட்டு விட்டு ஒரு எஜமானன் வீட்டில் குமாஸ்தா வேலை செய்து பிழைத்தான். அதன் மேல் அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும் பிறந்தது. சுவாமியார் கொடுத்த புஸ்தகங்களை யெல்லாம் திரும்பப் படித்தான். அவற்றில் உண்மை கண்டான். பிறருக்கும் சொல்ல ஆரம்பித்தான்.

தான் இழந்து விட்ட பணத்தையும் மறந்துவிட்டான். தினமும் கோயிலுக்குப் போய் சுவாமி கும்பிட்டு வருவான்.

அவனுடைய எஜமான் கூட இவனிடம் சமய விசாரம் கேட்க ஆரம்பித்தான். எல்லாருக்கும் அவனிடம் பிரியம். "நெய்ச் சாமியார்" என்று எல்லாரும் அவனை அழைப்பார்கள்.

"உம்முடைய வீட்டில் திருடன் புகுந்தானே. கடவுள் ஏன் உம்மைக் காக்கவில்லை?" என்று சிலர் கேட்பார்கள். கோபித்துக் கொள்ளாமல் பதில் சொல்லுவான்:

"என்னைத் திருத்தவே திருடன் வந்தான். ஆண்டவன் கூத்தை யாரே அறிவார்? திருடன் என் பணத்தை யல்ல எடுத்துப் போனது. என் சித்த மலத்தை எடுத்துப் போய்விட்டான்" என்பான்.

பூவும் பூச்சியும் புழுவும்

"மணக்கும் பூவே! உன் தேனைக் குடித்து நாங்கள் சுகமாக வாழ்கிறோம். இந்தத் தித்திக்கும் தேனை உண்டாக்க நீ எப்படிக் கற்றாய்?" என்றது தேனீ.

"நீங்கள் எங்கள் தேனைக் குடிப்பதனால் எங்களுக்கு அளவற்ற சந்தோஷம்" என்றது பூச்செடி.

"நாங்கள் குடிக்கிறோம் உன் தேனை. உனக்கு என்ன அதில் லாபம்?" என்றது தேனீ.

"உங்களையும் அறியாமல் நீங்கள் எங்களுக்குத் தொண்டு செய்கிறீர்கள்" என்றது செடி.

"ரகசியத்தைச் சொல்வாயா?" என்றது தேனீ.

"சொன்னால் தேனைக் குடிக்காமல் போய் விடுவீர்கள். அப்புறம் நாங்கள் கஷ்டப்படுவோம்" என்றது செடி.

"சொல்லுவாயா, சொல்ல மாட்டாயா?" என்று தேனீ கொஞ்சிக் கேட்டது.

"சொல்லுகிறேன், கேள். நீ யாருக்கும் சொல்லக் கூடாது. ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டியது" என்றது செடி.

"அப்படியே ஆகட்டும்" என்றது தேனீ.

"பூவுக்கும் பூவுக்கும் நீங்கள் கலியாணம் செய்விக்கிறீர்கள். அதனால் சூல் கொண்டு, பூவெல்லாம் காயாகிப் பழுத்து, விதை முற்றி, நாங்கள் சந்தானம் பெறுகிறோம். உங்களுக்குத் தெரியாமல் உங்களால் நாங்கள் விருத்தியடைகிறோம்" என்றது செடி.

தேனீ மிக வியந்தது. "நாழி ஆயிற்று. நான் வீடு போய்ச் சேர வேண்டும். நேரமானால் அம்மா கோபித்துக் கொள்வாள்" என்றது தேனீ.

"வழி தெரியுமா? எங்கெங்கேயோ போய்ப் பூவிலிருந்து பூவுக்குப் பறந்து வந்திருக்கிறாய்" என்றது செடி.

"வழியா? வழி என்றால் என்ன? இங்கிருந்து நான் கிளம்பியதும் 'விர்' என்று இழுத்துக் கொள்கிறாள் எங்கள் தாய். நேராக வீடு போய்ச் சேருவோம்" என்றது தேனீ.

செடி ஆச்சரியப்பட்டது. "எனக்கும் சிறகு இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று எண்ணிற்று.

"பைத்தியமே!" என்றது செடியிலிருந்த குருவி. "நீ இங்குமங்கும் பறந்தாயானால் நான் எங்கே உட்காருவது?"

"நல்ல குருவியே, ஒரு புழு என்னைத் தொந்தரவு செய்கிறது. என் தினவு பொறுக்க முடியவில்லை. அதைக் கொத்திக்கொண்டு போ, உன் குஞ்சுக்கு" என்றது செடி.

அப்படியே குருவியும் செய்தது.

இதற்குள் தோட்டக்காரன் வந்து செடிக்குத் தண்ணீர் வார்த்தான்.

"இவன் இருப்பதால் அல்லவோ தாகத்தில் செத்துப் போகாமல் நான் பிழைத்தேன்" என்றது செடி. ஆனால் தோட்டக்காரனுக்குச் செடியின் பாஷை தெரியாது. அவன் சும்மா தண்ணீர் விட்டுக்கொண்டே போனான்.

"பாவம்! இவன் வாழ்க்கை கஷ்டம்!" என்று பரிதாபப்பட்டது செடி.

அதற்குள் தோட்டக்காரனுடைய சிறு மகன் ஓடி வந்து, "அப்பா! நான் தண்ணீர் உகுத்துகிறேன்!" என்று சொல்லித் தகப்பன் கையிலிருந்த குடத்தைக் கொடுக்கச் சொன்னான்.

"உன்னால் தூக்க முடியாது" என்று அவன் சொல்ல, சிறுவன் அழ ஆரம்பித்தான்.

தோட்டக்காரன் ஒரு சின்னச் செம்பைக் கொடுத்து அதில் நீர் நிறைத்துக் கொடுத்தான். அதை எடுத்து அந்தக் குழந்தையும் செடிகளுக்கு நீர் வார்த்தது. செடிகளுக்கு இது மிக மகிழ்ச்சி தந்தது. சிறு கைகளிலிருந்து விழும் தண்ணீரே செடிகளுக்கு மிகப் பிரியம்.

"ரகசியத்தைச் சொல்வாயா?" என்றது தேனீ.

"சொன்னால் தேனைக் குடிக்காமல் போய் விடுவீர்கள். அப்புறம் நாங்கள் கஷ்டப்படுவோம்" என்றது செடி.

"சொல்லுவாயா, சொல்ல மாட்டாயா?" என்று தேனீ கொஞ்சிக் கேட்டது.

"சொல்லுகிறேன், கேள். நீ யாருக்கும் சொல்லக் கூடாது. ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டியது" என்றது செடி.

"அப்படியே ஆகட்டும்" என்றது தேனீ.

"பூவுக்கும் பூவுக்கும் நீங்கள் கலியாணம் செய்விக்கிறீர்கள். அதனால் சூல் கொண்டு, பூவெல்லாம் காயாகிப் பழுத்து, விதை முற்றி, நாங்கள் சந்தானம் பெறுகிறோம். உங்களுக்குத் தெரியாமல் உங்களால் நாங்கள் விருத்தியடைகிறோம்" என்றது செடி.

தேனீ மிக வியந்தது. "நாழி ஆயிற்று. நான் வீடு போய்ச் சேர வேண்டும். நேரமானால் அம்மா கோபித்துக் கொள்வாள்" என்றது தேனீ.

"வழி தெரியுமா? எங்கெங்கேயோ போய்ப் பூவிலிருந்து பூவுக்குப் பறந்து வந்திருக்கிறாய்" என்றது செடி.

"வழியா? வழி என்றால் என்ன? இங்கிருந்து நான் கிளம்பியதும் 'விர்' என்று இழுத்துக் கொள்கிறாள் எங்கள் தாய். நேராக வீடு போய்ச் சேருவோம்" என்றது தேனீ.

செடி ஆச்சரியப்பட்டது. "எனக்கும் சிறகு இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று எண்ணிற்று.

"பைத்தியமே!" என்றது செடியிலிருந்த குருவி. "நீ இங்குமங்கும் பறந்தாயானல் நான் எங்கே உட்காருவது?"

"நல்ல குருவியே, ஒரு புழு என்னைத் தொந்தரவு செய்கிறது. என் தினவு பொறுக்க முடியவில்லை. அதைக் கொத்திக்கொண்டு போ, உன் குஞ்சுக்கு" என்றது செடி.

அப்படியே குருவியும் செய்தது.

இதற்குள் தோட்டக்காரன் வந்து செடிக்குத் தண்ணீர் வார்த்தான்.

"இவன் இருப்பதால் அல்லவோ தாகத்தில் செத்துப் போகாமல் நான் பிழைத்தேன்" என்றது செடி. ஆனல் தோட்டக்காரனுக்குச் செடியின் பாஷை தெரியாது. அவன் சும்மா தண்ணீர் விட்டுக்கொண்டே போனன்.

"பாவம்! இவன் வாழ்க்கை கஷ்டம்!" என்று பரிதாபப்பட்டது செடி.

அதற்குள் தோட்டக்காரனுடைய சிறு மகன் ஓடி வந்து, "அப்பா! நான் தண்ணீர் உகுத்துகிறேன்!" என்று சொல்லித் தகப்பன் கையிலிருந்த குடத்தைக் கொடுக்கச் சொன்னன்.

"உன்னல் தூக்க முடியாது" என்று அவன் சொல்ல, சிறுவன் அழ ஆரம்பித்தான்.

தோட்டக்காரன் ஒரு சின்னச் செம்பைக் கொடுத்து அதில் நீர் நிறைத்துக் கொடுத்தான். அதை எடுத்து அந்தக் குழந்தையும் செடிகளுக்கு நீர் வார்த்தது. செடிகளுக்கு இது மிக மகிழ்ச்சி தந்தது. சிறு கைகளிலிருந்து விழும் தண்ணீரே செடிகளுக்கு மிகப் பிரியம்.

துத் தின்போம். பாலும் வெண்ணெயும் எங்களுக்கு எட்ட முடியாதபடி வைக்கச் சொல்லுங்கள். எங்களுக்கு எட்டி விட்டால், பிறகு விட முடியாது!'' இப்படிச் சொல்லி விட்டு ஓடிப்போய் ஒரு மரத்தின் மேல் ஏறிக் கொண்டது.

கண்ணன் சிரித்தான். ''சரி, அப்படியே செய்யுங்கள். ஆனால் கண்ட இடத்தில் மல ஜலம் கழிக்காதீர்கள். எங்கேயாவது மறைவாகக் கழித்து மண்ணைக் கீறி மூடி விடுங்கள், தெரிந்ததா?'' என்றான்.

''அப்படியே!'' என்றது பூனை மரத்தின் மேலிருந்து.

''தினமும் குளிக்க வேண்டும், தெரியுமா?'' என்றான் கண்ணன்.

''அப்படியே செய்வோம். ஆனால் தண்ணீரைப் பார்த்தால் பயமாக இருக்கிறதே!'' என்றது பூனை.

''இறங்கு கீழே! சொல்லுகிறேன்'' என்றான் கண்ணன். பூனை இறங்கி வந்தது.

''நாக்கை நீட்டு'' என்றான் கண்ணன். பூனை நாக்கை நீட்டிற்று. பூனைக்குக் கண்ணனிடத்தில் பயமே இல்லை.

கண்ணன் பூனையின் நாக்கைத் தொட்டு, ''இதுவே உன் கங்கை. தினமும் தவறாமல் உன் உடம்பை உன் நாக்கினால் நக்கிச் சுத்தம் செய்து கொள்'' என்றான். ''அப்படியே!'' என்றது பூனை.

''உனக்கு மார்ஜாலம் என்று பெயர் வைத்தேன். உடம்பை நன்றாகத் தேய்த்துச் சுத்தமாக வைத்துக் கொள்'' என்றான் கண்ணன்.

''அப்படியே!'' என்று சொல்லிப் பூனை தன் உடம்பை நக்கிக் காண்பித்தது. 'மார்ஜனம்' என்றால்

சம்ஸ்கிருதத்தில் தேய்த்துச் சுத்தம் செய்வதற்கும் குளிப்பதற்கும் பெயர். ஆனபடியால் பூனைக்கு 'மார் ஜாலம்' என்று பெயர்.

பூனை தன் குட்டியையும் நக்கி நக்கித் தினமும் குளிப்பாட்டும். தன்னைத்தானே நக்கிக் கொண்டு குளிப்பதற்கும் குட்டிக்குச் சொல்லித் தரும். பூனை ரொம்ப சுத்தமான பிராணி. நாயைப் போல் அல்ல. ஆனால் வீட்டில் வளர்த்த நாய் எதையும் திருடாது. பூனைக்குப் பாவம், அந்தக் கட்டுப்பாடு இல்லை, திருடும்.

வீரசிம்மன்

கிழ வயது அடைந்து விட்ட காசி தேசத்து அரசனுக்கு இரண்டு குமாரர்கள். இருவரும் மிக நல்ல வர்கள். தகப்பனார் சொன்னபடி இருவரும் காலையில் கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனம் பெற்று, கங் கைக் கரையில் தனியிடத்தில் தியானம் செய்து பிறகு திரும்பி வருவார்கள்.

ஒரு நாள் மூத்தவன் வீரசிம்மன் தியானம் செய்து கொண்டிருந்தவனுக்குப் பகவான் பரமேசுவரன் பிரத் யட்சமானான்.

"மகனே என்ன வேண்டும் உனக்கு? ஆசைப் படுவதை யெல்லாம் கேள். ஒரே தடவையாகக் கேள். கொடுத்து விடுகிறேன்" என்றான்.

"யோசித்துச் சொல்லுகிறேன்" என்றான் வீர சிம்மன்.

"யோசனை செய். வேண்டியன வெல்லாம் கேள். விட்டுப் போனதைப் பிறகு கேட்க இயலாது" என்றான் பரமசிவன்.

வீரசிம்மன் மகிழ்ச்சி யடைந்து நன்றாக ஆலோசிக்க உட்கார்ந்தான். ஒன்றன் பின் ஒன்று தோன்றி ஆசைக்கு முடிவே அவன் காணவில்லை.

வீரசிம்மன் ஏன் அரமனைக்குத் திரும்பவில்லை என்று அரமனையில் எல்லாரும் கவலைப்பட்டார்கள். வெகு நேரமாகியும் அவன் வரவில்லை.

தியானத்தில் இருக்கிறான் என்பது தெரிந்ததும், "அவனண்டை போய் அவன் தவத்தைக் கெடுக்காதீர்கள். அவனாகவே தியானம் முடித்து விட்டு வரட்டும்" என்று ராஜா உத்தரவிட்டான்.

சின்ன ராஜ குமாரன் சம்பூரணன் வழக்கப்படி பூஜையும் ஜபமும் முடித்து விட்டுத் திரும்பி வந்து விட்டான். அவனுடைய சமாசாரம் என்னவென்றால், அவனுக்கும் மகாதேவன் அதே தினத்தில் தரிசனம் தந்தான்.

"உனக்கு என்ன வேண்டும்? வேண்டியதையெல்லாம் ஒரே தடவையில் கேட்டுவிடு" என்று மகாதேவன் சொன்னதும் அவன் உடனே கேட்டுவிட்டான்.

"ஆண்டவனே! ஏதும் வேண்டாத உள்ளத்தை எனக்குத் தருவீர்!" என்று வரம் கேட்டான்.

"அப்பனே! சம்பூரணனே! தந்தேன்" என்று மகேசுவரன் சொன்னதும் ராஜகுமாரனுடைய அழகிய முகம் இன்னும் அழகு பெற்று, அதற்கு முன் என்றுமில்லாத பொலிவு அடைந்து பிரகாசித்தது. உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்து விட்டது. எழுந்து அரமனை திரும்பினான். மகாராணி அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள்.

அரசனிடம் சென்று, "வீரசிம்மன் இன்னும் ஏன் வரவில்லை?" என்றாள் ராணி.

"அவனுக்குத் தியானத்தில் மிக ஈடுபாடு. முடிந்ததும் வருவான்" என்றான் அரசன்.

வெகு நேரம் கழித்து வீரசிம்மன் ராஜமாளிகைக்குத் திரும்பி வந்தான். முகம் வாடிப் போய்க் கவலையோடு வந்தான். அன்ன ஆகாரம் பிடிக்கவில்லை.

ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் கழிந்தன. அவனுடைய ஆலோசனை முடியவில்லை. மகாதேவனை ஒன்று கேட்கலாம் என்று எண்ணுவான்; அதன் பின் இன்னொன்று வேண்டும் என்று தோன்றும்; அதன் பின் இன்னொன்று; இப்படி அவன் யோசனை தீராமல் போய்க் கொண்டே இருந்தது.

ஆகாரம், விளையாட்டு எல்லாம் விட்டு விட்டு யோசித்துக் கொண்டேயிருந்தான். நாட்கள் செல்லச் செல்ல உடல் மெலிந்து நோய்ப்பட்டுப் போனான்.

ராஜா கவலையடைந்து மந்திரிகளிடம் யோசித்து வைத்தியம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான்.

மகாராணிக்குக் கனவில் வைத்தியநாதன் பிரசன்னமாகிச்சொன்னான்:

"உன் மகனுக்கு வியாதி வேறொன்றுமில்லை. நான் கொடுத்த வரத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறான்" என்று விவரத்தைச் சொன்னான்.

"ஐயோ! ராஜகுமாரன் ஏமாந்து போனானே" என்று அரசனிடம் விஷயத்தைத் தெரிவித்தாள்.

படுக்கையில் நோய்ப் பட்டுக் கிடந்த ராஜகுமாரனைப் பார்த்து, அரசன் "வேண்டாமை யல்லவோ பெருஞ் செல்வம். அதைக் கேட்காமல் கவலைப் பட்டு நோய்ப் பட்டுக் கிடக்கிறாயே!" என்று புத்தி சொன்னான்.

வீரசிம்மனுக்கு இது விளங்க வில்லை. அந்த நோயிலேயே அவன் ஆன்மா விடுதலையடைந்து உடலைவிட்டு நீங்கிற்று.

"உனக்கு வேண்டியது உனக்குத் தெரியவில்லை. நான் சொல்லுகிறேன் வா!" என்று மகாதேவன் வீர சிம்மனை அழைத்துக் கொண்டான்.

திம்மராயனுடைய திட்டம்

அந்த வருஷத்தில் வேனிற் காலம் வந்ததும் பல ஊர்களில் பேய் நாய்கள் கடித்து அநேகம் பேர்கள் இறந்து விட்டார்கள் என்பதைக் கண்டு எச்சில் உண்டு தெருக்களில் வாழும் நாய்களை ஒழித்துவிட உத்தரவு பிறந்தது.

நாய்களை அடித்துக் கொன்று, கச்சேரியில் கொண்டு வந்து காட்டி, ஆணாயிருந்தால் இரண்டணு, பெண் நாயாயிருந்தால் மூன்று அணுவாகப் பரிசு பெறலாம் என்று உத்தரவு பிறந்தது.

ஏழைகள், பிழைப்பில்லாதவர்கள் இவர்களுக்கு இது ஒரு ஆசைகாட்டியாகும் என்று தாசில்தார்களுக் கெல்லாம் தெரியப் படுத்தித் தண்டோரா போட்டார்கள்.

சில ஊர்களில் நாய்களைக் கொன்ருர்கள். கொன்று இழுத்துப் போவதைத் தெருவில் நின்று கொண்டு குழந்தைகள் பார்ப்பார்கள். குழந்தைகளுக்கு இது பிடிக்கவில்லை. அவர்கள் கண்ணில் ஜலம் வடியும். பெரியவர்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு அந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமல் வேறு ஏதேனும் எடுத்துக் கொண்டு பேசுவார்கள்.

அநேக ஊர்களில் யாரும் நாய்களை அடித்துக் கொல்ல முன் வரவில்லை. இரண்டு அணுவுக்கு யாராவது இந்தப் பாபத்தைக் கட்டிக்கொள்வார்களா?

சேலம் ஜில்லாவில் பேய்நாய்கள் உபத்திரவம் அதிகம். அதனால் அந்த ஜில்லாவின் கலெக்டர் இரண்டணுவுக்கு யாரும் வரவில்லை என்பதைக் கண்டு பரிசை உயர்த்தினர். நாய்ப்பரிசை ஆண் பெண் வித்தியாசமின்றி ஒரு ரூபாயாக்கினர்.

ஒரு ரூபாய் என்று விளம்பரமானதும் பழைய கோட்டை சேந்தி திம்மராயன், கள்ளுக் கடைகளை ஏலத்தில் எடுத்துப் பணக்காரன் ஆனவன், தன் ஆட்கள் நாலு பேர்களைக் கூப்பிட்டான்.

"அடே முனுசாமி! நான் சொல்லுவதைக் கேள். சர்க்கார் உத்தரவு ஆனபடியால் பாபம் இல்லை. நீ உனக்கு வேண்டியவர்களுக்குச் சொல்லி ஏற்பாடு செய். நாய் ஒன்றுக்கு எட்டணு வாங்கித் தருகிறேன். கச்சேரி வேலையெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

"அப்படியே!" என்றான் முனுசாமியும்.

மற்ற மூவர்களும் தங்கள் தங்கள் சேரிகளில் சொல்லி நாய் அடிப்பதற்கு ஆள் சேர்த்தார்கள்.

சேந்தி திம்ம ராயன் தாசில்தாரைக் கண்டு நூறு ரூபாய் முன் பணம் பெற்றுக் கொண்டான். ஒரு குப்பை வண்டியும் அவனுக்குத் தரப்பட்டது. தெருவில் இழுத்துக் கொண்டு போவது நன்றாக இல்லை. எல்லாரும் ஏசுகிறார்கள். வண்டியில் போட்டு ஓட்டிக் கொண்டு கச்சேரியில் காட்டிக் கணக்குத் தீர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தான்.

தான் ஐம்பது ரூபாய் எடுத்துக் கொண்டான். மிகுதி ஐம்பது ரூபாயைத் தன் கங்காணிகளுக்குப் பிரித்துக் கொடுத்தான். கங்காணி, நாய் ஒன்றுக்கு ஐந்தணு என்று அடிக்கும் ஆட்களுக்குக் கொடுத்துவிட்டு, மூன்றணு தான் எடுத்துக் கொள்வான். வேலை மும்முரமாக நடந்தது.

ஊரிலுள்ள நாய்கள், நாயடிக்கும் ஆட்களின் அடையாளம் கண்டு கொண்டன. தெருவில் அவர்கள் யாரேனும் தலை காட்டினால் பலமாகக் குரைக்கும். ஓடிப்போய்ப் புழக்கடைகளில் ஒளிந்து கொள்ளும்.

ஆயினும் ஐந்தணுவின் சக்தி பெருஞ் சக்தி. முயற்சியும் சாமர்த்தியமும் நாயடிக்க முன் வந்தவர்கள் காட்டினார்கள். திம்மராயனுடைய ஏற்பாடு வெற்றிகரமாக நிறைவேறி வந்தது.

பஞ்சாங்கம் கிட்டய்யர் வீட்டில் புழக்கடையில் ஒரு தெரு நாய் குட்டி போட்டது. குட்டிகளைப் போட்டு அங்கே வைத்து எப்படியோ காப்பாற்றி வந்தது. இங்குமங்கும் கிடைக்கும் எச்சில் இலைகளை நக்கிப் பிழைத்து, குட்டிகளுக்கும் பால் கொடுத்து வந்தது. கிட்டய்யருடைய குழந்தைகளுக்கு நாய்க் குட்டிகளைக் கண்டு வெகு சந்தோஷம். தாய் நாய் வந்து பால் கொடுப்பதைப் பார்த்துக் கொண்டு ஆனந்தம் அடைவார்கள். ஒரு நாள் அந்த நாய் புழக்கடைக்குள் புகுந்து குட்டிகளுக்குப் பால் கொடுத்துவிட்டு அவசரமாக வெளியே தன் தொங்கும் மடியை ஆட்டிக் கொண்டு ஓடிற்று. வாசலண்டை வந்ததும் தலைமேல் ஓங்கி அடித்து விட்டான், தடியை வைத்துக் கொண்டு பதுங்கியிருந்த தாசரி. நாயடிக்கும் ஆட்களில் இவன் ஒருவன்.

ஒரு சத்தமின்றி நாய் அப்படியே தரையில் உயிரற்று விழுந்தது. ஐந்தணு வந்து விட்டது தாசரிக்கு. அவன் எஜமானன் கங்காணி மூன்று அணுவும் சேந்தி திம்மராயன் அரை ரூபாயும் அந்த நாயின் மேல் சம்பாதித்து விட்டார்கள். ஒரே அடியில் சம்பாதித்து விட்டார்கள்!

“பாவி!” என்ருள் வாசலில் நின்ற கிட்டய்யருடைய மனைவி. பக்கத்தில் அவள் குழந்தை அம்மாவின் புடவை நுனியைப் பிடித்துக் கொண்டு நின்ருள். எதிர் வீட்டுக் கூரையின் மேல் ஒரு காக்கை உட்கார்ந்து “காவ்! காவ்!” என்று கத்திற்று. அதன் பொருளும் அதுவே, “ஐயோ பாவம், பாவம்!” என்று.

ராக்ஷசர்களைப் பற்றிப் படிக்கிரேம். பறவைகளும் பிராணிகளும் நம்மை எல்லாம் ராக்ஷசர்களாகத் தான் இப்போதும் எண்ணி வருகின்றனவோ, என்னவோ!

முத்தின் கதை

நாம் குடி யிருக்க வீடு கட்டிக் கொள்ளுகிரேம். இதற்கு இடம் வேண்டும், அதற்கு ஒரு அறை வேண்டும் என்றெல்லாம் கணக்குப்போட்டு வீடுகளைக் கட்டுகிரேம். சில சமயம் நம்முடைய வாழ்க்கையின் அதிர்ஷ்டம் நாம் கட்டிய வீட்டின் உத்தேசத்துக்கு மாருகப் போகிறது. வீட்டை விற்றுவிட வேண்டியதாகிறது.

கடலில் தோன்றி வளரும் சில பிராணி வகைகள் தங்கள் வீடுகளைத் தங்கள் உடலோடேயே கட்டிக் கொண்டு வளர்கின்றன. உடல் வளரும்போது

வீடும் வளர்கிறது. உடலும் வீடும் ஒன்றாகவே வளர்கின்றன. நரம்பும் உணர்ச்சியும் உடலில் பாய்வதைப் போலவே வீட்டிலும் பாய்கிறது. உணவு வேண்டும் போது கதவு திறந்து கொள்கிறது. பயம் மேலிட்ட போது தானாகவே மூடிக் கொள்கிறது. இந்த நத்தைகளே நமக்கு முத்து தருகின்றன

முத்து எவ்வளவு அழகாக இருக்கிறது! அதிலும் மாலையாகக் கோக்கப்பட்டோ அல்லது வேறு ஆபரணங்களில் பதித்தோ பெண்டிர் அணிந்து கொண்டால் எவ்வளவு அழகு! எவ்வளவு ஒளி! ஆனால் இந்த முத்து சோகத்திலும் கஷ்டத்திலும் தோன்றுகிறது.

பறவை கொல்லப்பட்ட கொடுமையைப் பார்த்து வால்மீகி அடைந்த சோகம் அழகிய ராமாயணம் ஆயிற்று. அதைப் போல் நத்தையின் துயரமும் கஷ்டமும் அழகிய முத்து ஆகிறது.

நத்தையின் வீட்டுக்குள் ஒரு சிறு மணலோ வேறு ஏதேனுமோ புகுந்து விட்டுத் தொந்தரவு உண்டானால், நத்தை அந்தப் பகையை எதிர்த்து அதைச் சுற்றி அரண் கட்டிவிட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறது. நத்தை கட்டும் அந்த அரணை நாம் புகழ்ந்து அனுபவிக்கும் முத்தாகிறது. நாமெல்லாரும் கட்டும் வீடுகள் செங்கல்லும், ஸிமென்ட்டும். நத்தையின் உயிர் வேகத்திலிருந்து உண்டாகும் ஸிமென்ட்டே நாம் அணிந்தும் பார்த்தும் மகிழும் முத்து. அந்தப் பிராணியின் சோகமே விலையுயர்ந்த முத்தாகிறது.

துரௌபதியின் துக்கமும் ஜானகியின் துயரமும் சோதனைகளும் மகாபாரதம் ராமாயணம் என்கிற மதிப்

பிடா முத்துக்களாயின. வியாசரும் வில்லிபுத்தூராரும் வால்மீகியும் கம்பநாட்டாழ்வானும் கடலில் மூழ்கி அந்த நல்ல முத்துக்களை நமக்கு எடுத்துத் தந்திருக் கிறார்கள். நத்தை தன் சிப்பிக்குள் அடங்கி ஒடுங்கி வாழும்போது அதற்கு உண்டான துயரமும் சோதனை யுமே நாம் ஆபரணங்களாக்கிக் கொள்ளும் முத்துக்கள்.

குழந்தைகளே! அம்மாவுக்குச் சோகம் கிட்டினால் கண்ணிலிருந்து முத்துக்கள் உதிர்கின்றன. கவனித் தீர்களானால் முத்தின் அழகைக் கண்ணீரிலும் காண லாம். ஆனால் அந்தக் கண்ணீர் முத்துக்களைத் துடைத்து விடுகிறோம். நத்தையின் சோகத்தைத் துடைப்பார் இல்லை. அது நல்ல கெட்டி முத்தாகி விடுகிறது.

நத்தைக்கு உண்டான கஷ்டம் முத்துக்கள் ஆவ தைக் கண்டு, ஆசை பிடித்த மனிதர்கள் ஒரு வேலை செய்ய ஆரம்பித்தார்கள். உயிருடன் நத்தைகளைக் குரூரமாகத் திறந்து மெதுவாகச் சிறு சிறு மணலைப் புகுத்தி வியாபாரத்துக்கு முத்தாக்கி வருகிறார்கள். தானாகவோ நாம் செலுத்தியோ ஏற்பட்ட நத்தையின் கஷ்டமே முத்தாக விளைகிறது.

துயரத்திலும் கஷ்டத்திலும் நமக்கு முத்தைச் செய்து தரும் நத்தை எவ்வளவு உயர்ந்த பிராணியாய் இருக்க வேண்டும்! முத்தைப் பார்த்து அநுபவிக்கும் போது நத்தையை நினைவில் தந்து கொள்ளுங்கள்.

வாழைப்பாடிக் கதை

குணராஜ சோழன் காலத்தில் வாழைப்பாடி அக்கிரகாரத்தில் சில வைஷ்ணவர்கள் ஒரு புது சம்பிர தாயம் ஆரம்பித்தார்கள்.

“நாம் கடவுளுக்குத்தான் தலை வணங்கவேண்டும். நம்மைப் போன்ற மானிடர் யாருக்கும் நமஸ்காரம் பண்ணுதல் ஆகாது” என்று ஒரு தீவிர பக்திமார்க்கம் அவர்கள் பூண்டார்கள். பிரசாரமும் செய்தார்கள்.

அந்தச் சம்பிரதாயத்துக்கு ‘வணங்காக் கலை’ என்று ஒரு பெயரும் வைத்துக் கொண்டு தங்கள் கொள்கைப்படி நடந்தும் வந்தார்கள். வணங்காக் கலையார் யாருக்கும் நமஸ்காரம் செய்ய மாட்டார்கள். எந்தப் பெரியவர், எந்த வித்துவான் அல்லது ராஜ்ய அதிகாரியைக் கண்டாலும் நமஸ்காரம் செய்ய மாட்டார்கள். பிடிவாதமாக இப்படியே நடத்தி வந்தார்கள்.

வணங்காக் கலையார் இப்படிச் செய்வதைப் பார்த்து மற்றவர்கள் அதற்கு நேர்மாருக யாரைக் கண்டாலும் நமஸ்காரம் செய்வது கடமை என்று முன்னைவிட அதிகத் தீவிரமாக ஒருவருக்கொருவர் நமஸ்காரம் பண்ணி வந்தார்கள். இந்தக் கட்சியே பெரிய கட்சியாக இருந்தது.

வணங்காக் கலையார் இதைக் கண்டு அசைய வில்லை. தங்கள் விரதத்தைத் தைரியமாக நடத்தி வந்தார்கள். இரு கட்சிக்கும் விரோதம் முற்றிப் போயிற்று. ஒருவர் வீட்டுக்கு ஒருவர் சாப்பிடப் போக மாட்டார்கள். கொள்வனை கொடுப்பனையும் நிறுத்தி விட்டார்கள். அதற்கு முன்னமே சம்பந்தப்பட்டவர் கள் புருஷன் வணங்காக் கலையாயிருந்தால் மனைவியும் வணங்காக் கலை என்பதாகப் பிரிந்து விட்டார்கள்.

வரவர வணங்காக் கலையார்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. நமஸ்காரிகள் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. இதனால் துவேஷம் இன்னும் அதிக மாயிற்று. “இந்த அநமஸ்காரிகள் நம்முடைய கிணற்

றில் தண்ணீர் எடுக்கக் கூடாது'' என்று நமஸ்காரிகள் தீர்மானம் செய்தார்கள்.

நமஸ்காரிகள் குடியிருந்த பக்கத்தில் தான் நல்ல தண்ணீர்க் கிணறு இருந்தது. ஆனபடியால் ராஜா விடம் வணங்காக் கலையார் தகராறைக் கொண்டு போனார்கள்.

ராஜா விசாரித்தான். வணங்காக் கலையார் வழக்கில் தோற்றார்கள். "நீங்கள் தனியாக ஒரு புதுக் கிணறு வெட்டிக் கொள்ளுங்கள்'' என்று அரசன் தீர்ப்புச் சொல்லி விட்டான்.

அதன்மேல் நமஸ்காரிகளுக்குத் தைரியம் அதி கரித்தது. யாராவது ஒரு வணங்காக் கலையாரைக் கண்டால் அவர் எவ்வளவு பெரியவரா யிருந்தாலும் நமஸ்காரம் செய்வதை விட்டு விட்டார்கள். "இந்த மூர்க்கர்களுக்கு நாம் ஏன் நமஸ்காரம் செய்ய வேண்டும்?'' என்று நமஸ்காரி கட்சித் தலைவர்கள் தீர்மானித்தார்கள்.

"இனிமேல் வணங்காக் கலையைச் சேர்ந்த ஒருவர் எவ்வளவு பெரிய கிழவரானாலும் சரி, அவரைச் சந்தித்தால் யாரும் அவரை வணங்க வேண்டியதில்லை'' என்று கண்டிப்பாகத் தம் கட்சியில் கட்டுப்பாடு செய்து விட்டார்கள். எந்தக் குற்றத்துக்காக ஒருவரைத் தீவிர மாக எதிர்க்கிறோமோ, அந்தக் குற்றம் அந்த எதிர்ப் பினாலேயே நம்மைப் பற்றிக் கொள்ளுகிறது!

வணங்காக் கலையாருக்குக் கோபம். ஆனால் இதை ஆட்சேபிக்க அவர்களுக்கு இடமில்லாமல் போயிற்று. யாருக்குமே நமஸ்காரம் செய்யாதவர்கள் இதை எப்படி ஆட்சேபிக்க முடியும்? ஆனபடியால் நமஸ்காரிகளின் தீர்மானம் நன்றாக நிறைவேற்றப்பட்டு வந்தது.

கொஞ்ச காலம் கழித்துச் சில நமஸ்காரிகள் தங்கள் கட்சியினரில் சிலரைச் சந்தேகித்து வர நேரிட்டது. "இவன் வணங்காக் கலையான் வீட்டில் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டான்", அல்லது "தாகத் துக்குத் தண்ணீர் கேட்டு வாங்கித் தீர்த்துக் கொண் டான்" என்று ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி அவர் களையும் வணங்காக் கலையார்களாகவே பாவித்து வந்தார்கள். அவர்களுக்கும் நமஸ்காரம் செய்வதை நிறுத்தி வந்தார்கள். சிலர், "இல்லை, நான் அப்படிச் செய்யவில்லை. மன்னிக்க வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். சிலர் எங்கள் பேரில் சாட்டும் குற்றம் தவறு என்று பிடிவாதமாக இருப்பார்கள்.

இவ்வாறு ஊரில் இரு கட்சியிலுமே ஒருவருக் கொருவர் நமஸ்காரம் செய்வது முற்றிலும் நின்று போயிற்று. பார்ப்பதற்கு அநமஸ்காரிக் கட்சியே பல மாய்ப் போனதாகக் காணப்பட்டது!

"இதைத்தான் நாம் கோரினது" என்று வணங் காக் கலையார் வெற்றிக் கொண்டாட்டம் நடத் தினார்கள்.

துவேஷம் பலமாகப் போயிற்று. அநமஸ்காரக் கட்சிக்கு மிகத் திமிர் பிடித்துப் போயிற்று என்று பழைய கட்சி தம் பகிஷ்கார நியமங்களையும் கட்டுப் பாடுகளையும் முன்னைவிட மிகக் கடுமையாகச் செய்து நிறைவேற்ற ஆரம்பித்தது. வயது வந்த மகனைத் தகப்பன் சந்தேகிப்பான். தம்பி அண்ணன் பேரில் சாட்சி சொல்வான். ஊர் துவேஷமயமாகப் போயிற்று. அதுவரையில் கதவு மூடாத வீடுகளாயிருந்த வாழைப் பாடி அக்கிரகாரம் பொலிவு இழந்து, கறுப்பு மூடிக் கொண்டது. புழக்கடையிலுள்ள தென்னை மரங்களில்

காய் திருட்டுப் போக ஆரம்பித்தது. பந்தலில் காய்த்த அவரை, புடலங்காய், பாகற்காய் மாலையில் இருந்தவை, காலையில் திடீர் என்று மாயமாகப் போகும். "அணில் தின்று விட்டது" என்பாள் மனைவி. "இல்லை பக்கத்து வீட்டு வணங்காக் கலையான் வேலை" என்பார் எஜமானர்.

"தேங்காய் திருடும் இந்தப் பயல்களுக்கு முகத்தில் திருமண் வேறு?" என்பார் வணங்காக் கலை ஐயங்கார்.

"அப்படிச் சொல்லாதீர். வீட்டில் புகுந்து கலகம் செய்து கொள்ளையடிப்பார்கள். கேட்பார் யாரும் இல்லை" என்பாள் அவர் மனைவி.

பழைய கட்சிக்காரர்கள் தம்முடைய கோபாவேசத்தை அடக்கப் பார்த்தார்கள். முடியவில்லை.

ஒருநாள் இரவு வணங்காக் கலை ராமானுஜய்யங்கார் வீடு நெருப்புப் பற்றிக் கொண்டது.

அந்த வீட்டைச் சுற்றிலும் நமஸ்காரிகள் வீடு. யாரும் உதவிசெய்யவில்லை. நெருப்பு தகதகவென்று பெருகிற்று. கொஞ்ச நேரத்தில் பக்கத்து வீடும் பற்றிக் கொண்டது.

"ஆகவேண்டும். அப்படித்தான் ஆகவேண்டும்" என்றாள் வணங்காக் கலை வீட்டுச் சீமாட்டி, தெருவில் நின்று கொண்டு.

பத்து வீடுகள் வெந்து சாம்பலாயின. பிறகு எப்படியோ நெருப்பு ஒருவாறு தணிந்து விட்டது.

அடுத்த ஆண்டு ஒரு நல்ல மழை பெய்து வயல்கள் எல்லாம் நன்றாக விளைந்தன. குடியானவர்கள் பேசிக்கொண்டார்கள்.

"இந்த ஐயன்மார்கள் ஏன் இப்படிச் சண்டையிட்டுக் கொள்ளுகிறார்கள்?" என்றான் ஒருவன்.

"அவர்கள் ஏதோ சாஸ்திரங்களைப் பற்றிப் பேதங் கொண்டிருப்பார்கள். நமக்கு என்ன அதைப்பற்றி!" என்றான் இன்னொருவன்.

கிளியின் சந்தேகம்

"எங்கும் பரந்து நிற்கிறான் ஆண்டவன். அவனை ஒரு பிரதிமைக்குள்ளும், ஒரு லிங்கத்துக் குள்ளும் அடக்கி மூடர்கள் சைவர்கள் என்றும் வைஷ் ணவர்கள் என்றும் சொல்லிக் கொண்டு விக்கிரக ஆராதனை செய்கிறார்களே!" என்றது ஒரு காக்கை.

கோயில் பிராகாரச் சுவர்மேல் உட்கார்ந்து காக்கை இவ்வாறு பேசியதைக் கேட்டு அங்கிருந்த கிளி, "எங்குமிருந்தால் அந்த மூர்த்தியிலும் உண்டல்லவா?" என்றது.

"யாரோ சொன்னதைக் கேட்டு நீ கிளிப் பேச்சுப் பேசுகிறாய்!" என்றது காக்கை.

கிளிக்கு அவமானம் மேலிட்டுப் பறந்து போயிற்று. போய் ஒரு அணில் பக்கத்தில் உட்கார்ந் தது. அணிலிடத்தில் தன் சந்தேகத்தைச் சொல் லிற்று.

"அந்தக் காக்கை ஒரு விதண்டாவாதி. அதன் உளறலை நீ பொருட்படுத்த வேண்டாம். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம்" என்றது அணில்.

"அது என்ன?" என்று கேட்டது கிளி

"ஒரு தெய்வமா? பல தெய்வமா?" என்று கேட் டது அணில்.

"ஒன்றே!" என்றது கிளி.

"சிக்கிக் கொண்டாய்!" என்றது அணில்.

"ஏன்? எப்படி?" என்று பயந்து போய்க் கிளி கேட்டது.

"அதோ! அங்கே பூனை வருகிறதே, அதைக் கேள்!" என்றது அணில்.

"பூனைக்குப் பக்கத்தில் போக பயமாக இருக்கிறதே!" என்றது கிளி.

"பயந்தவனுக்கு எப்படி அறிவு கிட்டும்? மெள்ளத் தைரியமாகப் போய்க் கேள்!" என்றது அணில்.

"மாமா! நான் பூனையண்டை போக முடியாது. போனால் என் சந்தேகமும் என் உயிரும் ஒரே அடியாகத் தீர்ந்து போகும். நீயே சொல். நீதான் அந்த ராமனுக்குச் சேது கட்டித் தந்தாயே!" என்றது கிளி. அணிலுக்குச் சந்தோஷம். "சரி, சொல்லுகிறேன், கேள்!" என்று பிரவசனம் செய்ய ஆரம்பித்தது.

"மூர்த்தி பூஜை செய்தால் உலகத்தில் எத்தனை கோயில்கள் உண்டோ அத்தனை கடவுள்கள் உண்டாய் விடுமல்லவா? ஒன்றுயிருக்கும் கடவுள் பலவாகிப் போகுமல்லவா? உனக்கு இந்தச் சின்னக் கணக்குக் கூடத் தெரியவில்லையே!" என்றது அணில்.

"நான் ஒரு கிளி. நான் எந்தப் பள்ளிக்கூடம் போனேன்? எனக்குக் கணிதம் எப்படி வரும்?" என்று கிளி அடக்கமாகச் சொல்லி விட்டுப் பறந்து போயிற்று.

புல் தரையில் ஒரு வண்ணத்துப் பூச்சி யிருந்தது. அதனண்டையில் போய் உட்கார்ந்தது. "பூச்சியே! சிறு பூச்சியே! உனக்கு எல்லாம் தெரியுமே!" என்றது கிளி.

"ஆமாம்! எனக்கு எல்லாம் தெரியும். உனக்கு என்ன சந்தேகம்?" என்றது பூச்சி.

"ஒரு கடவுள் எப்படிப் பல கோயில்களில் பல வடிவங்களில் இருக்க முடியும்? ஒரே ஒரு பழம் பல பழங்கள் ஆகுமா?" என்றது கிளி.

"கிளிக்குப் பழங்களைப் பற்றித்தான் தெரியும்!" என்று சொல்லிப் பூச்சி சிரித்தது.

"சிரிக்க வேண்டாம். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என் சந்தேகம் மண்டையைப் பிளக்கிறது. கொஞ்சம் சொல்லுவாய்! உனக்குத்தான் எல்லாம் தெரியுமே!" என்றது கிளி.

"கிளியே! அதோ பார் மேலே! என்ன தெரிகிறது?" என்று கேட்டது பூச்சி.

"மேலே பெருஞ் சோதியாகச் சூரியன் இருக்கிறான்!" என்றது கிளி.

"கீழே பார், அந்த மரத்தடியில் என்ன காண்கிறது?" என்று கேட்டது.

பள்ளிக்கூட வாத்தியார் மாதிரியே அந்தப் பூச்சி பேசிற்று! கிளியும் மாணவனைப் போலவே அடக்கமாகப் பயந்து கேள்விகளுக்குப் பதில் சொல்லிற்று.

"இலைகளின் நிழல்களும் இடையில் வெயிலின் பொட்டுக்களும் இருக்கின்றன."

"அந்த வெயில்ப் பொட்டுக்கள் எங்கிருந்து வந்து தரையில் உண்டாகின்றன?" என்று கேட்டது பூச்சி.

"சூரியனிடமிருந்து" என்றது கிளி.

"பார், இப்போது எண்ணுகிறேன்" என்று பூச்சி பறந்து பறந்து அந்த வெயில் பொட்டுக்களின் மேல் உட்கார்ந்து "ஒன்று, இரண்டு, மூன்று" என்று நூற்றெட்டு வரையில் எண்ணிச் சொல்லிற்று.

"கண்டேன், அறிந்து கொண்டேன். ஒரு சூரியன் கீழே நிழலில் நூற்றெட்டு ஆனன்" என்றது கிளி.

"நூற்றெட்டும் ஆவான், ஆயிரத்தெட்டுமாவான். மரத்தில் இலைகளுக்குள் எவ்வளவு இடை வெளிகள் இருக்கின்றனவோ அத்தனையும் ஆவான். ஒவ்வொருவனுக்கு ஒரு தெய்வம், ஒவ்வொரு கோயிலிலும் ஒரு தெய்வம். இப்படித் தியானிப்பவர்களுக்குக் கோடி தெய்வங்களும் ஆவான்" என்று பூச்சி முடித்து விட்டுப் பறந்து போய் விட்டது. கிளி ஆச்சரியம் அடைந்தது. யாருக்கும் ஒரு தீங்கும் செய்யாமல் வண்ணத்துப் பூச்சி ஒவ்வொரு பூவிலும் தேனை மெள்ள உறிஞ்சிக் குடித்துக் கொண்டே போகும் பிராணியல்லவா? அதற்கு இந்த அறிவு உண்டாயிற்று.

"நான்தானே தேனுகப் பூவுக்குள் இருந்து வருகிறேன். என்னைக் குடித்த பூச்சிக்கு ஞானம் இருப்பதில் என்ன ஆச்சரியம்?" என்று கண்ணன் கிளிக்குப் பக்கத்தில் வந்து காதில் சொன்னுன்.

"இருப்பது நான் ஒருவன். தியானித்துக் காண்பவர்களுக்குப் பலவாகிறேன்" என்று கண்ணன் கிளிக்குச் சொன்னுன். கிளியின் சந்தேகம் தீர்ந்தது.

சகவாச தோஷம்

"அன்று பாற் கடலில் கடைந்து எடுத்த அமிருதத்துக்குச் சமானம் நான்" என்று, அடுப்பின்மேல் சட்டியில் காய்ந்து கொண்டிருந்த பால் சொல்லிற்று.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பார்வதி பரமேசுவரன் பேசிக் கொண்டார்கள்.

"கண்ணே! இந்தப் பாலுக்கு எவ்வளவு கர்வம் பார்த்தாயா?" என்றான் மகாதேவன்.

"பாலைப் பற்றிக் குற்றம் சொன்னால் நம்முடைய நந்தி கோபித்துக் கொள்வான். மெள்ளச் சொல்லுவீர்" என்றாள் தேவி.

பால் சூடேறிப் பொங்கிற்று. மிகச் சந்தோஷமாகப் பொங்கிற்று. நப்பின்னை சட்டியை எடுத்து ஒரு பக்கமாக வைத்தாள்.

* * *

"என்ன சொல்லுகிறாய்? நீயும் நானும் சேர்ந்து இந்தப் பாலை எமாற்றி விளையாடலாமா?" என்று கண்ணன் கேட்டான்.

"ஓ! அப்படியே!" என்றது மோர்.

"நீ பானை மோராக வரவேண்டாம். ஒரு துளி போதும்" என்றான் கண்ணன்.

* * *

ஒரே ஒரு துளி மோர் நல்ல புடவை உடுத்திக் கொண்டு சிறு இடையர் குலப் பெண்ணாகப் புறப்பட்டது.

முன்னாள் வாமனன் மகாபலியினிடம் சென்று மோசம் செய்ததுபோல் பாலினுடைய கர்வத்தை மோசம் செய்து அடக்குவதற்காக மோர்த்துளி சென்றது.

"பாலே, சகோதரியே! நீயும் நானும் ஒரு ஜாதியல்லவா? நாம் கூடி வாழ்வோம்!" என்றது மோர்.

மோர் வெளுப்பாக, லட்சணமாக இருந்ததைப் பால் பார்த்தது! "சரி!" என்று ஒப்புக் கொண்டு மோர்த்துளியை வரவேற்று ஆலிங்கனம் செய்து கொண்டது.

"ரொம்ப வெப்பமாக இருக்கிறாய்!" என்றது மோர்த்துளி பாலினிடம்.

"அதற்கென்ன! கொஞ்ச நேரம் பொறுத்திரு. நான் தணிந்து போவேன்! இப்போதுதான் அடுப்பி லிருந்து இறங்கினேன்" என்று பால் சீக்கிரமாகவே தன் சூட்டைக் குறைத்துக் கொண்டது.

* * *

பாவம், மறுநாள் மோரைத் தீண்டின பாலின் கதியை என்னவென்று சொல்லுவது? ஒரே தயிர்க் கட்டியாய் விட்டது! வாய் திறந்து பேசக்கூட முடியவில்லை.

"ஐயோ, பாவம்!" என்றாள் பரமேசுவரி.

"பாலின் கர்வம் அடங்கியது. இப்படித்தான் கெட்ட சகவாசத்தின் விளைவுகள். ஒரு துளி மோர் போதும், சட்டி பாலையும் கெடுத்துவிட" என்றான் மகாதேவன்.

"பாலை ஏன் மோர் கெடுக்க வேண்டும்? பால்தான் மோரை நல்ல வழியில் கொண்டு போய்விடக் கூடாதோ? சட்டி நிறைய இருந்த மூடப்பால், ஒருதுளி மோரை ஜெயிக்கவிட்டு விட்டதே!" என்றாள் தேவி.

"அது அந்தக் கண்ணனுடைய வேலை. அவ னுடைய வேடிக்கைக்கு ஒரு வரம்பே இல்லை!" என் றான் பரமேசுவரன்.

"கண்ணன் வேறு, நீர் வேறா?" என்றாள் பார் வதி, தன்னுடைய அண்ணன் கண்ணனுக்குப் பரிந்து.

"நானும் கண்ணனும் ஒன்றா வேறா என்ற அந்த ரகசியத்தைப் பற்றி நந்தியைப் பிறகு கேள், சொல்லு வான்" என்று வேறு பேச்சுக்கு மெள்ள இழுத்துக் கொண்டு போனான் பரமேசுவரன்.

"இந்தப் பாலுக்கு ஏதேனும் விமோசனம் உண்டா?" என்றாள் பார்வதி.

"ஒன்றும் கெட்டுப் போகவில்லை. பாலைப்போலே தயிரும் அமிருதமே! கர்வம்தான் அடங்கிற்று" என்றான் மகாதேவன்.

* * *

"**வி**ளையாட்டுக்குக் கூடக் கெட்டவர்களுடன் சேரக்கூடாது!" என்றான் கண்ணன் காமதேனுவினிடம்.

"எல்லாம் பார்த்தேன். பாலை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்" என்றாள் காமதேனு.

எருமைப் பால்

ஒரு கிராமத்தில் ஒரு பூனை இருந்தது. அது ஒரு நாள் பாலைத் திருடிவிட்டது. பால் எருமைப்பால். நன்றாக வயிறு நிறையக் குடித்துவிட்டு ஒரு மூலையில் ஒடுங்கித் தூங்கிற்று.

பாலின் குணத்தால் பாவம், பூனையின் புத்தி மந்தமாய்ப் போய்விட்டது.

"என்னைப் பார்த்து ஏன் யாரும் பயப்படுவதில்லை? மாமா—புலியைக் கண்டால் எல்லாரும் பயப்படுகிறார்களே! நானும் புலியைப் போலத்தானே இருக்கிறேன்?" என்று குள்ள நரியைக் கேட்டது.

நரி தெரிந்து கொண்டது, 'இந்தப் பூனை எருமைப் பாலை அதிகமாகக் குடித்துவிட்டது. அதனால் தான் இப்படிப் பைத்தியம் பிடித்துவிட்டது' என்று. அது ஒரு குறும்பு செய்தது. "பூனையே! உனக்கு இது தெரியவில்லையா? புலிக்கு நல்ல நீண்டபட்டைகள், மஞ்சளும் கறுப்புமாக இருக்கின்றன. அதைப்

பார்த்துப் பயப்படுகிறார்கள். உன்தோல் ஒரேமாதிரி சாம்பல் நிறமாக இருக்கிறது. அதைக் கண்டு 'இது பூனை, சாதுப் பிராணி' என்று யாருமே பயப்படுவதில்லை."

இப்படி நரி சொல்ல, "இதற்கு என்ன செய்வது?" என்று கேட்டது பூனை.

"அதற்கென்ன? நீதான் அடுப்பண்டையே தினமும் இருக்கிறாய். பட்டை பட்டையாக வடுக்கள் உண்டாகும்படிச் சூடு போட்டுக்கொள்" என்றது குள்ள நரி. குள்ள நரியின் யோசனையைப் பூனை நம்பிற்று. சூடு போட்டுக் கொண்டது.

பாவம், பூனை ரொம்பக் கஷ்டப்பட்டது. புண் வாசியாவதற்கு ஒரு வாரம் ஆயிற்று. ஆனால் உடம்பில் புலியைப் போல் பட்டை பட்டையாக வடுக்கள் உண்டாகி யிருப்பதைக் கண்டு பூனை மிகவும் சந்தோஷப்பட்டது.

'இனிமேல் நானும் புலியானேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு புறப்பட்டது.

தெருவில் ஒரு மாடு இருந்தது. அதன் எதிரில் இந்தப் பூனை நின்று வெறித்துப் பார்த்தது. மாடு பயப்படவேயில்லை. அது ஏன் பயப்படும்? பூனையை அது லட்சியமே செய்யவில்லை. அதன் பாட்டுக்குப் புல் மேய்ந்து கொண்டிருந்தது.

அங்கிருந்த ஒரு நாய் பூனையைப் பார்த்துக் குரைத்தது. பூனை நாயைப் பார்த்துக்கொண்டு தைரியமாக, தன்னுடைய தோலில் சுட்ட வடுக்களை நன்றாகக் காட்டிக்கொண்டு நின்றது.

நாய் அதைக் கவனியாமல் பூனையைத் துரத்திக் கொண்டு வந்தது, பாவம்! பூனைக்குப் பயமாய் விட்

டது. ஒரு வீட்டின் மேல் குதித்து ஏறிக் கொண்டு, 'நான் ஏமாந்துபோனேன். சூடு போட்டுக்கொண்டது தான் லாபம். ஒரு வித்தியாசமும் இல்லை. தெய்வா தீனம், வீட்டுமேல் குதித்து ஓடித் தப்புவதை மறந்து விடவில்லை. நாயினின்று தப்பினேன்' என்று தனக் குள் சொல்லிக் கொண்டது.

"என்ன சமாசாரம்?" என்று கேட்டது நரி. பூனை வெட்கப்பட்டுப் பேசவில்லை

"இனிமேல் எருமைப் பால் குடிக்காதே!" என்று குள்ள நரி பூனைக்குச் சொல்லிவிட்டு ஓடிப்போயிற்று.

கொசுவின் கதை

"இந்த மலேரியாக் கொசு வந்தாலும் வந்தது. எல்லாரும் வலை கட்டிக் கொண்டு தூங்குகிறார்கள். எங்களுக்குப் பிழைக்கும் வழி போச்சு" என்றது ஒரு கொசு.

"நாம் மலேரியாக் கொசுவல்ல, எங்களுக்குக் கொஞ்சம் வழி விடுவாய் என்று கொசு வலையைக் கேட் டுக் கொண்டால் ஒரு வேளை திறந்து கொள்ளும்" என் றது கொசுவின் மனைவி.

அப்படியே பாடின இந்த இரண்டு கொசுக்களும்.

காற்றடித்தது. கொசு வலையை இழுத்துச் செருக வில்லை முதலியார். இரண்டு கொசுக்களும் உள்ளே பிரவேசித்தன.

'பட்' என்று அடித்தார் முதலியார் தம் தோளின் பேரில். இரண்டு கொசுக்களில் ஒன்று செத்தது. ஒன்று தப்பித்துப் பறந்து போயிற்று. 'நான் தனித் துப் போனேனே!' என்று அழுதது பெண் கொசு.

அன்று அதற்கு ஒன்றும் வேண்டி யிருக்கவில்லை. உபவாசம் இருந்தது. அறைக்குள் ஒரு மூலையில் சும்மா சுவரின் மூலையில் மறைந்திருந்து காலம் கழித்தது. ராத்திரி பெரும் பசி எடுத்தது. புருஷனை மறந்து விட்டது. இரை தேடிக் கொண்டு கொசு வலையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு பறந்தது. வழியில்லை. வலையை முதலியார் அன்று நன்ருக இழுத்துச் செருகி யிருந்தார். பாவம், கொசு அந்த இராத்திரி உண வின்றியே கழித்தது.

முதலியார் நன்ருகத் தூங்கிஞர்.

"முருகன் அருள், இன்று நன்ருகத் தூங்கி னேன்" என்று காலையில் எழுந்து முகம் கழுவி விபூதி யிட்டுக் கொண்டார்.

"முருகன் எனக்கு அருளவில்லையே!" என்று சொல்லிக் கொண்டிருந்தது கொசு.

"உனக்கு ஒரு வழி காட்டுகிறேன்" என்ருன் முருகப் பெருமான்.

"என்ன?" என்றது கொசு. கொசுக்களும் முரு கனும் பேசுவார்கள். நம்மோடு தான் தேவர்கள் பேசுவதில்லை. பறவை, பிராணிகள், பூச்சிகளுடன் பேசுவார்கள்

"அதோ பார்! கொசு வலை எடுத்து மடித்து வைக்க வில்லை. மெள்ள இப்போது உள்ளேயே புகுந்து கொள். ராத்திரி உன் வேலையை நடத்து" என்ருன் முருகன்.

அவனுக்கு முதலியாரைத் தொந்தரவு செய்வதில் விளையாட்டு.

கொசுவும் அப்படியே செய்தது. இரவு வரும் வரை பொறுமையாகக் காத்திருந்தது. முதலியாரு

டைய வேலைக்காரன் படுக்கை போட்டுக் கட்டியிருந்த கொசு வலையை அப்படியே இறக்கிச் செருகி விட்டான்.

கொசுவுக்கு அன்று ராத்திரி நல்ல சமாராதனை. கைக்கு அகப்படாமல் வேண்டிய அளவு அதன் சிறு வயிறு நிறைய முதலியாருடைய ரத்தம் குடித்துவிட்டு மேலே வலையில் ஒரு மூலையில் போய்த் தொங்கிக் கிடந்தது.

“என்ன முட்டாள்! வலையை ராத்திரி சரியாகச் செருகவில்லை, கொசு உபத்திரவம் தூக்கமே இல்லை!” என்றார் முதலியார்.

“இல்லை, எஜமான்! நன்றாகச் செருகி யிருந்தேன். கொசு உள்ளே போக இடமே யிராது. உஷ்ணத்தினால் சொறியாக இருக்கலாம். கொசுக்கடி கிடையாது” என்றான் சேவகன்.

“ஜுரம் வந்தால் நீதான் ஜவாப்தாரி!” என்றார் தாசில்தார் முதலியார்.

அடுத்த நாளும் அதே கதை. முதலியாருக்குக் கோபம் வந்து விட்டது. அந்த ராத்திரி தானே வலையை ஜாக்கிரதையாக இழுத்துச் செருகிக் கொண்டு படுத்தார்.

“வேனிற் காலத்துக் கோளாறாகவே இருக்க வேண்டும். நேற்று ராத்திரியும் தூக்கமே இல்லை” என்றார் முதலியார்.

“வலைக்குள்ளேயே சேர்ந்து கொண்டிருக்கும் கொசு” என்றாள் சுமித்திரை. முதலியாருடைய கடைசி மகள், கலியாணமாகாத சிறுமி.

வலையைப் பிரித்துப் பார்த்தார்கள். சிறுமி சொன்னது உண்மை. கொசுவின் காலம் முடிந்தது.

முருகன் அதை வரவேற்ருன். "வா நாம் இருவரும் விளையாடலாம்!" என்ருன் முருகன். "முதலியார் ரத்தம் வேண்டாம்! நான் தருகிறேன் உனக்கு ஆகாரம்!" என்ருன் முருகன்.

கொசுவும் சந்தோஷமாக அமிருதம் குடித்துக் கொண்டு முருகனுக்குச் சவாரியாக இருந்து வந்தது.

செல்லக் குழந்தை

டிப்டி கலெக்டர் ராமகிருஷ்ணன் மனைவிக்கு எறும்பு என்ருல் பிடிக்காது. கண்டால் நசுக்கி விடுவாள்.

"அம்மா! எறும்பைக் கொல்லலாமா?" என்ருன் குப்பு.

"கடிக்கிற எறும்பைக் கொல்லலாம்" என்று சமாதானம் சொன்னுள் அவன் தாயார். குப்புவுக்கு முன் பிறந்த மூன்று குழந்தைகள் பிறந்து பிறந்து இறந்து போயின. அதனுல் குப்பு ரொம்பச் செல்லமாக வளர்ந்த குழந்தை. குப்பு என்று பெயர் வைத்ததற்குக் காரணம் சொல்லுகிறேன். ஒரு வீட்டில் குழந்தைகள் பிறந்து பிறந்து செத்துப் போனுல், பிறகு தங்களுக்கு வேண்டாம் என்று பிறந்த குழந்தையைக் குப்பையில் போடுகிற மாதிரிப் போட்டு எடுத்துக்கொள்வார்கள். இதை ஒரு சடங்காகச் செய்வார்கள். அப்படிச் செய்தால் யமன் ஏமாந்து போவான், வேண்டாம் என்று தள்ளிவிட்ட குழந்தையிடம் அவன் வரமாட்டான் என்று பெற்ருேர்கள் முன்னுளில் இப்படிச் செய்து வந்தார்கள். அப்படிக் குப்பையில் போட்டு எடுத்த குழந்தைக்குக் 'குப்பன்' என்று பெயரும் வைப்

பார்கள். இப்படித்தான் நம் டிப்டி கலெக்டர் ராம கிருஷ்ணன் குழந்தைக்குக் குப்பு என்று பெயர் வைத் தார்கள்.

கடித்தால் கொல்லலாம் என்று தாயார் சொன்ன தருமத்தைக் குப்பு ஒப்புக் கொண்டு விளையாடப் போய் விட்டான்.

“என் குழந்தைகளை யாரோ கொன்று வருகிறார் கள். போனவர்கள் திரும்பி வருவதில்லை. இதை விசாரியுங்கள்” என்று தாய் எறும்பு தன் துப்பறியும் எறும்புகளை வெளியே அனுப்பிற்று.

பாழியின்று அந்த எறும்புகள் தம்முடைய குல நாற்றத்தை மோந்து கொண்டே இங்குமங்கும் சென் றன. கடைசியில் டிப்டி கலெக்டர் வீட்டில் தான் தம்பிகள் மாண்டார்கள் என்று கண்டு கொண்டன. யார் கொன்றது என்றும் கண்டு கொண்டு விட்டன. எல்லாம் மோந்து மோந்து தெரிந்து கொண்டன. திரும்பிப் போய்த் தாய் எறும்புக்குத் தெரியப் படுத்தின.

“அப்பா! எறும்பைக் கொல்லலாமா?” என்று குப்பு தகப்பனாரைக் கேட்டான். அவனுக்கு மறுபடி யும் சந்தேகம் வந்து விட்டது.

“நீ கொல்லக்கூடாது. சேவகனுக்குச் சொன்னால் அவன் கொன்று விடுவான்” என்றார் அவர்.

“கொன்றால் பாவமில்லையா?” என்றான்.

“சேவகன் கொன்றால் நாம் சொல்லித் தானே கொல்லுகிறான். அவனுக்குப் பாவமில்லை” என்றார்.

“நமக்குப் பாவமா?” என்றான் பையன்.

“நாம் கொல்லவில்லையே! நமக்கு ஏது பாவம்?” என்றார் டிப்டி கலெக்டர்.

"நாம் சொல்லித்தானே—" என்று பையன் என்னவோ சொல்ல ஆரம்பித்தான்.

"சரி, நீ போய் அம்மாவைச் சமையல் ஆச்சா, கேட்டு விட்டுவா" என்று அனுப்பிவிட்டார்.

தாயெறும்பு பக்கத்துப் பாழியிலிருந்த தன் நண்பன் நாகப் பாம்பிடம் அழுதது.

"என் மக்களை இந்தச் சுப்பம்மாள் வதம் செய்தாளே, நீதான் அவளைத் தண்டிக்கவேண்டும்" என்றது.

"சரி, பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பாம்பு புறப்பட்டது.

ராமகிருஷ்ணன் வீட்டுப் புழக்கடையில் ஒரு பொந்தில் பதுங்கியிருந்தது.

"அம்மா! பாம்பு கடித்தால் செத்துப் போவோம் என்கிறானே வேலு; அது உண்மையா?" என்றான் குப்பு.

"செத்துப் போகிற பேச்செல்லாம் யார் உனக்குச் சொன்னது? பாம்பு நம்மைக் கடிக்காது" என்றாள்.

"கடித்தால்?" என்றான் குப்பு.

"அது விஷம். பாம்பு யாரையாவது கடித்தால் செத்துத்தான் போவான். பாம்பண்டை போகலாகாது" என்றாள் சுப்பம்மா.

"அம்மா! நம் வீட்டில் பாம்பு இருக்கிறதாமே!" என்றான் குப்பு.

"யார் உனக்குச் சொன்னது? வேலுவா?" என்றாள்.

"இல்லையம்மா, பக்கத்து வீட்டு சேஷு சொன்னான். அவன் பார்த்தானும்" என்றான் குப்பு.

"சேஷு குறும்புப் பயல்! நீ போய் விளையாடு" என்றாள் சுப்பம்மா.

அன்று ராத்திரி சுப்பம்மா கனவு கண்டாள். தன் ஒரே குழந்தை குப்புவைப் பாம்பு கடித்து விட்டதாகவும், அவன் செத்துப் போனதாகவும் கனக் கண்டாள். "ஓ" என்று கத்திக் கொண்டு எழுந்தாள். "என்ன? என்ன?" என்றார் ராமகிருஷ்ணன்.

"கெட்ட கனவு ஒன்று கண்டேன்" என்று சுப்பம்மா அதைப் புருஷனிடம் சொன்னாள். அடுத்த நாள் காலை எழுந்து கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்து பிரசாதத்துடன் திரும்பிவந்தாள். பகல் முழுதும் பயந்துகொண்டே கழித்தாள். மிக வேதனைப்பட்டாள்.

பதுங்கியிருந்த பாம்பு நல்ல பாம்பு. சுப்பம்மா சங்கடப்பட்டதைப் பார்த்தது. 'மகன் இறந்த வேதனையை இவள் முழுதும் அனுபவித்து விட்டாள். போதும் இந்தப் படிப்பு. தவிர அடுத்த ஜென்மத்தில் இவள் ஒரு தாய் எறும்பாகப் பிறக்கப் போகிறாள். தன் மக்களையும் இழப்பாள்' என்று பாம்பு திரும்பிப்போய் விட்டது.

"எனக்கு அந்தப் பையனைக் கடிக்க மனம் வரவில்லை, அக்கா!" என்று தாய் எறும்பிடம் பாம்பு சொல்லிற்று. காரணத்தையும் சொல்லிற்று.

"அப்படியானால் என் எறும்புகளே போய் ஏதாவது செய்ய வேண்டும். நன்றாகக் கடித்தால்தான் என்னுடைய துக்கம் ஓரளவு தணியும்" என்றது எறும்பு.

தன் க்ஷத்திரியக் கூட்டத்தை அனுப்பிற்று. எறும்புகளில் ஒவ்வொரு காரியத்துக்கு ஒவ்வொரு தனிக் கூட்டம் உண்டு.

"அம்மா! ராத்திரி எறும்பு ரொம்பக் கடித்துவிட்டது" என்றான் குப்பு. குழந்தையின் முகம் நன்றாக வீங்கிப் போயிருந்தது.

"ஐயோ பாவம்!" என்று தேங்காய் எண்ணெய் தடவி, "போகட்டும், நான் கண்ட கனவு இத்துடன் போகட்டும்!" என்று மறுபடியும் கோயிலுக்குப் போய்க் கணேசனுக்குத் தேங்காய் உடைத்தாள்.

அதன் பிறகு சுப்பம்மா எறும்பைக் கொன்ற தில்லை. வெல்லம், நெய்ப் பதார்த்தங்கள் எறும்புக்குச் சிக்காமல் மூடிச் சரியாகப் பத்திரப்படுத்தி வைப்பாள். வீட்டைச் சுத்தமாகவும் வைக்க ஏற்பாடு செய்தாள். எறும்புகளும் வரவில்லை.

கற்றுக் கொண்டுவா

"கொடுப்பதிலே சந்தோஷமா? பொருளை அடைவதிலே சந்தோஷமா?" என்று கேட்டார் ரிஷி.

ஒரு ஏழை ஸ்திரீ எழுந்து பேசினள். "சுவாமி; நான் குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது தான் அதிக மகிழ்ச்சி யடைந்தேன். பசிக்குச் சாப்பிட்ட போது அவ்வளவு மகிழ்ச்சியை நான் காணவில்லை. பிறகு குழந்தையை எடுத்துப் பால் கொடுத்தபோது ஆனந்தம் அடைந்தேன்" என்றாள்.

அடுத்தபடி இன்னொரு பெண்மணி எழுந்து பேசினள். "நான் என் வீட்டில் சமைத்துவிட்டு வீட்டிலுள்ளவர்களுக்கு உணவு பரிமாறினபோது அடைந்த சந்தோஷம் பிறகு நான் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டபோது அடையவில்லை" என்றாள்.

அதன் பிறகு ஒரு செட்டியார் எழுந்தார்.

"சுவாமி! இந்த அம்மையார்களுடைய அனுபவத்தைப் போலவே நானும் உண்மையைக் கண்டேன். வாழ்நாளெல்லாம் நான் சம்பாதித்துத் திரட்டியபோது

திருப்தியோ, சந்தோஷமோ, சுகமோ காணவில்லை. கடைசியாக ஊராருக்குத் தருமம் செய்ய ஆரம்பித்தேன். ஏழைகளுக்குக் கொடுக்க ஆரம்பித்தேன். அவர்கள் என்னைச் சுற்றிக் கொண்டு சந்தோஷப் பட்டார்களே, அப்போதுதான் நான் உண்மையாக மகிழ்ச்சியை அடைந்தேன், ஆனந்தத்தைக் கண்டேன்'' என்றார்.

''இவர்களுடைய அனுபவத்தினால் இன்று ஞானம் அடைந்தோம்'' என்றார் ரிஷி.

* * *

ஈச்சம் பாக்கத்தில் ஒரு பிராமணர் தினமும் அதி காலையில் எழுந்து நியமங்களை முடித்துவிட்டு பிக்ஷா பாத்திரத்தைத் தோளில் மாட்டிக்கொண்டு வேத மந்தி ரங்கள் பாடிக்கொண்டு அக்கிரகாரத்தில் வீடு வீடாகச் செல்வார்.

எல்லாருக்கும் இந்த வைதீகரிடத்தில் மிகப் பிரியம். வீட்டுக்குள் அடி வைப்பதற்கு முன்னமே அரிசி கொண்டு வந்து போடுவார்கள். அவரும் ஆசீர்வதித்து விட்டுச் செல்லுவார். ஏழைகளும் பணக்காரர்களும் ஒரேவிதமாகப் பிக்ஷை போடுவார்கள். அவரும் ஒரே விதமாக ஆசீர்வதிப்பார். நான்கு ஏழைக் குழந்தை களுக்கு அன்னம் போட்டுத் தானும் சாப்பிட்டு, அந்தக் குழந்தைகளுக்குப் படிப்பும் சொல்லிக் கொடுப்பார்.

பாட்ராச்சாரியார் மனைவி தன் செல்வக் குழந்தை கேசவனைக் கொண்டு பிக்ஷை போடச் சொல்வாள். தானே போட்டால் அந்தப் புண்ணியம் தன்னோடு போகும். குழந்தைக்கு அந்தப் புண்ணியம் சேரவேண் டும் என்று குழந்தையைக் கொண்டு போடச் சொல்லு வாள். போட்டபின் ''போட்டாயா?'' என்று கேட்டுக் கேசவனை முத்தமிடுவாள்.

"அம்மா! இன்று நான் உபாதானம் போடு கிறேன்" என்று கேசவனுடைய தங்கை சிறு குழந்தை லக்ஷ்மியும் கேட்டு ஒவ்வொரு நாள் அவளும் போடுவாள்.

பக்கத்தில் கேசவன் நின்று கொண்டு, "போடு, கீழே சிந்தாமல் போடு" என்று சொல்லிக் கொண்டு நிற்பான்.

இந்தக் குழந்தைகள் ஏதேனும் தின்பண்டம் சாப் பிடும்போது வேறு குழந்தைகள் யாரேனும் பக்கத்தில் நின்றால் முதலில் அவர்களுக்குக் கொஞ்சம் கொடுத்து விட்டுப் பிறகு சாப்பிடுவார்கள். இப்படியே குழந்தை கள் நல்லமுறையில் வளர்க்கப்பட்டு வந்தன.

அடுத்தவீட்டில் சாரதாம்பாள்-ராகவய்யர் மனைவி-கொஞ்சம் பணக்காரர்கள் தான்—அந்த அம்மையும் தன் குழந்தையைக் கொண்டே பிராமணருக்கு உபாதானம் போடுவாள். காரணம் தெரியுமா?

உபாதானம் போடும்போது இரு கைகளிலும் நிறையக் கொண்டு வந்து போடவேண்டும் என்பது சாஸ்திரம். சாரதாம்பாள் தன் கையால் உபாதானம் போட்டால் அதிகமாக அரிசி செலவழியும், குழந்தை போட்டால் சாஸ்திரத்துக்கும் சரியாக இருக்கும், அரிசி யும் அதிகமாகச் செலவழியாது என்று அந்த அம்மையார் அடுத்த வீட்டு வழக்கத்தைத் தானும் அனுசரித்தாள்.

* * *

யமன்: "சாரதாம்பாளே, நீ ஏன் குழந்தையைக் கொண்டு உபாதானம் போட வைத்தாய்?"

சாரதாம்பாள்: "பக்கத்து வீட்டுப் பட்ராச்சாரியார் சம்சாரமும் அப்படித்தானே செய்து வந்தாள்? நானும் அப்படியே செய்தேன்."

யமன் சிரித்தான்: "போ, மறுபடியும் சரியாகப் பிச்சை போடக் கற்றுக்கொண்டு பிறகு இங்கேவா!" என்று பூலோகத்துக்குத் திருப்பி அனுப்பி விட்டான்.

குருவியே கெட்டி

"சூரியன் வந்து விட்டானே இல்லையோ, நட்சத்திரங்கள் எல்லாம் பயந்து போய் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கின்றன" என்றாள் கமலி.

"இல்லை கமலி! சூரியனுடைய வெளிச்சத்தில் நட்சத்திரங்கள் நம் கண்ணுக்கு மறைந்து போச்சு" என்றான் ராமு.

"அது தப்பு. எனக்கு அத்தை சொன்னதுதான் சரி" என்றாள் கமலி.

"போ, போ! அத்தை உனக்குக் கதை சொன்னாள். வாத்தியார் எனக்குச் சொன்னதுதான் நிஜம்" என்றான் ராமன்.

"ஆனால் அத்தை பொய் சொன்னாளா?" என்றாள் கமலி.

"பொய் சொல்லவில்லை, கதை சொன்னாள்" என்றான் ராமு.

"கதை என்றால் என்ன?" என்றாள் கமலி.

"கதை என்றால் 'ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு ஒரு பெண்' என்றெல்லாம் சொல்லுகிறார்களே அது."

"ஆனால் அதுவெல்லாம் பொய்யா?" என்றாள் கமலி.

"இல்லை, கமலி! பொய் என்றால் மோசம். கதையில் மோசம் இல்லை, வேடிக்கை. கேட்பதற்கு நன்றாக இருக்கும்" என்றான் ராமு.

"ஆனால் எனக்கு ஒரு கதை சொல்லு. பொய் சொல்லக்கூடாது, தெரியுமா?"

"ஒரு ஊரிலே ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் கமலி" என்று ஆரம்பித்தான்.

"பொய்! ஏமாற்றுகிறாய். உனக்குக் கதை சொல்லத்தெரியாது. நான் அத்தையிடம் போகிறேன்" என்று கமலி ஓடிப்போகப் போனாள்.

"இல்லை. இல்லை, நிஜமான கதை சொல்லு கிறேன் நில்!" என்றான் ராமு.

"ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு ஒரு மகன். அவன் குதிரைமேல் ஏறி ஊருக்குள் சென்றான். பக்கத்தில் ஒரு சேவகனும் போனான்."

"அப்புறம்?"

"அங்கே ஒரு குப்பைத் தொட்டி. அதன்மேல் ஒரு குருவி."

"ஊம்."

"அந்தக் குருவி தலையில் ஒரு குல்லாய்."

"குருவிக்குக் குல்லாய் ஏது?" என்றாள் கமலி.

"குப்பைத் தொட்டியில் ஒரு கிழிந்த துணி இருந்தது. அதைக் கொண்டு போய்ச் சின்னக் குல்லாய் தைத்துக் கொண்டது."

"ஊம், அப்புறம்?"

"குருவியைப்பார்த்தான் ராஜகுமாரன். சிரித்தான்."

"ஏன் சிரிக்கிறாய்"

"எனக்குண்டு குல்லா
உனக்குண்டோ?"

என்று குருவி தன் தலையை ஆட்டிக் கொண்டு பாடிற்று."

"அப்புறம்?"

"ராஜகுமாரனுக்குக் கோபம் வந்து விட்டது. 'பிடுங்கிக் கொள் அந்தக் குருவியின் குல்லாயை' என்றான். சேவகன் போய்க் குருவியின் குல்லாயைப் பிடுங்கிக் கொண்டு ராஜகுமாரனிடம் கொடுத்தான்.

"ஐயோ பாவம்!"

"தனக்கில்லை யென்றிவன்
குருவியின் குல்லாயைப்
பிடுங்கிக் கொண்டான்
சீ, சீ ராஜகுமாரா
உனக்கிது ஆகுமோ?"

என்றது குருவி.

"திருப்பிக்கொடுத்துவிடு" என்றான் ராஜகுமாரன்.

சேவகன் குருவிக்கு அதன் குல்லாயைக் கொடுத்து விட்டான்.

"எனக்கல்லவோ பயந்தான்;
குல்லாயைக் கொடுத்து விட்டான்,
இவன் என்ன ராஜாவாம்?"

என்று சொல்லிக் கொண்டு குருவி பறந்து போயிற்று.

"ராஜகுமாரனுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. குதிரையை ஓட்டினான், குருவியைப் பிடிக்க. அது மேலே பறந்து போயிற்று.

"சேவகன் ஓடிப் போய்க் குதிரையைப் பிடித்துக் கொண்டான். இல்லாவிட்டால் ராஜகுமாரன் கீழே விழுந்துவிட்டிருப்பான்."

"குருவியே கெட்டி!" என்றாள் கமலி.

"இந்த ராஜகுமாரனை நீ கலியாணம் பண்ணிக் கொள்வாயா?" என்றான் ராமு.

"மாட்டேன்!" என்றாள் கமலி.

அம்மன் அருள்

காடையம்பட்டி ஜமீன்தார் மாகாளி தாசன் என்பவர் உடலைத் துறந்து விண்ணுலகம் எய்தினார். அங்கே காளியம்மன் பாதத்தில் விழுந்தார்.

"அம்மனே! நான் மகா பாபங்கள் செய்து விட்டேன். கோபமும் துவேஷமும் என்னை ஏமாற்றி விட்டன! நான் பாபக் குழியில் விழுந்தேன். என்னுடைய வம்சமாவது நல் வழியில் வாழும்படி அருள வேண்டும், தாயே! ஈசுவரி!" என்று அழுதார்.

"அப்படியே!" என்றாள் தேவி காளி சிரித்துக் கொண்டு.

"நான் இவ்விடமே இருக்கலாமா?" என்று கேட்டுக் கொண்டார்.

"நீ சில நாட்கள் உன் பேரன்மார் வீட்டில் நாயாக வளர்ந்து யோக்கியமாக இருந்துவிட்டுப் பிறகு இவ்விடம் வரலாம். உன்னுடைய உள்ளம் அதனால் சுத்த மடையும், போ" என்றாள்.

ஜமீன்தாரின் முன்சரித்திரத்தைச் சொல்லுகிறேன். துக்கமும் பயமும் உண்டாக்கும் கதைகள் படிப்போர் மனத்தைச் சுத்தமாக்கும். புளியும் சாம்பலும் போட்டுச் செப்புச் சொம்பைச் சுத்தி செய்வதுபோல்.

* * *

காடையம்பட்டி ஜமீன்தார் தம்முடைய ஒரே குழந்தையும் தம் மகளுமான வள்ளியை ரெட்டியூர் ராஜப்பனுக்குக் கொடுத்து விவாகம் செய்தார். அந்தக் குடும்பம் பரம்பரை விரோதிகளாயினும் ஏதோ ஒரு காரணத்தினால் இப்படிச் செய்தார்.

பழைய விரோதம் மறுபடியும் துளிர்த்து முற்றிக் கொண்டு வந்தது. ராஜப்பனுடைய கர்வம் அதிக மாகப் போய்விட்டது.

ஒருநாள் பத்து ஆட்களை விட்டு ராஜப்பனை நன்ருகப் புடைத்துவிட்டு வர உத்தர விட்டார் ஜமீன்தார். ஜமீன்தார் சொல்லின்படி அவர்கள் சென்ருர்கள்.

அதற்குள் ராஜப்பனுடைய ஆட்களும் கும்பல் கூடி யிருந்தார்கள். யுத்தம் பெரிதாகப் போய்விட்டது. ஜமீன்தாரே நேராகச் சென்று தம் ஆட்களை உற்சாகப் படுத்திச் சண்டை நடத்தினர். ராஜப்பனுடைய இரண்டு கால்களும் ஒடிந்து அவன் கீழே தரையில் விழுந்து கிடந்தான். யுத்தம் முடிந்தது. ஜமீன்தார் வெற்றியுடன் வீடு திரும்பினர்.

மகள் தகப்பன் வீட்டுக்கு வந்துவிட்டாள். ராஜப்பன் ஆஸ்பத்திரியில் நான்கு மாதங்கள் இருந்தான். ஜமீன்தாரே செலவுக்குக் கொடுத்தார். எப்படியாயினும் மாப்பிள்ளை தானே. காயங்களை சொஸ்தப்படுத்த முடியவில்லை. இரண்டு கால்களையும் வெட்டி விட்டால்தான் உயிர் தப்பும் என்ருர்கள் ஆஸ்பத்திரியில்.

“உயிர் இருந்தால் நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டிருக்கலாம். விதவையான பின் என்ன வாழ்க்கை?” என்று மகள் அழுதாள். சஸ்திர வைத்தியர்கள் கால்களை வெட்டி விட்டு சொஸ்தப் படுத்தினர்கள். ராஜப்பன் பிழைத்தான்.

* * *

பகை மறந்து போயிற்று.

“அந்த ஆட்கள் அவ்வளவு பலமாகத் தாக்கி யிருக்கலாகாது” என்ருர் ஜமீன்தார்.

"எதிர்க் கட்சிப் படை நம்மை பலமாகத் தாக்கிய போது நாம் சும்மா இருக்க முடியுமா?" என்றான் காளியப்பன். அவன்தான் ஜமீன்தாரின் முக்கியஸ்தன். ராஜப்பனும் பேச்சில் கலந்து கொண்டான்.

"மாமா! நீங்களே நேரில் வந்து 'அடி', 'நொறுக்கு' என்று ஆர்ப்பாட்டம் செய்தீர்களே!" என்றான்.

"நடந்தது நடந்து போயிற்று. இப்போது இந்த வீட்டிலேயே இரு. சும்மா இரு. தண்டச் சோறு தின்று கொண்டிரு" என்றார் ஜமீன்தார்.

மகளுக்குக் கோபம் வந்து விட்டது.

"இப்படிப் பேசாதீர்கள்! உங்கள் சோறு எங்களுக்கு வேண்டாம். நான் கூலி வேலை செய்து என் வாழ்க்கையை நடத்துகிறேன்" என்றாள்.

ஜமீன்தாருடைய மகள் கூலிவேலை செய்தால் ஊரார் நகைப்பார்கள் அல்லவா? ஆனபடியினால் ஜமீன்தார் தம் நடத்தையை மாற்றிக்கொண்டார். மாப்பிள்ளையைக் கொஞ்ச நாட்கள் கவுரவமாகப் பார்த்து வந்தார். மகளுக்குக் கோபம் வராமல் நடந்து கொண்டார்.

ஆனால் இது எவ்வளவு நாள் சாத்தியம்? ஜமீன்தார் கொடியவர்.

"இந்த மாப்பிள்ளையை எப்படியாவது தீர்த்து விடுவது" என்று முடிவு செய்தார். மகளிடம் சொல்லப் பயந்தார். ஆனாலும் அவளுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. வீட்டில் சமையற்காரன் சொல்லி விட்டான்.

"ஆமாம், தாயே, ராஜப்பனுக்கு விஷம் போட்டுப் பாயசம் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்" என்று ரகசியமாக வள்ளியம்மாளிடம் அவன் உண்மையைச் சொன்னான்.

"ஐயோ! என்று கதறினாள்.

"என்னை விதவையாக்கவா அப்பா ஏற்பாடு செய்திருக்கிறார்!" என்று அழுது கொண்டு இன்னது செய்வது என்று தெரியாமல் அம்மன் கோயிலுக்குப் போய், "ஈசுவரி! என்னைக் காப்பாற்று!" என்று அழுதாள். ஈசுவரியினுடைய திட்டம் ஈசுவரிக்கு அல்லவோ தெரியும்.

ஒரு நாள் ஜமீன்தாரே திடீர் என்று இறந்தார். விஷம் தவறான பாத்திரத்தில் கலந்து போயிற்று! இரண்டு நாட்கள் வயிற்று வலியும் பொறுக்க முடியாத உபத்திரவமும் அனுபவித்து, "நான் மகா பாபி, சண்டாளன், காளியம்மா என்னைக் காப்பாற்றுவாய்" என்று சொல்லி விட்டு உயிர் நீத்தார்.

பிறகு வள்ளியம்மாளும் முடவன் ராஜப்பனும் ஜமீன்தாருடைய நிலங்களும் சொத்தும் அடைந்து சுகமாக அனுபவித்தார்கள்.

அழகான மூன்று குழந்தைகளும் பிறந்தன. பெரிய பையன் பெயர் சின்னராஜா. தங்கள் முன்னோர்களுடைய சரித்திரம் குழந்தைகளுக்குத் தெரியாமலே வளர்த்தார்கள். வயதான பின் சிலர் சொல்லித் தெரிந்து கொண்டு இப்படியும் உண்டா என்று சிரித்தார்கள்.

"முன்னோர்கள் குணம் வம்ச பரம்பரை என்று சொல்லுகிறார்களே!" என்று கேட்டான் சின்ன ராஜா. அவனுக்கு இப்போது பன்னிரண்டு வயது.

தாயார் வள்ளி பதில் சொன்னாள்; "இல்லை, என் கண்ணே! அம்மன் அருள் இருந்தால் தகப்பனை விட மகன், அவனை விடப் பேரன் எல்லாரும் நல்லவர்களாக இருப்பார்கள்" என்றாள்.

"நான் நல்லவனாக இருப்பேன்!" என்றான் சின்ன ராஜா.

"சரி! வயலுக்குப் போ! அங்கே எப்படி ஏர் உழுகிறார்கள், என்று பார்த்து விட்டுவா!" என்றான் ராஜப்பன்.

"கருப்பா, வா!" என்றான் சின்ன ராஜா.

'கருப்பன்' என்றதும் அமாவாசைக் கருப்பான ஒரு அழகிய நாய் வாலை ஆட்டிக்கொண்டு தோட்டத்திலிருந்து சின்ன ராஜாவிடம் வந்தது.

"போகலாம் வா! வயலுக்குப் போகலாம்" என்றான் பையன்.

கருப்பன் முன்னால் ஓடிற்று. சின்னராஜா பின்னால் சென்றான். நாய் யார் தெரியுமா? ஆனால் அது நாய்க்கும் தெரியாது. யாருக்கும் தெரியாது.

இப்போது கதை ஆரம்பத்தைத் திரும்பப் படியுங்கள்.

தேகப்பயிற்சி வாத்தியார்

பாலசந்திரனுக்கு வெல்லம் ரொம்ப இஷ்டம். வெல்லம் சேர்த்த பண்டங்கள் கிடைத்தால் விட மாட்டான்.

வைத்தியர்கள் அவன் தேக நிலையைப் பார்த்து, "இவன் உடம்பு கெட்டுப்போய் விட்டது. இவன் சர்க்கரைப் பண்டங்கள் அதிகமாகச் சாப்பிடக் கூடாது" என்றார்கள்.

அவனுக்கோ இந்தப் பத்தியம் முடியவில்லை. எப்படியோ சர்க்கரைப் பண்டங்களைத் தேடிச் சம்பாதித்துச் சாப்பிட்டு விடுவான். அவன் பெற்றோர்களால் இதைத் தடுக்க முடியவில்லை.

"இதற்கு என்ன செய்வது? என் அருமைக் குழந்தையை இழந்துவிடுவேனே!" என்று தாய் அழுதாள்.

தகப்பனுக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. கும்பகோணம் சென்று சங்கராச்சாரியாரைக் கேட்டான்.

அவர் சொன்னார்: "பையனைக் கொண்டுபோய் ஒரு மிட்டாய்க் கடையில் விட்டு விடு. எவ்வளவு வேணுமோ அவ்வளவு சாப்பிடட்டும்."

இவ்வாறு சொன்னது பையனுடைய தகப்பனுருக்கு ஆச்சரியமாக இருந்தது.

மனைவியிடம் யோசித்தான்.

"எப்படியாயினும் அவர் நமக்குக் குருவாயிற்று. ஆனபடியால் அவர் சொன்னபடியே செய்வோம். நம்ம சினேகிதர் ராம்லால் இருக்கிறாரே அவரைக் கேட்டு அவர் கடையில் பையனைச் சேர்த்து விடலாம்" என்றாள் பையனுடைய தாய்.

பாலசந்திரனை ராம்லாலின் மிட்டாய்க் கடையில் வேலைக்காரனாகச் சேர்த்து விட்டார்கள். "சம்பளம் கிடையாது. எவ்வளவு வேண்டுமானாலும் எந்த மிட்டாய் வேண்டுமானாலும் எடுத்துச் சாப்பிடலாம்" என்று கடைச் சொந்தக்காரர் சொல்லி விட்டார்.

பாலசந்திரனுக்கு வெகு சந்தோஷம். நான்கு வேளையும் வயிறு நிறையச் சர்க்கரைப் பண்டங்கள் தின்றான். வேலையில் சேர்ந்த ஐந்தாவது நாள் பையனுக்குப் பேதி எடுத்தது. அன்ன ஆகாரம் வேண்டியிருக்கவில்லை. மிட்டாயை நினைத்தால் அவனுக்கு வயிறு கிளறும். மூன்று நாட்கள் அவஸ்தைப்பட்டான். பிறகு எப்படியோ நோய் நின்றது. ஆனால் அது முதல் பாலசந்திரனுக்கு வெல்லப் பண்டத்தை நினைத்

தால் வாந்திக்கு வரும். முற்றிலும் வெறுத்து நீக்கி விட்டான்.

உடம்பு சரியாகப் போய்விட்டது. "மிட்டாய்க் கடையில் எனக்கு வேலை வேண்டாம், அப்பா!" என்று தகப்பனைக் கேட்டுக் கொண்டான்.

பாலசந்திரனை அழைத்துக் கொண்டு பெற்றோர் இருவரும் கும்பகோணம் சென்று ஆசாரியர்முன் தரையில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள்.

"பையனுக்கு எல்லாம் சரியாகப் போய் விட்டது. உங்கள் ஆசீர்வாதம்!" என்றார்கள்.

ஆசாரிய சுவாமிகள் பாலசந்திரனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

இப்போது பாலசந்திரன் மதுரைக் கல்லூரியில் தேகப்பயிற்சி வாத்தியார். கொட்டாப்புளியைப் போல் இருக்கிறான். மாணவர்களும் அவனிடம் பிரியமாக இருக்கிறார்கள். யாரையும் திட்டமாட்டான். எதையும் அவனே செய்து காண்பிப்பான்.

பாம்பைப் பிடித்த பூனை

ஒரு பாம்புப் பாழி. அதற்குள் ஒரு சர்ப்பம். எப்போதும் சண்டை போட்டுக் கொண்டிருந்த ஒரு குரங்கும் பூனையும் எப்படியோ அன்று ஒன்று சேர்ந்து காத்திருந்து பாம்பைப் பிடித்து விட்டன. பூனை பாய்ந்து கழுத்தை இறுகப் பிடித்துவிட்டது. குரங்கு வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. பாம்பு தப்பிப் போகப் பார்த்தது. முடியவில்லை.

பூனையும் குரங்கும் ஒன்று கழுத்தையும் ஒன்று வாலையும் இரண்டும் விடாமல் வெகு நேரம் பிடித்துக் கொண்டே யிருந்தன.

பிறகு பூனைக்குப் பசிக்க ஆரம்பித்தது. குரங்குக்கும் அப்படியே. பாம்பை விட்டால் கடித்துவிடும். ஆனபடியால் பயந்து குரங்கும் பூனையும் பாம்பைவிட்டுப் போக முடியாமலும் இன்னது செய்வது என்று தோன்ருமலும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டு பாம்பைப் பிடித்துக் கொண்டு பாழியண்டையே காலம் கழித்தன.

அந்தப் பாம்புக்கு ஒரு வரம் உண்டு. "உனக்கு நாற்கால் பிராணிகளால் மரணமில்லை" என்று வரம் பெற்றிருந்தது. யாரோ ஒரு ரிஷி அந்த வரத்தைத் தன் மகனை அந்தச் சர்ப்பத்துக்குத் தந்திருந்தார். இது அந்தப் பூனைக்குத் தெரியும்; குரங்குக்கும் தெரியும். ரிஷி எச்சரிக்கை செய்திருந்தார், "என் பாம்பைக் கொல்லப் பார்த்தீர்களானல் நீங்களே சாவீர்கள்" என்று அந்த ரிஷி சொல்லிவிட்டிருந்தார்.

பசியில் செத்துப்போகும் போல் இருந்தது குரங்கு. "ஏய், பூனையே! நீ பிடித்துக் கொண்டிரு. நான் ஒரே ஓட்டமாக ஓடிக் கொஞ்சம் ஏதேனும் சாப்பிட்டு வருகிறேன்" என்றது குரங்கு.

"முடியாது! நீ விட்டு விட்டால் உடனே பாம்பு என்னை வாலால் வளைத்துக் கொண்டு நசுக்கிவிடும்" என்றது பூனை.

கொஞ்ச நேரம் கழித்துப் பூனை, "நான் கொஞ்ச தூரம் சென்று ஒரு எலியைப் பிடித்துக் கொஞ்சம் பசியைத் தீர்த்துக் கொண்டு வருகிறேன். நீ பாம்பின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிரு" என்றது.

"நன்ருகச் சொன்னுய்! நீ கழுத்தை விட்டதும் பாம்பு உடனே வாலைப் பிடித்துக் கொண்டிருக்கும் என்னைத்தான் கடித்துவிடும். இருவரும் ஒரேயடியாக

விட்டு விட்டு ஓடிப் போவோம். என்ன சொல்லு கிருய்?'' என்று கேட்டது குரங்கு.

''என்பேரில்தான் பாம்புக்குக் கோபம். என்னைத் துரத்திக் கொண்டு வந்து விஷப்பல்லால் கடித்து என்னை முடித்துவிடும்'' என்றது பூனே.

''மிகக் கஷ்டப்பட்டுச் சர்ப்பத்தைப் பிடித்தோம். இப்போது விடுவதற்கும் இல்லே. பிடித்துக் கொண் டிருக்கவும் முடியவில்லேயே! இந்த விஷப் பாம்புகளே ஏன் கடவுள் சிருஷ்டித்தாரோ!'' என்றது குரங்கு.

''பூனேகள் இருக்கப் பாம்பு என்னத்துக்கு?'' என்றது பூனேயும்.

ஒரு எலி பக்கத்தில் ஓடிற்று. உடனே பூனே ஆவேசம் மேலிட்டு எல்லாவற்றையும் மறந்துவிட்டது. எலியைக் கொல்லப் பாய்ந்தது. உடனே பாம்பு குரங் கைக் கடித்துவிட்டுப் பாழிக்குள் புகுந்து கொண்டு விட்டது.

குரங்குக்கு விஷம் ஏறிற்று. பூனேயின் மேல் அது ரோஷம் கொண்டு பாய்ந்து அதைக் கடித்தும் கீறியும் கிழித்தும் அங்கேயே கொன்றுவிட்டுப் பிரக்ஞை யின்றித் தரையில் படுத்தது.

எலியைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லே. அது பூனேயின் வாயிலேயே உயிர் நீத்துச் சுவர்க்கம் எய்திற்று. மிஞ்சியது பாம்பு மட்டும்.

இந்தக் கதை குழந்தைகளுக்கு எளிதில் விளங்கும். பெரியோர்கள் கொஞ்சம் கஷ்டப்படுவார்கள். இது ஜெர்மனி பிரச்னேயா என்று கேட்பார்கள்.

குழந்தைகளுக்குப் புரியும்

"தேவலோகத்துப் பாஷை சமஸ்கிருதம்" என்றார் சாஸ்திரியார்.

"ஆண்டவன் பேசுவது தமிழ்தான்" என்றார்கள் சிலர்.

"பகவான் பேசும் மொழி அனைவருக்கும் பொதுவான ஹிந்தி மொழி" என்றார்கள் வடக்கத்தியார்.

சில வங்காளியர்கள் இதைக் கேட்டுச் சிரித்தார்கள்.

மராட்டி வீரர்கள் "அல்ல!" என்றார்கள்; "எங்கள் மராட்டி பாஷையே பகவான் சிவ்ஜி பாஷை" என்றார்கள்.

"பரமண்டலத்துப் பாஷை, ஆங்கிலம் அல்லவோ" என்றார் ஆங்கிலேயப் பாதிரி.

"ஒரு நாளும் அல்ல; யாரும் பேசாத லத்தீன் மொழியே மேலிடத்துப் பாஷை" என்றார் மற்றொரு பாதிரியார்.

"உங்களுக்கு உண்மை தெரியவில்லை. அரபி பாஷையல்லவோ ஆண்டவன் தினசரி பேசுவது. சில சமயந்தான் பிறமொழிகள் பேசுவான். குர் ஆன் எந்தப் பாஷையில் அமைந்திருக்கிறது? அதிலிருந்து உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று அரபி மௌல்வியார் வாதாடினார்.

இன்னும் பலர் இந்த விவாதத்தில் சேர்ந்து கொண்டனர். பெரிய சண்டை நடந்தது. எல்லாரும் போய் நேரில் பார்த்துவிட்டு வரலாம் என்று தீர்மானித்துச் சென்றார்கள்.

திரைக்குப் பின் பகவான் பேசினான்.

கீழே இறங்கும்போது ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டே இறங்கினார்கள்.

"பார்த்தாயா தம்பி! கடவுள் பேசினது தமிழ்!" என்றார்கள் தமிழர். "எவ்வளவு சுத்தமாக வட மொழியே கலவாமல் பேசினான் உலகையாளும் பெரு மான்!" என்று சந்தோஷமாகச் சொன்னார்கள்.

"பார்த்தாயா! பகவான் பேசியபாஷை, நம்முடைய ஹிந்தி. இந்த மூடர்களுக்கு இதிலிருந்தாவது அறிவு உண்டாகுமா!" என்று பேசிக் கொண்டார்கள் வடக்கத்தியார்கள்.

"ஆஹா! ஈசுவரன் வாயிலிருந்து வந்த மராட்டி யைக் கேட்டாயா?" என்றான் ஒருவன்.

"வங்காளம் அல்லவா ஆண்டவன் பேசியது? அது தான் தேவ பாஷை!" என்று வங்காளியர் சொன்னர்.

இவ்வாறே அராபியரும் ஆங்கிலேயரும் அமெரிக் கரும் பிரஞ்சுக்காரர்களும் இன்னும் எல்லாரும் தத்தம் மொழியே தேவனுடைய மொழி என்று பேசிக் கொண்டு குதூகலத்துடன் சென்றார்கள்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பற வைகள் தமக்குள் பேசிக் கொண்டன:

"இந்த மனிதக் கூட்டத்தின் மதியீனத்தைப் பார்த்தீர்களா! ஆண்டவன் நம்முடைய பறவை பாஷையல்லவோ பேசினான்?" என்றன.

"ஆண்டவனுடைய சிறகுகள் திரை வழியாகக் கொஞ்சம் தெரிந்ததே! அது எவ்வளவு அழகு!" என் றது ஒரு கிளி.

"ஈசுவரனுடைய தும்பிக்கையைப் பார்த்தாயா?" என்று கேட்டது ஒரு யானை, தன் மனைவியைப் பார்த்து.

“திரையினூடே எனக்கு அவனுடைய அழகிய தந்தங்கள் தான் தெரிந்தன!” என்றது பெண் யானை.

“ஆஹா! என்ன மௌன சுவரூபி!” என்றார் ஒரு முனிவர்.

“இறைவனுடைய இந்தக் கானத்தைக் கேட்ட பின் வேறு ஒரு சங்கீதமும் வேண்டாம்” என்றார் ஒரு சங்கீத வித்துவான்.

“பலருக்குப் பலவேறு உருவங்களாகத் தோன்றும் இந்தப் பொருள் பொருளாகாது. அது பொய்!” என்றார் நாஸ்திகர்.

“பொய்யல்ல. மாயை. நமக்கு விளங்காத ஒரு பொருள்; அனைத்தையும் கடந்த பொருள். அதைத் தமிழர் கடவுள் என்பார்கள். அதற்குத் திணையும் இல்லை, பாலுமில்லை” என்றார் ஒரு தமிழ் நாவலர், நாஸ்திகருக்கு.

“இங்கே நாம் வாதித்துக் கூச்சல் போடலாகாது. கடற்கரைக்குப் போய்ப்பேசுவோம்” என்றார் நாஸ்திகர்.

“இதை ஒரு கதையாகக் குழந்தைகளுக்குச் சொல்லும்” என்றார் விநாயகர்.

“குழந்தைகளுக்குப் புரியுமா?” என்றேன்.

“பெரியவர்களுக்குத்தான் புரியாது. குழந்தைகளுக்குப் புரியும்” என்றார் கணேசர்.

“சரி” என்றேன்.

வண்டி ஓட்டிய தெய்வம்

மனிதனுக அவதரித்த பகவான் கிருஷ்ணன் அப்போது எண்பது வயதுக் கிழவன். கோல் ஊன்றிக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான். இது எந்தப் புராணத்திலும் இல்லை. புதுக் கதையேதான்.

வழியில் ஒரு ஜட்கா வண்டிக்காரன் குதிரை இடக்குச் செய்து கொண்டிருந்தபடியால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

கண்ணன், "அப்பனே, குதிரையை அடிக்காதே. கடிவாள வாரை அப்படி இழுக்காதே. லகுவாக விட்டுக் குதிரையைத் தட்டிக் கொடு" என்ருன்.

வண்டிக்காரன், "கிழவா! நீ சும்மா ஓரமாக நடந்து போ! குதிரை சமாச்சாரம் உனக்கென்ன தெரியும்?" என்ருன்.

"பார்த்தீங்களா இந்தக் கிழவனை? எனக்குக் கற்றுக் கொடுக்கிருன், குதிரை ஓட்ட" என்ருன் வண்டிக்காரன்.

வண்டிக்குள் இருந்தவர்கள் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

"வண்டிக்காரா! அது யார் உனக்குத் தெரியவில்லையா?" என்றது ஒரு பெரிய ஈ. குதிரை கழுத்தை விட்டு விட்டு வண்டிக்காரன் காதில் உட்கார்ந்து கொண்டு அது மெதுவாகப் பேசிற்று.

"யாராஞல் என்ன!" என்ருன் குதிரையை அடித்துக் கொண்டே. வண்டியில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் இதைச் சொன்னதாக எண்ணி அவன் இப்படிச் சொன்னுன்.

"மடையா! அருச்சுனனுக்குத் தேரோட்டியவன், இவனுக்குக் குதிரை விஷயம் தெரியாது என்கிருயே நீ!" என்று கூறியது ஈ.

"கிழவன் அருச்சுனன் குதிரையை ஓட்டியிருக்கலாம். இந்தக் குதிரை சமாச்சாரம் வேறு" என்ருன் வண்டிக்காரன். ஈ சிரித்தது. குதிரையும் ஒரு சிரிப்புச் சிரித்தது. குதிரைக்குத் தெரிந்து விட்டது, அங்கே

கோல் ஊன்றி வந்தது பகவான் கண்ணன் என்று. அதன் முரட்டுத்தனம் மறைந்து போயிற்று. எழுந்து மெதுவாக வண்டியை இழுத்துச் செல்ல ஆரம்பித்து விட்டது.

இது தன்னுடைய சாட்டையின் சக்தி என்று வண்டிக்காரன் எண்ணினன். கண்ணனுடைய பிரபாவம் அவனுக்கு எப்படித் தெரியும், பாவம்? குதிரைக்கும் ஈக்கும் பசுக்களுக்கும் கன்றுகளுக்கு மல்லவோ கண்ணன் தரிசனம் தருகிருன். தெய்வமே கதி என்று கவலை ஏதும் இல்லாமல் வாழ்க்கை நடத்தும் பறவைகளுக்கும் பசுக்களுக்கும், ஆயிரம் ஏற்பாடுகள் செய்துகொண்டு மிக முன் ஜாக்கிரதையாக உலக வாழ்க்கை நடத்தும் நமக்கும் உள்ள வித்தியாசம் இதுவே.

பூசனிக் கொடி

புதுப்பட்டி ஈசுவரன் கோயிலண்டை ஒரு தென்னந் தோப்பு. அதற்கப்பால் ஒரு குப்பை மேடு, குப்பை மேட்டில் ஒரு பூசனிக்கொடி நன்ருக வளர்ந்து படர்ந்து வந்தது.

ஒரு நாள் பூசனிக் கொடிக்கும் தென்னமரம் ஒன்றுக்கும் சம்பாஷணை நடந்தது. முதலில் அன்போடு நடந்தது. பிறகு பெருமை பேசிக்கொள்ள ஆரம்பித்தன. பேச்சு வேகமாகப் போச்சு.

“தடியனுட்டம் ஓங்கி வளர்ந்திருக்கிருய். அதற்காக இவ்வளவு பேச வேண்டியதில்லை” என்றது பூசனிக் கொடி.

தென் மொழிகளின் புத்தக டிரஸ்டு ஆதரவில்
பதிப்பிக்கப் பெற்றது.

Wrapper printed at Shanti Press, Madras-1